# உதயன்

சுடர் 30 | கதிர் 311 | வள்ளுவர் ஆண்டு 2046 | புரட்டாதி 16, சனிக்கிழமை 03.10.2015



ஜாதிக சம்பத

இன்றைய சுப்பர் பரிசு

ரூ.6,064,845/=

ஜாதிக சம்பதவை அதிகமதிகமாக கொள்வனவு செய்யுங்கள்

அதிர்ஷ்டத்தின் ஒரே பெயர் NLB


# வெளிநாட்டுச் சட்டவாளரை இங்கு அனுமதிக்கமுடியாது

## இலங்கை அரசமைப்புக்கு உட்பட்டே விசாரணை என ஜனாதிபதி மைத்திரி நியூயோர்க்கில் தெரிவிப்பு



கொழும்பு, ஒக்.3

போர்க் குற்றங்கள் மற்றும் மனிதாபிமானச் சட்ட மீறல்கள் தொடர்பிலான அனைத்து நீதிமன்ற விசாரணைகளும் அரசியல் சாசனத்துக்கு உட்பட்ட வகையிலேயே அமையும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இலங்கை நீதிமன்றங்களில் வெளிநாட்டுச் சட்டவாளர்கள் கடமையாற்ற அனுமதிக்கமுடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவின் 'நியூயோர்க் ரைம்ஸ்' பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- பக்கம் 24

# குழந்தைகளின் பாதுகாப்புக்காக விசேட சாதனம்

கொழும்பு, ஒக்.3

குழந்தைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் விசேட தொலைபேசி சாதனம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட இருப்பதாக தொலைத் தொடர்பு அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அத்தோடு இந்தச் சாதனம் மூலம் குழந்தைகள் எங்கு இருக்கின்றார்கள் என்பதைச் சரியாக அறிந்து பக்கம் 24

# வலி.வடக்கில் ஏன் இன்னமும் காணிகள் விடுவிப்பு இல்லை?

*கிராம சேவகரிடம் கேட்டார் சம்பந்தன்*

யாழ்ப்பாணம், ஒக். 03

வலி.வடக்கில் ஏன் இன்னமும் காணிகள் விடுவிக்கப்படாமல் இருக்கின்றன – அதற்குக் காரணம் என்னவென்று, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், கிராம சேவையாளர் ஒருவரிடம் நேற்றுக் கேள்வி எழுப்பினார். அதற்கு எந்தப் பதிலும் சொல்லாமல் நின்றார் கிராம சேவையாளர். பக்கம் 24

# உயர்பாதுகாப்பு வலயத்துக்கு விரைவில் முடிவு

## வலி.வடக்கு மக்களிடம் நேற்று சம்பந்தன் நேரில் உறுதியளிப்பு



யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 3

உயர்பாதுகாப்பு வலயத்தில் உள்ள மக்களின் காணிகள் விடுவிக்கப்படாத நிலைமை முடிவுக்குக் கொண்டு வரப்படவேண்டும். இந்த நிலைமை நீடிப்பதற்கு எந்த நியாயமான காரணமும் இல்லை. ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருடன் பேசி, வலி.வடக்கு மக்களின் மீள்குடியமர்வுக்கு விரைவில் முடிவு எடுக்கப்படும் என்று – உறுதியாக அந்தப் பகுதி மக்களிடமே தெரிவித்தார் எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன். பக்கம் 24



# இலங்கை அரசுக்கு இது வரலாற்றுச் சந்தர்ப்பம்

## ஐ.நா. ஆணையாளரின் பேச்சாளர் அறிக்கை



ஜெனிவா, ஒக்.3

போரின்போதும், போருக்குப் பின்னரும், மோசமான மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பதிலளிப்பதற்கு, இலங்கைக்கு ஒரு வரலாற்றுச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாக, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலகப் பேச்சாளர் ரவினா சம்தாசனி தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நேற்றுமுன்தினம் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கை தொடர்பான தீர்மானத்தை ஐ.நா. மனித உரிமைகள் சபை நிறைவேற்றியுள்ளதன் மூலம், நீதி வழங்குவதிலும், மோசமான சர்வதேசச் சூழலில் இடம்பெற்ற பக்கம் 24

# இந்திய மீனவர்கள் ஏழு பேர் பருத்தித்துறைக் கடலில் கைது

யாழ்ப்பாணம், ஒக்.3

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டதாகத் தெரிவித்துக் கைதான இந்திய மீனவர்கள் 7 பேரையும் எதிர்வரும் 16ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது பருத்தித்துறை நீதிமன்று.



பருத்தித்துறைக் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டதாக இந்திய நாகபட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த 7 மீனவர்களை நேற்று அதிகாலை இலங்கைக் கடற்படையினர் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் நேற்றுக் காலை யாழ். கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டு, பருத்தித்துறை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரணை செய்த பருத்தித்துறை நீதிமன்ற நீதிபதி, இந்திய மீனவர்கள் ஏழு பேரையும் எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்க பக்கம் 24

# ஜப்பானுக்கு பயணமானார் பிரதமர் ரணில்

கொழும்பு, ஒக்.3

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜப்பானுக்கான 5 நாள் உத்தியோகபூர்வப் பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார். அவர் நேற்றிரவு ரோக்கியோ பயணமானார் .

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க, தொழில்நுட்ப கல்வி மற்றும் தொழில் வாய்ப்பு அமைச்சர் சுசில் பிரேமஜயந்த ஆகியோரும், பிரதமரின் இந்தப் பயணத்தில் இணைந்துள்ளனர். ஜப்பானின் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைப் பக்கம் 24

# தமிழர் அபிலாசைகள் பரிந்துரையில் இல்லை

*அமெ. தீர்மானம் குறித்து தவராசா விசனம்*

யாழ்ப்பாணம், ஒக். 03

'அவலை நினைத்துக் கொண்டு உரலை இடித்தது போல்' தமிழ் மக்களின் பிரச்சினையை சர்வதேசத்துக்கு எடுத்துச் சொல்வோம் என்று கூறியவர்கள் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதே தமிழ்மக்களுக்கான தீர்வாக அமையுமென்று சர்வதேசம் பரிந்துரை செய்யும்போது ஏன் மௌனமாக இருக்கின்றார்கள்.

இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட் பக்கம் 24

# ஈழத் தமிழரின் காயங்களுக்கு மருந்தாகாது அமெ. தீர்மானம்

## கலைஞர் கருணாநிதி சாடல்



கொழும்பு, ஒக்.3

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தில் நிறை வேற்றப்பட்டுள்ள தீர்மானம், ஈழத் தமிழர்கள் பட்டுள்ள ஆழமான காயங்களுக்கு உரிய மருந்தாகாது எனத் தமிழக முன்னாள் முதல்வரும் தி.மு.க. தலைவருமான கலைஞர் மு.கருணாநிதி சாடியுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட அமெரிக்கத் தீர்மானம் தமிழர்களுக்கு நம்பிக்கை அளிக்காத நிலையில், அதுபற்றி அக்கறையோடு ஆதரவாக இருந்திருக்க வேண்டிய மத்திய அரசும் தமிழர்களுக்குஉகந்தநிலையை எடுக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். பக்கம் 24

# இறையாண்மையை பாதிக்காது தீர்மானம்

## பிரிட்டன் தூதுவர் கருத்து

கொழும்பு, ஒக்.3

இலங்கை தொடர்பான தீர்மானம் ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்டமையினால் இலங்கையின் இறையாண்மைக்கு பாதிப்புக்கள் இல்லை என்று இலங்கையிலிருக்கும் பிரிட்டன் தூதுவர் ஜேம்ஸ் டோரிஸ் தெரிவித்துள்ளார்.

இந்தத் தீர்மானம் மூலம் இலங்கையின் ஒருமைப்பாடு மற்றும்சுயாதீனத்தன்மை மேலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கான பிரிட்டன் தூதுவரின் கொழும்பில் உள்ள உத்தியோகபூர்வ இல்லத்தில் பக்கம் 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி சமிக்ஞை விளக்கு நெல்லியடியில் தேவை

## சிவில் பாதுகாப்புக் கூட்டத்தில் கோரிக்கை

**பாடசாலை முடிவடையும் நேரங்களில் மாணவிகளுடன் சேட்டைவிடும் இளைஞர்கள் தொடர்பாக தமக்கு உடன் அறிவிக்கும் பட்சத்தில் கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் என்று பொலிஸார் கூட்டத்தில் சுட்டிக்காட்டினர்.**

கரணவாய், ஒக். 3

போக்குவரத்து நெருக்கடியைக் கட்டுப்படுத்தும் விதமாக நெல்லியடிச் சந்தியில் வீதிச் சமிக்ஞை மின் விளக்குகள் பொருத்தப்பட வேண்டும் என்று சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

நெல்லியடிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிவில் பாதுகாப்புக் குழுக்களுக்கான சந்திப்பு கடந்த செவ்வாய்க்கிழமை நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் உப பொலிஸ் பரிசோதகர் ரணசிங்க தலைமையில் நடைபெற்றது. அதன் போதே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

தற்போது நெல்லியடி நகரப் பகுதியில் போக்குவரத்து நெருக்கடி அதிகரித்துள்ளது. அதனால் இந்தப் பகுதியில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றது. இதனைக் கட்டுப்படுத்த நெல்லியடி சந்திப்பகுதியில் வடக்கு மாகாண சபையின் நிதிப் பங்களிப்புடன் வீதிச் சமிக்ஞை (சிக்னல் லைற்) பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அதில் சுட்டிக்காட்டப்பட்டது.

குறித்த கூட்டத்தின்போது, பாடசாலை முடிவடையும் நேரங்களில் மாணவிகளுடன் சேட்டைவிடும் இளைஞர்கள் தொடர்பாக தமக்கு உடன் அறிவிக்கும் பட்சத்தில் அவர்களைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ் தரப்பால் தெரிவிக்கப்பட்டது. அதே வேளை இரவு 8 மணிக்குப் பின்னர் அநாவசியமற்ற முறையில் வீதிகளில் கூட்டம் கூட்டமாக நிற்கும் இளைஞர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

நெல்லியடிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல பகுதிகளில் மலசலகூட வசதி இன்மை உட்பட பல சுகாதாரப் பிரச்சினைகள் காணப்படுகின்றன. அவற்றை பொதுச் சுகாதாரப் பிரிவினருடன் இணைந்து அந்ததந்தப் பகுதி கிராம சேவகர்கள் ஊடாக அமைத்துக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

தற்போது இளைஞர்களின் அடாவடித்தனம் கட்டுக்கடங்காமல் செல்கின்றது. இதனைக் கட்டுப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இதேவேளை– பொலிஸாருக்கு முறைப்பாடுகள் செய்யப்படுகின்ற போது அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

(ற–108)



யாழ். போதனா வைத்தியசாலையின் பாதுகாப்புச் சுவர்கள் திருத்தப் பணிகள் இடம்பெற்றுவருகின்றன. வைத்தியசாலையின் முகப்பு பகுதியில் பாதுகாப்புச் சுவர் அமைப்பதற்காக தோண்டப்பட்ட அத்திபாரக் குழியால், அதன் அருகில் நின்ற மரம் சாய்ந்து வீதியின் குறுக்கே வீழ்ந்தது. மரம் முறிந்து வீழ்ந்தபோது அருகில் இருந்த தொலைபேசி இணைப்பு கம்பமும் முறிந்து வீழ்ந்தது. அதனால் பெரும் சத்தம் ஏற்பட்டது. மரம்முறிந்து வீழ்ந்த சமயம் வீதியில் நின்றிருந்த 3 முச்சக்கர வண்டிகள் அதற்குள் அகப்பட்டு, சிறிய சேதமடைந்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் அங்கு பலர் நின்றபோதும் ஓடித் தப்பியமையால் காயங்கள் ஏற்படவில்லை. (ற–101)

## சமரபாகு அறவழி மழலைகள் பூங்கா விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஒக்.3

சமரபாகு அறவழி மழலைகள் கல்விப் பூங்காவின் விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. பி.ப 2 மணிக்கு சமரபாகு நியூட்டன் விளையாட்டரங்கில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு சமரபாகு மழலைகள் கல்விப் பூங்காவின் முகாமைத்துவக் குழு தலைவர் க.தவச்செல்வம் தலைமை வகிக்கவுள்ளார். பிரதம விருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர் வே.சிவயோகம் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக யாழ். கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலையின் உப அதிபர் கை.திருமுருகன், சமரபாகு கிராம உத்தியோகத்தர் கு.சந்திரமோகன், அபிவிருத்தி உத்தியோகத்தர் ப.இளங்கீரன், சமுர்த்தி உத்தியோகத்தர் நி.சிறிநாதர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ற–10)

## வெங்காய விதை கடத்தல் வழக்கு யாழ்.சுங்கவரி திணைக்களத்திடம்

யாழ்ப்பாணம், ஒக். 3

இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக இலங்கைக்குப் பெரிய வெங்காய விதைகளைக் கடத்தினர் என்ற குற்றச்சாட்டு வழக்கில், குற்றம் நிரூபிக்கப்படும் நிலையில் உள்ளதால் அது பற்றிய மேலதிக விசாரணைக்காக அந்த வழக்கை யாழ். சுங்கவரித் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்குமாறு மன்னார் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

சந்தேகநபர்கள் 2 பேர் சேர்ந்து கடந்த வருடம் இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாகப் பெரிய வெங்காய விதைகளை மன்னார் ஊடாகக் கடத்தியிருந்தனர் என்று குற்றச்சாட்டில் இருவரும் கைது செய்யப்பட்டனர். அவர்களுக்கு எதிராக மன்னார் பொலிஸாரால் மன்னார் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அந்த வழக்கு மன்னார் நீதிமன்றில் நீதிவான் ஏ.ஜி. அலெக்ஸ்ராஜா முன்னிலையில் விசாரணையில் இருந்துவந்த நிலையில் அந்த வழக்கு கடந்த புதன்கிழமை விசாரணைக்கு வந்தது. வழக்கில் குற்றஞ்சாட்டப்படும் சந்தேகநபர்கள் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படும் நிலையில் உள்ளதோடு மேலதிக விசாரணைகளும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

அதனால் அவர்கள் மீதான குற்றச்சாட்டின் அடிப்படையில் சுங்கவரித் திணைக்களத்தினாலும் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது என்று தெரிவித்து, அந்த வழக்கு விடயத்தை மன்னார் நீதிமன்று யாழ்.சுங்கவரித் திணைக்களத்திடம் நேற்றுமுன்தினம் ஒப்படைத்துள்ளது. திணைக்களத்தினர் அது பற்றிய விசாரணையைத் துரிதமாக முன்னெடுத்து அறிக்கையிடுமாறும் மன்று கூறியுள்ளது. (ற–4)

# தடுக்கப்பட்டது காணி சுவீகரிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.3

பூநகரி வெட்டுக்கிராய் கிராமத்தில் இராணுவத்தினருக்கு காணி சுவீகரிப்பதற்கான முன் நடவடிக்கையாக நேற்று காணிகளை அளவிட எடுத்த முயற்சி வட மாகாண சபையின் கிளிநொச்சி மாவட்ட உறுப்பினர்களின் தலையீட்டால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டம்பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வெட்டுக்கிராய் இன்னும் கிராமத்தில் உள்ள தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகளையே அளவிடுவதற்கு முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்தக் காணிகள் 1971ஆம் ஆண்டுமுதல் ஆட்சி செய்யப்பட்டு காணி அனுமதிப்பத்திரம் உடைய காணிகள் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்று குறித்த காணிகளை இராணுவத்தினருக்குச் சுவீகரிப்பதற்கு முன்னேற்பாட்டு நடவடிக்கையாக அளவிடுவடுவதற்கு காணி அளவைத் திணைக்கத்தினர் சென்றிருந்தனர். அதையறிந்த காணி உரிமையாளர்கள் அங்கு கூடித் தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

அதையடுத்து குறித்த இடத்துக்கு வருகை தந்த வட மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா மற்றும் வட மாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை ஆகியோர் நேரில் சென்று நில அளவைத் திணைக்கள அதிகாரிகளுடன் கலந்துரையாடினர். அதையடுத்து அவர்கள் தமது பணிகளை இடைநிறுத்தி அங்கிருந்து அகன்றுள்ளனர். (ற–101)

# தென்பகுதிச் சிறார்களைப் போன்று நாம் நட்புறவுடன் பழக வேண்டும்

## சிறுவர் தின நிகழ்வில் கிளிநொச்சி அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஒக். 3

தென்பகுதியில் இருந்து வருகை தந்திருக்கும் சிறுவர்களைப்போல் எமது மாவட்ட சிறுவர்களும் அங்கு சென்று நட்புடன் பழகவேண்டும் என்று கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு குருநாகல் மாவட்டத்தில் இருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுவர்கள் கிளிநொச்சி மாவட்டத்துக்கு வருகை தந்து சிறுவர் தினத்தை கொண்டாடினார்கள். அங்கு உரையாற்றியபோதே அரச அதிபர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:–

இங்கு வருகை தந்திருக்கும் சிறுவர்களுக்கு சிறுவர் தின வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன். அத்தோடு இந்தமுறை சிறுவர் தின கொண்டாட்டத்துக்கு எமது மாவட்டத்தை தெரிவு செய்தமைக்கு நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றேன். எமது மாவட்ட சிறுவர்களோடு சிறுவர் தினத்தை கொண்டாடி நட்புறவைப் பேண வந்திருப்பது போல எமது மாவட்ட சிறுவர்களும் அங்கு சென்று நட்புறவைப் பேண வேண்டும் – என்றார்.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் மேலதிக அரச அதிபர் சத்தியசீலன், கிளிநொச்சி வலய நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி உ.புவனராஜா, சிறுவர் நன்னடத்தை ஆணையாளர் வடமாகாணம், பௌத்த குருமார்கள் மற்றும் சிறுவர்கள், பாதுகாவலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

[illegible] ணங்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ற–ரி3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கழிவகற்றல் தொடர்பில் துரித நடவடிக்கைகள்

## பொது மக்களும் ஒத்துழைக்க வேண்டும் என யாழ்.மாநாகர சபை ஆணையாளர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஒக். 3

கல்லுண்டாய்ப் பகுதியில் யாழ். மாநகர சபையினரின் அறிவுரைகளைப் பின்பற்றாது தனியார் சுத்திகரிப்பு நிலையத்தைச் சார்ந்தவர்களால் கொட்டப்படும் கழிவுப் பொருள்களால் ஏற்படும் சுகாதரச் சீர்கேட்டை ஒழுங்கு செய்வதற்கான நடவடிக்கைகளில் பொலிஸாருடன் இணைந்து யாழ்.மாநகர சபையினரும் கண்காணிப்பில் ஈடுபடவுள்ளனர். இதற்கான நடவடிக்கைகள் துரித கதியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இதற்குப் பொதுமக்களும் தங்களுடைய பங்களிப்பை வழங்க வேண்டும். – இவ்வாறு யாழ்.மாநாகர சபை ஆணையாளர் பொ.வாகீசன் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:–

கல்லுண்டாய் தொடக்கம் காக்கை தீவு வரையான பகுதிகளில் தற்காலிகமாகக் குப்பைகளைக் கொட்டுவதற்கான ஒன்றரைக் கிலோ மீற்றர் பகுதி ஒதுக்கப்பட்டுள்ளது. குப்பைகளைக் கொட்டுவதற்கான பதிவுகளை மேற்கொண்டதன் பின்னர் அரைக் கிலோ மீற்றர் தூரம் வரை குறித்த பகுதியில் உட்சென்றே குப்பைகளைக் கொட்ட வேண்டும் என்ற அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. எனினும் இதனைப் பின்பற்றாது பொதுமக்களும், தனியார் சுத்திகரிப்பு வாகனங்களும் குப்பைகளை முன் பகுதியில் கொட்டி விட்டுச் செல்கின்றன.

இவ்வாறான நடவடிக்கைகளால் மழை காலத்தில் பெரிய அளவில் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளன. தனியார் சுத்திகரிப்பு நிலையத்தைச் சார்ந்தவர்கள் தமது சுயநோக்கத்துக்காகச் செய்யும் குறித்த செயற்பாடுகளால் பொதுமக்கள் பெரிய அசௌகரியத்துக்கும் நோய்த் தாக்கத்துக்கும் உட்படுவதற்கான வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

இவ்வாறான நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் முதற்கட்டமாக கடந்த மாதம் தொடக்கம் இந்தப் பகுதியில் குப்பை கொட்டாதீர்கள் என்பதை வலியுறுத்தும் பெயர்ப் பலகைகள் வைக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் மாதங்களில் குறித்த நடவடிக்கைகளை முழுமையாகக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளில் காலை 6 தொடக்கம் மாலை 6 வரை பொலிஸாருடன் இணைந்து யாழ்.மாநகர சபையினரும் கண்காணிப்பில் ஈடுபடவுள்ளனர்.

யாழ்.மாநகரப் பகுதியில் நாளொன்றுக்கு 70 முதல் 80 தொன் வரையிலான கழிவுப் பொருள்கள் சேகரிக்கப்படுகின்றன. அவற்றை உரிய முறையில் அப்புறப்படுத்தி மீள் சூழற்சி மூலமாக உரமாகப் பயன்படுத்துவது தொடர்பான முன்னேற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கான இயந்திரங்கள் தயார் நிலையில் உள்ளதுடன் காக்கை தீவில் குறித்த தொழிற்சாலை அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கழிவுப் பொருள்களை மீள் சூழற்சி செய்வதற்கான நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. தற்போது கல்லுண்டாய்ப் பகுதியில் யாழ். மாநகர சபையினரின் அறிவுரைகளை மீறிக் கொட்டப்பட்ட கழிவுப் பொருள்களைத் துப்பரவு செய்து உரிய இடத்தில் கொட்டுவதற்கான பணிகள் நடைபெற்றுவருகின்றன. – என்றார்.

(ற–ரி5)

# யாழ்.பல்கலை.மாணவி சாவு வழக்கு: விசாரணை யாழ். டி.ஐ.ஜீக்கு மாற்றம்

## கோப்பாய் பொலிஸ் விசாரணையில் திருப்தியின்மையால்

யாழ்ப்பாணம், ஒக். 2

யாழ். பல்கலைக்கழக மாணவி நெருப்பில் எரிந்து உயிரிழந்தார் என்று கூறப்படும் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணையில் கோப்பாய் பொலிஸாரின் விசாரணை திருப்தியளிக்கவில்லை என்று சாடியுள்ள யாழ்.நீதிமன்று, விசேட பொலிஸ் குழுவை அமைத்துப் பூரண விசாரணை செய்து மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ்.மாவட்ட பிரதிப்பொலிஸ் மா அதிபருக்கு நேற்று உத்தரவிட்டுள்ளது.

**நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது உறுதிப்படுத்தக்கூடிய எந்த வித ஆதாரங்களையும் பொலிஸார் நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக்கவில்லை.**

முல்லைத்தீவைச் சேர்ந்த லோறன்ஸ் அனா எப்சிபா என்ற மாணவி யாழ்.திருநெல்வேலி, பாற்பண்ணைப் பிரதேசத்தில் தற்காலிகமாக வசித்து வந்த நிலையில் கடந்த ஜூலை மாதம் 6 ஆம் திகதி மண்ணெண்ணெய் ஊற்றித் தனக்கு தானே தீ வைத்து கொண்டார் எனத் தெரிவிக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவரைப் பதிவுத் திருமணம் செய்து கொண்ட யாழ்.மருத்துவ பீட மாணவனே அவரை வைத்தியசாலையில் சேர்ப்பித்தார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் 3 நாள்கள் சிகிச்சை பெற்றும் சிகிச்சை பயனளிக்காமல் அவர் ஜூலை 9 ஆம் திகதி உயிரிழந்தார். மாணவியும், மருத்துவபீட மாணவனும் வெவ்வேறு மதங்களைச் சேர்ந்தவர்கள். இருவரும் பெற்றோருக்குத் தெரியாமல் பதிவுத் திருமணம் செய்து ஒன்றாக வாழ்ந்து வந்தனர் என்று கூறப்படுகின்றது. பின்னர் அது பெற்றோருக்கு தெரிய வந்ததால் திருமணம் தொடர்பாக பெண் வீட்டார் மதம் மாறுவதற்கு வற்புறுத்தியிருந்த நிலையில் ஏற்பட்ட பிணக்குக் காரண[illegible] மாணவி தற்கொலை செய்து[illegible] என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தவழக்கு யாழ்.நீதிவான் நீதிமன்றத்தில் பெ.சிவகுமார் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது உயிரிழந்த மாணவியின் தாயார் சார்பாக முன்னிலையாகிய சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம், இந்தச் சாவு தொடர்பாக சந்தேகம் இருக்கின்றது என்று தெரிவித்தார்.

எரிகாயங்களுக்குள்ளான அந்த மாணவி மூன்று நாள்களாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த போதும், அவரைப் பார்வையிடச் சென்ற தாயாருக்கு அனுமதி வழங்கப்படவில்லை என்றும் மாணவியைப் பதிவுத்திருமணம் செய்து கொண்டவர் மருத்துவபீட மாணவரென்பதால் முறையற்ற செல்வாக்கு பயன்படுத்தப்பட்டுள்ளதா? என சந்தேகம் உள்ளது என்றும் பாதிக்கப்பட்டவரின் சட்டத்தரணி மன்றுக்கு விண்ணப்பித்தார்.

மாணவியின் உயிரிழப்பில் உள்ள சந்தேகங்கள் தொடர்பாகக் கடந்த முறை நீதிமன்றத்தின் கவனத்துக்கு மீண்டும் கொண்டு வந்ததோடு, கடந்த தவணை இந்த உயிரிழப்பில் உள்ள சந்தேகங்கள் தொடர்பாகப் பல அதிர்ச்சியூட்டும் தகவல்களை [illegible] ஸாரின் அசமந்தப்போக்கையும் சுட்டிக்காட்டினார்.

அதையடுத்து உடனடியாக மீள் விசாரணைக்கு உத்தரவிட்ட நீதிவான், அது தொடர்பான அறிக்கையை ஒக்ரோபர் முதலாம் திகதி நீதிமன்றத்தில் சமர்பிக்குமாறும் பொலிசாருக்கு உத்தரவிட்டிருந்தார்.

ஆனால் நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது உறுதிப்படுத்தக்கூடிய எந்தவித ஆதாரங்களையும் பொலிஸார் நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக்கவில்லை. மாணவியின் சார்பாக முன்னிலையாகிய சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம், பொலிஸாரின் செயற்பாடுகள் நம்பகத்தன்மையை அளிக்கவில்லை என்றும் அவர்களது அசமந்தப் போக்கைச் சுட்டிக்காட்டி வழக்கு விசாரணையை விசேட பொலிஸாரை நியமித்து விசாரணைக்குட்படுத்த வேண்டும் என்றும் நீதிமன்றத்தைக் கேட்டுக் கொண்டார்.

அதையடுத்து விசேட பொலிஸ் குழுவை நியமித்து வழக்கை விசாரித்து நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ்.மாவட்டப் பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு யாழ்.நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. அந்த வழக்கு விசாரணை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ற–4)

## யாழ்., கிளி. இந்துக் கல்லூரிகளுக்கு காசோலைகள்

யாழ்ப்பாணம், ஒக்.3

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி இந்துக் கல்லூரிகளுக்கு நேற்றுமுன்தினம் மத்திய கல்வி அமைச்சரால் 19 இலட்சம் ரூபா பெறுமதியான காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன.

கொழும்பு மகாநாமக் கல்லூரியில் மத்திய கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவாசம் தலைமையில் தேசிய சிறுவர் தின நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் நடைபெற்றன. அதில் நாட்டின் பல பாகங்களையும் சேர்ந்த பெருமளவிலான பாடசாலை மாணவர்கள் மற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது நாட்டின் பல பாகங்களிலும் உள்ள பாடசாலைகளிலும் தேர்வு செய்யப்பட்ட பாடசாலைகளின் அடிப்படை சுகாதார வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் தலா 19 இலட்சம் ரூபா மத்திய கல்வி அமைச்சரால் வழங்கப்பட்டது. அவற்றில் வடக்கு மாகாணத்தை சேர்ந்த 3 பாடசாலைகளும் உள்ளடங்கியிருந்தன.

கிளிநொச்சி இந்துக் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி ஆகியவற்றுடன் வவுனியாவைச் சேர்ந்த பறக்கும்பரா கல்லூரி ஆகியவற்றின் அதிபர்களிடம் மத்திய கல்வி அமைச்சரால் காசோலைகள் வழங்கப்பட்டன.

(ற–101)

## திருடிய பெண்ணுக்கு 6 மாதங்கள் சிறை

யாழ்ப்பாணம், ஒக். 3

மன்னாரில் பல திருட்டுக்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பெண் மீதான, திருட்டு வழக்கு ஒன்றில் குற்றம் நிரூபிக்கப்பட்டதனால் அந்தப் பெண்ணுக்கு 6 மாதங்கள் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது மன்னார் நீதிமன்று.

மன்னார் முருங்கனைச் சேர்ந்த குறித்த பெண் சில வருடங்களாகத் திருட்டில் ஈடுபட்டு வருகின்றார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. அதனால் அவருக்கு எதிராகப் பல வழக்குகளும் மன்னார் நீதிமன்றில் விசாரணையில் உள்ளன.

இந்த நிலையில் மன்னார் நீதிவான் ஏ.ஜி.அலெக்ஸ்ராஜா முன்னிலையில் அந்தப் பெண்ணின் திருட்டு வழக்கு விசாரிக்கப்பட்டு வந்து கடந்த புதன்கிழமை தீர்ப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

அந்தப் பெண் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டதால் அவருக்கு 6 மாதங்கள் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது நீதிமன்று. தவிர அந்தப் பெண்ணுக்கு எதிரான ஏனைய வழக்குகள் நீதிமன்றில் இன்னும் விசாரணையில் இருந்து வருகின்றன.

அந்தப் பெண் திருட்டுச் சம்ப வம் ஒன்றில் ஈடுபட்டார் என்றும் அதற்குக் கண்கட்ட சாட்சி உள்ளது என்றும் கூறப்பட்டது. அவ்வாறான வழக்கின் சாட்சியாக சிறுவன் ஒருவனே இருந்துள்ளான். அந்தச் சிறுவனைப் பொலிஸார் சாட்சியப் பதிவுக்கு அழைத்து பொலிஸ் நிலையத்தில் வைத்துத் துன்புறுத்தினர் என்று நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

நீதிமன்று பொலிஸாரைக் கடுமையாகச் சாடி எச்சரிக்கை செய்ததோடு அது தொடர்பான விளக்கத்தை வட மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதி பரிடம் கோரியுள்ளது. அது தொடர்பில் பொலிஸ் மா அதிபருக்கும் உரிய நடவடிக்கைக்கு தகவல் அனுப்பட்டுள்ளதோடு குறித்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக என்ன அடிப்படையில் வழக்குத் தாக்கல் செய்வது என்று சட்ட மா அதிபர் திணைக்களத்துக்கும் நீதிமன்று அறிக்கையிட்டு கேட்டுள்ளது.(ற–4)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சுகாதார சீர்கேடான உணவகத்துக்கு ரூ.30 ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம், ஒக்.3

உணவகத்தை அசுத்தமாக வைத்திருந்ததோடு அங்கு வைத்திருந்தஉணவுப்பொருள்களையும் பாதுகாப்பற்ற முறையில் வைத்திருந்த குற்றத்துக்காக அதன் நடத்துநருக்கு மன்னார் நீதிமன்று 30 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

மன்னாரில் உள்ள உணவகம் ஒன்றை சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவினர் நடத்திய சோதனையையடுத்து அந்த உணவக நடத்துநருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. நீதிமன்றில் வழக்கு விசாரணைக்கு வந்தபோது தன்மீதான குற்றச்சாட்டை உணவக நடத்துநர் ஏற்றுக் கொண்டார்.

அதனையடுத்து அவரை எச்சரித்த நீதிமன்று சுகாதாரக் குறைபாடுகளைச் சீர்செய்ய வேண்டும் என்றும் அவ்வாறான சீர்கேட்டுடன் உணவகம் இயங்கக்கூடாது என்றும் கூறியதோடு அவர் புரிந்த குற்றத்துக்காக அவருக்கு 30 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது. (ற-4)

## பேராசிரியரின் சிறப்புரை இன்று

யாழ்ப்பாணம், ஒக். 3

போரின் தாக்கத்துக்குப் பின்னர் இளைஞர்களுக்குத் தற்போதைய உளசமூக சூழலும், கல்வி மற்றும் உலகமயமாக்கல் பற்றிய சிறப்புரையும் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ளது. உளமருத்துவநிபுணர் பேராசிரியர் தயா சோமசுந்தரம் இந்த உரையை ஆற்றவுள்ளார்.

யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரியில் ஆனந்தராஜன் நினைவுப் பேருரை இன்று பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. அதில் இந்த உரையை உளமருத்துவ நிபுணர் ஆற்றவுள்ளார். (ற-4)

## உட்கட்டுமான திறப்பு விழா நிகழ்வுகள்

மன்னார், ஒக்.3

மன்னார் மாவட்டத்தில் புதிதாகப் புனரமைக்கப்பட்ட நான்கு உட்கட்டுமானங்கள் இன்று திறந்துவைக்கப்படவுள்ளன. இந்த நிகழ்வுக்கு வடமாகாண முதல்வர் க.வி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

வடமாகாண போக்குவரத்து மற்றும் மீன்பிடித்துறை அமைச்சர் பா.டெனீஸ்வரனின் ஏற்பாட்டில் இன்று காலை 9 மணிக்கு இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. பூநகரி பிரதேசத்திற்கு உட்பட்ட முழங் காவில் கிருஸ்ணா நகரில் பல லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையத்தை முதல்வர் க.வி.விக்னேஸ்வரன் முதலில் திறந்து வைக்கவுள்ளார்

இதனைத்தொடர்ந்து மாந்தை மேற்கு பாலியாறு பிரதேசத்தில் காலை 9.45 மணியளவில் புதிய அரைக்கும் ஆலை திறந்து வைக்கப்படும். பின்னர் மு.ப. 11 மணிக்கு மன்னார் விளையாட்டு திடலில் உள்ளக விளையாட்டு அரங்கும், மாலை 1.30 மணியளவில்மன்னார்பனங்காட்டு கொட்டில் பிரதேசத்தில் அரைக்கும் ஆலையும் திறந்து வைக்கப்படவுள்ளன. (ற-10,50)

# போதைப்பொருள் தடுப்பு குறித்து விசேட கூட்டம்

### மன்னார் அரச அதிபர் தலைமையில் நடைபெற்றது

மன்னார், ஒக்.3


போதைப்பொருள் மற்றும் சிறுநீரக நோய் தடுப்புத் தொடர்பாக ஆராயும் விசேட கூட்டம் நேற்று முன்தினம் முற்பகல் 9.30 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்தில் மாவட்ட அரச அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய தலைமையில் இடம் பெற்றது.

மன்னார் மாவட்டத்தில் உள்ள ஐந்து பிரதேச செயலாளர்கள் பிரிவுகளிலும் போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் பாதிப்புக்கள்குறித்தும்போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்த மேற்கொள்ளவேண்டியநடவடிக்கைகள் குறித்தும் அதில் விசேடமாக ஆராயப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள சிறுநீரக நோய் தொடர்பாகவும்,அதனை கட்டுப்படுத்த மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

போதைப்பொருள் மற்றும் சிறுநீரக நோய் தடுப்புத் தொடர்பாக ஆராய்வதற்காக விசேட குழு ஒன்றை நியமித்துக் கடமையில் ஈடுபடுத்துவது என்று இதன்போது தீர்மானம் எட்டப்பட்டது.

-குறித்த விசேட கூட்டத்தில் மன்னார் மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திருமதி நந்தினி ஸ்ரான்லி மெல், மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை,மன்னார் பொது வைத்திய சாலையின் வைத்திய அத்தியட்சகர்,பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்,பொது சுகாதாரவைத்தியஅதிகாரி,மதுவரி திணைக்கள அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். (ற-56)



மகாத்மாகாந்தியின்146ஆவதுஜெயந்திதினம்நேற்றுவெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் கொண்டாடப்பட்டது. அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் நடைபெற்ற நிகழ்வின்போது காந்தி அடிகளாரின் உருவச்சிலைக்கு யாழ்ப்பாணத்திற்கான இந்தியதுணைத்தூதுவர் ஆ.நடராஜா மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். அவரைத் தொடர்ந்து, அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் தலைவர். ஆர் இராசநாயகம், காந்தியம் பத்திரிகை ஆசிரியர் சாந்தன் மற்றும் யாழ். போதனா வைத்தியசாலை தாதியர் பயிற்சிக் கல்லூரி அதிபர், தாதியர்கள் மற்றும் காந்தியவாதிகள் எனப்பலர் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். (10,20,106)

# விடுதி வசதியை ஏற்படுத்தித் தருமாறு தென்கிழக்கு பல்கலையில் ஆர்ப்பாட்டம்

அம்பாறை, ஒக்.3

தென்கிழக்குப் பல்கலைக்கழக இரண்டாம் வருட பெண் மாணவர்களுக்கு பல்கலைக்கழக வளாகத்தில் விடுதி வசதி ஏற்படுத்திக் கொடுக்காமை, பிற இடங்களில் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட விடுதியில் போதிய பாதுகாப்பு வசதி இல்லாமை என்பவற்றைக் கண்டித்து பல்கலைக்கழத்தின் 2012/2013 ஆம் கல்வி ஆண்டுக்கான இரண்டாம் வருட மாணவர்களால் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

சுமார் 350 இற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த திங்கட்கிழமை காலை 9 மணியளவில் ஆரம்பமான கவனவீர்ப்புப் போராட்டம் பி.ப.2.30 மணியையும் கடந்து இடம்பெற்றது. பல்கலைக் கழகத்தின் நிர்வாகக் கட்டடத்துக்கு முன்பாக பதாதைகள் ஏந்தியவாறு பல்வேறான கோசங்களை எழுப்பி மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் இரண்டாம் வருட மாணவர்களுக்கென நிந்தவூர் பிரதேசத்தில் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட விடுதியில் தங்கியிருந்த மாணவியொருவர் இரவு குளியலறைக்குச் செல்லும்போது இனந்தெரியாத நபரொருவர் ஜன்னல் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்தார் என்றும் குறிப்பிட்ட மாணவி கூக்குரலிட்டதன்காரணமாக அந்த நபர் தப்பித்துச் சென்றார் என்றும் தெரிவித்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் தமக்குப் பல்கலைக்கழகவளாகத்தில்விடுதி வசதியைத் ஏற்படுத்தித் தருமாறு கோசமிட்டனர்.

நிந்தவூர்ப் பிரதேசத்தில் அமையப்பெற்றுள்ள விடுதியில் மூவின சமூகங்களையும் சேர்ந்த 41 மாணவிகள் தங்கியிருந்து தமது கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் அங்கு போதிய பாதுகாப்பு வசதியற்று தினமும் அச்சத்துடனேயே தமது அன்றாடச் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது என்றும் மாணவிகள் தெரிவித்தனர்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் இம் மாணவிகளுக்கு பல்கலைக்கழக வளாகத்தில் விடுதி வசதியை ஏற்படுத்தித் தருமாறு இக்கல்வியாண்டில் பயிலும் ஆண் மாணவர்களால் பல்கலைக்கழகத்தின் நிர்வாகத்தினரிடம் எழுத்து மூலம் அறிவித்திருந்தும் இதுவரை எவ்வித



நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கும் மாணவர்கள், மாணவர்களின் கோரிக்கைகளைக்காதில் வாங்கிக் கொள்ளாமல் மாணவர்களை அடிமைச் சமூகமாக எண்ணி சம்பந்தப்பட்ட தரப்பினர் கசக்கிப் பிழிய முற்படுகின்றனர் என்றும் குற்றஞ்சாட்டினர்.

பி.ப3.15மணியளவில்ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களுக்கும் பல்கலைக்கழகநிர்வாகத்தினருக்குமிடையில் இடம்பெற்ற பேச்சின்போது எதிர்வரும் ஒரு வாரகாலத்துக்குள் குறிப்பிட்ட பெண் மாணவிகளுக்கு பல்கலைக்கழக வளாகத்தில் விடுதி வசதியை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும், இக்காலப்பகுதியில் நிந்தவூர் விடுதியில் தங்கியிருக்கும் விடுதியை மாணவிகளுக்குப் பலத்த பாதுகாப்பு வசதி செய்து தரப்படும் என்றும் வாக் குறுதியளிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டம் முடிவுறுத்தப்பட்டது. (ற-10)

# மணிக்கட்டில் வெட்டுக் காயத்துடன் ஆள்களற்ற வீட்டுக்குள் மாணவன்

### அயலவர்களால் வைத்தியசாலையில் சேர்ப்பு யாழ். நகரில் சம்பவம்

ஆள்கள் நடமாட்டம் அற்ற வீட்டுக்குள் கை மணிக்கட்டுப் பகுதியில் வெட்டப்பட்ட நிலையில் 14 வயதுப் பாடசாலை மாணவன் யாழ்ப்பாண பொலிஸாரால் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக யாழ் போதனாவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளான். சம்பவ இடத்தில் இருந்து இரத்தக் கறை படிந்த பிளேட்டும் மீட்கப்பட்டது. இந்தசம்பவம்நேற்றுயாழ்ப்பாணம் நீராவியடி கல்லூரி வீதியில் இடம் பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் நீராவியடியில் உள்ள ஆள்கள் நடமாட்டம் இல்லாது கதவுகள் பூட்டப்பட்ட நிலையில் இருந்த வீடு ஒன்றிற்குள் இருந்து அழும் குரல் கேட்டுள்ளது. அதையடுத்து அயலவர்கள் அங்கு சென்று பார்தபோது குறித்த மாணவனின் கை மணிக்கட்டுப் பகுதியில் வெட்டப்பட்டு இரத்தம் வடிந்த நிலையில் மாணவன் சத்தமிட்டுக் கத்தியவாறு நின்றுள்ளான். அதையடுத்து அயலவர்கால் குறித்த வீட்டு உரிமையாளருக்கு அறிவிக்கப்பட்டு கதவு திறக்கப்பட்டுள்ளது. இதன் பின்னர் மாணவன் மீட்கப்பட்டு மயக்கமுற்ற நிலையில் யாழ்ப்பான பொலிஸாரால் யாழ் போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளான்.

சம்பவம்தொடர்பாகமாணவனிடம் கேட்டபோது நேற்றுக் காலை பாடசாலைக்கு வருகைதந்த போது யாரோ மூன்று பேர் தன்னை வாகனத்தில் ஏற்றி தனது தந்தையிடம் பணமுள்ளதாகக் கேட்டார்கள் என்றும்,தான் இல்லை என கூறியபோது தன்னை அடித்து குறித்த வீட்டின் மதிலால் உள்ளே தள்ளினர் என்றும் தெரிவித்தான். அவர்கள் தான் தனது கையை வெட்டினார்கள் எனவும் தனது புத்தகப் பையையும் அவர்கள் கினற்றில் போட்டுவிட்டார்கள் எனவும் கூறினான்.

ஒவ்வொரு நாளும் பாடசாலை சேவை பஸ்ஸிலேயே பாடசாலை செல்பவன் நேற்று முன்தினம் பாடசாலை வேளைக்கு முடிந்தது என்று கூறி 11 மணிக்கு வந்தான். நான் கேட்ட போது சிறுவர் தினம் அதனால் பாடசாலை முன்னதாக விட்டதாக கூறினான். இன்றும் (நேற்று) அவ்வாறே பாடசாலைக்கு சென்றான் என்று மாணவனின் தாயார் தெரிவித்தார்.

குறித்தமாணவன்கடந்த9ஆம்திகதி மூன்றாம் தவணை ஆரம்பித்ததன் பின்னர் இன்றுவரை இரண்டு நாள்கள் மட்டுமே பாடசாலைக்கு வருகை தந்துள்ளான் என்றும், இது தொடர்பாக அவனது பெற்றோருக்கு அறிவிப்பதற்கு முயற்சித்த போதும் அறிவிக்க முடியவில்லை என்றும் மாணவன் கல்வி கற்கும் பாடசாலையின் அதிபர் தெரிவித்தார்.

குறித்த வீட்டின் கிணற்றுக்குள் இருந்து எடுக்கப்பட்ட மாணவனின் பைக்குள் இரண்டு பிஸ்கட் பைகள் காணப்பட்டன. அத்தோடு வீட்டுக்குள் ஒரு சோடா போத்தலும் அதற்கு அருகில் மாணவனின் கழுத்து பட்டியும் காணப்பட்டது. இது தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-21)

## சர்வதேச நல்லொழுக்க தினம் அனுஷ்டிப்பு

சங்கானை, ஒக்.3

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு சர்வதேச நல்லொழுக்கதினம் சங்கானையிலுள்ள மேற்படி சம்மேளன காரியாலயத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

சம்மேளனத் தலைவர் க. புஸ்பராசா தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில், செயலாளர் செ.குமாரசிங்கம் மற்றும் வலி.மேற்கு பிரதேச செயலக புனர்வாழ்வு அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.மல்லிகா ஆகியோர் நல்லொழுக்கம் பற்றிக் கருத்துரையாற்றவுள்ளனர். அத்துடன், சம்மேளனக் கணக்கில் கூடிய சேமிப்புச் செய்துள்ள15 பேருக்கு அவர்களை ஊக்குவிக்கும் முகமாக இன்றையதினம் பரிசில்களும்வழங்கப்படவுள்ளன. மேலும், வேலை வாய்ப்புக்காக விண்ணப்பித்தவர்கள் மற்றும் வேலை வாய்ப்புத் தேடும் இளைஞர் - யுவதிகளை இந்நிகழ்வில் தவறாது கலந்துகொள்ளுமாறு நிகழ்ச்சி ஏற் பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசமைப்புச் சபையிலிருந்து விஜித ஹேரத் நீக்கப்படுவார்

உதய கம்பன்பில கூறுகின்றார்

கொழும்பு, ஒக்.3

தேசிய அரசால் உருவாக்கப்பட்டுள்ள அரசமைப்புச் சபையில் சிறு கட்சிகளின் பிரதிநிதியாக உள்வாங்கப்பட்டுள்ள மக்கள் விடுதலை முன்னணியின் பரப்புரைச் செயலர் விஜித ஹேரத்தை அதில் இருந்து நீக்கவுள்ளதாக பிவிதுரு ஹெல உறுமய குறிப்பிட்டுள்ளது.

இதற்கான சட்டநடவடிக்கைகள் எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார் அந்தக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில.

கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:–

சிறிய கட்சிகளின் பிரதிநிதியாக விஜித ஹேரத் ஏற்றுக்கொள்ளப்படாத நிலையில் அவரை அரசமைப்புச் சபையில் சிறுகட்சிகளின் பிரதிநிதியாக அங்கீகரிக்க முடியாது.

எனவே விஜித ஹேரத் அரசமைப்புச் சபையில் இருந்து விலக்கப்படவேண்டும். அப்படி விலக்கப்படாவிட்டால் ஜனாதிபதி மற்றும் சபாநாயகருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் – என்றார். (ந)



நியூயோர்க் சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான குழுவினருக்கும், நேபாளப் பிரதிப் பிரதமர் பிரகாஷ் மன் சிங் தலைமையிலான குழுவினருக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று கடந்த புதன்கிழமை நடைபெற்றது. அதில் இருநாட்டு உறவுகளை மேம்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ந)

## ஐ.நா. பரிந்துரைகளை நிறைவேற்றுவது சிரமம்

நிமல் சிறிபால டி சில்வா தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.3

இலங்கை தொடர்பில் ஐ.நா. பரிந்துரைத்துள்ள விடயங்களை நடைமுறைப்படுத்தும்போது பல பிரச்சினைகள் ஏற்படும் என்று சுட்டிக்காட்டியுள்ளார் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதித் தலைவரும், அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வா.

இலங்கையின் நீதித்துறைக்குள் இருந்துகொண்டு இந்தப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் போது சிக்கல்கள் ஏற்படும். இலங்கையின் அதியுயர் நீதிமன்றமாக உயர் நீதிமன்றம் விளங்குகின்றது. இந்த நிலையில் கலப்பு நீதிமன்றம் ஒன்றை உருவாக்க முடியாது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பரிந்துரையின்படி கலப்பு நீதிமன்றை உருவாக்க நீதித் துறையில் பல புதிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். எனினும் அவற்றை ஒரே இரவில் செய்து விட முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ந)

## கடும்போக்குவாதம் தொடர்ந்தால் வடக்கு இளைஞர் போக்கு மாறும்

எச்சரிக்கின்றார் பேராசிரியர் டெஸ்மன் மல்லிகாராச்சி

கொழும்பு, ஒக்.3

நாட்டில் தொடர்ந்து கடும்போக்கு வாதக் கொள்கைகள் பின்பற்றப்பட்டால் வடக்கு இளைஞர்கள் எவ்வாறான தீர்மானம் எடுப்பார்கள் என்பதை நினைத்துப் பார்க்க முடியாது என்று தெரிவித்துள்ளார் பேராதனைப் பல்கலைக் கழகத்தின் உளவியல்பீட முன்னாள் பொறுப்பாளர் பேராசிரியர் டெஸ்மன் மல்லிகாராச்சி.

வடக்கையும், தெற்கையும் சேர்ந்த கடும்போக்காளர்கள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் இலங்கை குறித்த தீர்மானத்தைப் பிழையாகப் பார்க்கின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்

கடும்போக்காளர்கள் ஐ.நா. தீர்மானத்தைப் பிழையாக நோக்குவதால் எந்த நன்மையும் ஏற்படப் போவதில்லை. கடும்போக்குவாத நிலைப்பாடுகளால் நாட்டுக்கு எந்த நன்மையும் கிடைக்காது. நாடு மீளவும் பிரச்சினைகளையும் அழுத்தங்களையுமே எதிர்கொள்ள நேரிடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ்க் கடும்போக்குவாதத்தில் விமல் வீரவன்ச, குணதாச அமரசேகர போன்ற சிங்கள இனவாதிகள் இணைந்து கொண்டு நாட்டுக்கு களங்கத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர் என்று குறிப்பிட்டுள்ள மல்லிகாராச்சி, இதில் அனைத்துத் தரப்பினரும் நெகிழ்வுப் போக்கைப் பின்பற்ற வேண்டியது அவசியமானது என்றும் தெரிவித்துள்ளார்.

ஜனவரி மற்றும் ஓகஸ்ட் தேர்தல்களின் பின்னர் சர்வதேச நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இந்தச் சாதகத் தன்மையை உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். எதிர்காலத்தில் இனவாத கடும்போக்குக் கொள்கைகள் நிராகரிக்கப்படவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிங்கள மொழி ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ந)

## குற்றங்களைக் குறைப்பதற்கு சாவுத் தண்டனை தீர்வாகாது

பிரதி அமைச்சர் கருணாரட்ன பரணவிதான தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.3

குற்றச்செயல்களைத் தடுப்பதற்கு சாவுத் தண்டனை தீர்வாக அமையாது என்று பிரதி அமைச்சர் கருணாரட்ன பரணவிதான தெரிவித்துள்ளார். நாட்டில் சாவுத் தண்டனையை நடைமுறைப்படுத்துவது குறித்த பேச்சு ஆரோக்கியமானதல்ல எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அஹலிகொட பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதியமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

சமூக, பொருளாதார, கலாசாரம் உள்ளிட்ட காரணிகளே குற்றச் செயல் கள் அதிகரிக்கக் காரணமாக அமைந்துள்ளன என்று குறிப்பிட்ட அவர், அதற்கான காரணிகளைக் கண்டுபிடித்து தீர்வைப் பெற வேண்டுமே தவிர அதற்குச் சாவுத் தண்டனை தீர்வாக அமையாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சமூகத்தில் காணப்படும் அழுத்தங்கள் மட்டுமின்றி, வறுமை யும் குற்றச் செயல்களுக்குக் காரணம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மனித உரிமை செயற்பாட்டாளர்கள் எதிர்த்து வந்ததாலேயே சாவுத் தண்டனை 1976ஆம் ஆண்டுக்குப் பின்னர் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, தற்போது இலங்கையில் அதிகரித்துவரும் குற்றச் செயல்களைத் தடுக்க சாவுத் தண்டனையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று பாதிக்கப்பட்டோர் சார்பிலும், பல்வேறு தரப்பினராலும் கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றது.

நாடாளுமன்ற அனுமதியை பெற்று சாவுத் தண்டனையை நடை முறைப்படுத்த ஆலோசிக்கப்பட்டு வருகின்றது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் அண்மையில் தெரிவித்திருந்தார். (ந)



## அசாத் சாலிக்கு எதிராக நேற்று ஆர்ப்பாட்டம்

மத்திய மாகாண சபை உறுப்பினரும் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவருமான அசாத் சாலிக்கு எதிராக நேற்று வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகையின் பின்னர் கிழக்கில் பல இடங்களில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

விபச்சாரம், கலாசார சீரழிவு, கள்ளத்தொடர்பு இவைகளுடன் அசாத் சாலி தொடர்பு பட்டுள்ளார் என்றும், அதனைக் கண்டித்துமே குறித்த ஆர்பபாட்டம் இடம்பெறுவதாகவும் துண்டுப்பிரசுரம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜும்மா தொழுகையின் பின்னர் காத்தான்குடி முதலாம் குறிச்சி மீரா பெரிய ஜும்மா பள்ளிவாசலுக்கு முன்பாக இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் பெருமளவிலானோர் கலந்து கொண்டனர். காத்தான்குடி பிரதான வீதியில் இந்த ஆர்ப்பாட்டம் இடம் பெற்றதுடன் பொலிசார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

மேற்படி ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் முஸ்லிம்களை பௌத்தர்களிடம் காட்டிக் கொடுக்காதே, முஸ்லிம் – சிங்கள உறவைச் சீர்குலைக்காதே, இஸ்லாத்தைக் கேவலப்படுத்தாதே, போலி அரசியல் செய்யாதே, குடும்பப் பெண்களை விபச்சாரிகள் ஆக்காதே போன்ற பல்வேறு தமிழ், சிங்கள, ஆங்கில மொழிகளிலான பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில் சிறுவர்கள்,இளைஞர்கள், பொது மக் கள் , நாம் ஈமான் கொண்டோர் அமைப்பின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ந–10)

## வடக்கு உறுப்பினர் நியமனம் இயற்கை நீதிக்கு முரணானது

சாடுகின்றார் வடக்கு எதிர்க்கட்சித் தலைவர்



யாழ்ப்பாணம், ஒக்.3

வடக்கு மாகாண சபையின் புதிய உறுப்பினராக சி.அகிலதாசை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நியமித்திருப்பது இயற்கை நீதிக்கு முரணான செயல் என்று தெரிவித்துள்ள வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா மக்கள் வழங்கிய ஆணைக்கு மதிப்பளிக்காத இந்தச் செயற்பாட்டை வன்மையாகக் கண்டிக்கின்றேன் என்றும் தெரிவித்துள்ளார்.

மாகாண சபை உறுப்பினராக இருந்த இ.அங்கஜன் நாடாளுமன்ற உறுப்பினராக நியமனம் பெற்றதையடுத்து அவரது வெற்றிடத்திற்கு சி.அகிலதாசை மாகாண சபை உறுப்பினராக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நியமித்துள்ளது.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

2013 ஆம் ஆண்டு செப்ரேம்பர் மாதம் நடைபெற்ற வடக்கு மாகாண சபைத் தேர்தலில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து போட்டியிட்டது.

இதில் ஈ.பி.டி.பியைச் சேர்ந்த ஐயாத்துரை சிறிரங்கேஸ்வரன் விருப்பு வாக்கு அடிப்படையில் முன்னிலையில் இருக்கின்றார். இதேவேளை மாகாண சபை உறுப்பினராக நியமனம் பெற்றுள்ள அகிலதாஸ் அவரிலிருந்து 5ஆவது இடத்தில் இருக்கின்றார். மாகாண சபை உறுப்பினராக நியமனம் பெற்றுக் கொள்ளத் தகுதியுள்ளவராக ஐயாத்துரை சிறிரங்கேஸ்வரன் உள்ளார் என்பதனை சுட்டிக் [illegible] நியமித்திருப்பது [illegible]க்கான செயற்பாடாக இருக்க முடியாது– என்றுள்ளது. (ந–5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** மனதில் குழப்பம் தோன்றி விலகும். நண்பர்களின் சொந்த விடயத்தில் தலையிட வேண்டாம். தொழில், வியாபாரத்தில் ஓரளவு இலாபம் உண்டாகும். பணியாளர்களுக்கு வேலைச்சுமை அதிகரிக்கும்.

**இடபம்:** நண்பர்களின் உதவியால் செயல்களில் உற்சாகம் பிறக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்படும். பணியாளர்களுக்கு எதிர்பாராத பணவரவு கிடைக்கும். புத்திரர் விரும்பிய பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள்.

**மிதுனம்:** உங்களின் நற்செயலை சிலர் குறை சொல்லலாம். வேலைகளில் கவனம் கொள்வது நல்லது. தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். வாகனப் பிரயாணத்தில் மிகவும் கவனம் செலுத்தவும்.

**கடகம்:** தொழில், வியாபாரம் வளர்ச்சி பெறுவதற்கான வாய்ப்புக்கள் உருவாகும். பணியாளர்கள் அதிக வருமானம் பெறுவார்கள். குடும்ப பிரச்சினையில் சமரசம் உண்டாகும். மனதில் நிம்மதியும் பெருமிதமும் ஏற்படும்.

**சிங்கம்:** நீண்ட நாள்களாக திட்டமிட்ட பணிகள் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் திருப்திகரமான இலாபம் இருக்கும். பணியாளர்களுக்குப் பணவரவும் நன்மையும் அதிகரிக்கும். நண்பர்களுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள்.

**கன்னி:** குடும்பத்தில் ஒற்றுமை மேலோங்கும். தொழில், வியாபாரத்தில் உருவாகிய இடையூறுகளைச் சரிக்கட்டப் போராடுவீர்கள். எதிர்பாராத வகையில் செலவுகள் ஏற்படும். வாகனம் இயக்கும்போது கவனமாக இருக்கவும்.

**துலாம்:** கவனக்குறைவால் பணிகளில் குளறுபடி ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். குடும்பத் தேவைகளுக்கான செலவு அதிகரிக்கும். உடல்நலத்துக்காக சிறிது செலவழிக்க வேண்டி வரலாம்.

**விருச்சிகம்:** தெய்வத்தின் அருளால் இடையூறு விலகும். தொழில், வியாபாரம் வியத்தகு முன்னேற்றம் பெறும். கொடுக்கல், வாங்கல் திருப்திகரமாகும். பணியாளர்கள் நிர்வாகத்திற்கு நல்ல கருத்துகளை சொல்வீர்கள்.

**தனுசு:** மனதில் கலை இரசனை அதிகரிக்கும். பணிகளை நேர்த்தியாக நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வியத்தகு வளர்ச்சி நிலை உருவாகும். ஆதாய பணவரவு கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு இடையூறு விலகி அரசு தொடர்பான உதவி கிடைக்க அனுகூலம் ஏற்படும்.

**மகரம்:** எதிர்பார்ப்பு நிறைவேறுவதில் தாமதம் உருவாகலாம். தொழில், வியாபாரத்தில் அளவான பணவரவு கிடைக்கும். குழந்தைகளுக்காக பொருள்கள் வாங்கும் செலவு கூடும். சீரான ஓய்வு உடல்நலத்தை பாதுகாக்க உதவும்.

**கும்பம்:** செயல்களில் முன்யோசனை இருக்க வேண்டும். தொழிலில் உற்பத்தி, விற்பனை இலக்கை அடைய கடும் முயற்சி செய்ய வேண்டி வரும். பணியாளர்களுக்கு எதிர்பாராத சலுகை கிடைக்கும். பெண்கள் நகை இரவல் கொடுக்க வேண்டாம்.

**மீனம்:** நண்பர்களுக்கு உதவுவீர்கள். உங்கள் மீதான நன்மதிப்பு வளரும். தொழில், வியாபாரத்தில் நல்ல இலாபம் கிடைக்கும். பணியாளர்களுக்கு உபரி வருமானம் கிடைக்கும். வெகுநாள் வாங்க நினைத்த வீட்டு உபயோகப் பொருள்களை வாங்குவீர்கள்.



## வேதாளத்திலும் மைக்கைப் பிடித்த சுருதி

ஒரே சமயத்தில் நடிகர் அஜீத், விஜயின் படங்களில் வலம் வரும் சுருதிஹாசன் புலி படத்தை தொடர்ந்து வேதாளம் படத்திலும் ஒரு பாடலைப் பாடியிருக்கிறார். இந்தப் பாடலை மதன் கார்க்கி எழுத சுருதிஹாசன் தனியாக பாடியிருக்கிறார். அஜீத் – சுருதியின் நடிப்பில் இத்தாலியில் இந்தப் பாடல் காட்சி படமாக்கப்பட்டிருக்கிறது. அனிருத் இசையமைப்பில் 3 படத்தில் கண்ணழகா மான் கராத்தே படத்தில் உன் விழிகளில் போன்ற பாடல்களை ஏற்கனவே பாடியிருக்கும் சுருதி தற்போது வேதாளம் படத்திலும் பாடியிருக்கிறார். சிறுத்தை சிவா இயக்கத்தில் உருவாகி வரும் இந்தப் படத்தில் அஜீத்துடன் இணைந்து, சுருதிஹாசன், லட்சுமி மேனன், சூரி மற்றும் அஸ்வின் ஆகியோர் நடித்து வருகின்றனர். தீபவாளி வெளியீடாக வரும் வேதாளம் படத்தின் ஓடியோ இசையமைப்பாளர் அனிருத்தின் பிறந்த நாளான ஒக்ரோபர் 16ஆம் திகதியில் வெளியாகலாம் என்று கூறுகின்றனர். இதனால் மகிழ்ச்சியடைந்த அஜீத் ரசிகர்கள் ஓடியோவைக் கொண்டாடி மகிழத் தீர்மானித்து இருக்கின்றனர்.







## பேஸ் புக்கில் பிடித்தவை...







## கொஞ்சம் சிரிங்க பாஸ்...

மகன் – அம்மா எதிர்வீட்டு அக்காவின் பெயர் என்ன?
அம்மா – கமலாடா; ஏன் கேட்கிறாய்..
மகன் – அப்பாக்கு இதுகூடச் சரியா தெரியமாட்டுதாம், அந்த அக்காவ டார்லிங் என்டு கூப்பிடுரார்.

.........................

மனைவி: கொஞ்ச நாளைக்கு என்கூடச் சந்தோஷமா இருக்கிற மாதிரி நடிங்க
கணவன்: ஏன் .. .. ?
மனைவி: அதைப் பார்த்துட்டுத் தான் கண்ணை மூடுவேன் என்று உங்கட அம்மா அடம் பிடிக்கிறாங்களே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெல்லிப்பழை அரிமாக் கழகத்தின் முதியோர் தினக் கொண்டாட்டம்





வலி வடக்கு, ஒக்.03
மல்லாகம், தெல்லிப்பழை அரிமாக் கழகத்தினால் சர்வதேச முதியோர் தினக் கொண்டாட்டம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தெல்லிப்பழை அரிமாக்கழக தொழிற் பயிற்சி மண்டபத்தில் லயன் எஸ்.ஜெயராஜ் தலைமையில் நடை பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலயத் தலைவர் கலாநிதி செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் கலந்துகொண்டதுடன் அரிமாக்கழகத்தின் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களின் அரிமாக்கழக செயலாளர் கே.விக்கினேஸ் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டார். இந்த நிகழ்வில் சமூகத்துக்கு பல வழிகளிலும் சேவையாற்றிய ஆறு முதியவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.
மற்றும் லயன் கே.சுந்தரேஸ்வரன், லயன் சி. ஆறுமுகநாதன், லயன் எஸ்.சுந்தரலிங்கம் உட்பட மற்றும் பலர் உரையாற்றினர். (ஐ-86)

# தமிழ் அரசியல் கைதிகளின் 26 குடும்பங்களுக்கு உதவி

## ஏனையோருக்கு விரைவில் வழங்கப்படும்

யாழ்ப்பாணம், ஒக்.03
வடக்கு மாகாண சபை மீன்பிடி, போக்குவரத்து, கிராம அபிவிருத்தி அமைச்சால் முன்னாள் போராளிகள், தமிழ் அர சியல் கைதிகள், மாவீரர் குடும்பத் தினருக்கு வழங்கப்பட்டுவரும் வாழ்வாதார உதவிகள் இதுவரை 26 குடும்பங்களுக்கு வழங்கப்பட் டுள்ளன.
குறித்த வாழ்வாதார உதவிகளுக்காக 43 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. குறித்த வாழ்வாதார உதவிகளை பெற்றுக்கொள்வதற்காக 13 ஆயிரத்து 866 பேர் விண்ணப்பித்துள்ளனர். இவர்களில் 324 குடும்பங்கள் தமிழ் அரசியல் கைதிகள் என்ற பிரிவில் வாழ்வாதார உதவிக்கு விண்ணப்பித்துள்ளனர். அவர்களில் 26 குடும்பத்தினர் வாழ்வாதார உதவிகளை பெற்றுக்கொண்டுள்ளனர்.
இந்தத் திட்டத்தின் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும். அவர்கள் கையேந்தும் நிலை வரக்கூடாது. இது வரை 26 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. மிகுதியாய் உள்ளவர்களுக்கு அடுத்து வரும் கிழமைகளில் குறித்த உதவிகள் வழங்கப்படும் என்று அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.
தமிழ் அரசியல் கைதிகள் என்ற பிரிவில் விண்ணப்பித்தவர்களுக்கு நாம் எவ்வித பாகுபாடும் காட்டவில்லை. 50 ஆயிரம் ரூபாவுக்கு அவர்கள் வாழ்வாதாரமாக எதைக் கேட்டார்களோ அதைக் கொடுத்தோம். எவருக்கும் பணமாக கொடுக்கவில்லை. கால்நடைகள், தையல் இயந்திரம் போன்றவற்றையே கொடுத்தோம் என்று அவர் குறிப்பிட்டார்.
புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளின் 6 ஆயிரத்து 30 குடும்பங்கள், 6 ஆயிரத்து 322 மாவீரர் குடும்பங்கள், 324 உடல் அவயவங்களை இழந்தோர் உள்ளனர். ஒன்றுக்கு மேற்பட்ட பிள்ளைகளை இழந்த குடும்பத்தில் தங்கி வாழ்வோர் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு 736 பேர் உள்ளனர். இவர்களை விரைவில் சந்திக்கவுள்ளோம். அத்துடன் அவர்களுக்கான வாழ்வாதார உதவிகள் விரைவில் வழங்கப்படும். என்றார். (ற-10)

## மூன்று வர்த்தக நிலையங்களில் ஒரே நாளில் திருடர் கைவரிசை

வவுனியா, ஒக்.03
வவுனியாவில் மூன்று வர்த்தக நிலையங்களை ஒரே நாளில் உடைத்து துணிகரமாகத் திருடிய சம்பவங்கள் கடந்த 28 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது. வவுனியா கந்தசாமி கோவில் வீதி சூசைபிள்ளையார்குளம் சந்தியில் உள்ள மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகம் விற்பனை நிலையம், அதனுடன் இணைந்து இரண்டு வர்த்தக நிலையங்கள் உடைக்கப்பட்டு சுமார் 7 இலட்சம் ரூபா கொள்ளையர்களினால் களவாடப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு செய்யப்பட்டுள்ளது.
குறித்த வர்த்தக நிலையத்தின் 9 பூட்டுக் களை உடைத்து , உட் சென்று அங்கிருந்த காசாளர் மேசையின் பூட் டையும் உடைத்து அதிலிருந்த சுமார் 7 இலட்சம் ரூபாவை கொள்ளை யிட்டுள்ளனர். அத்துடன் அதன் அருகிலிருந்த இரண்டு வர்த்தக நிலையங்களும் உடைக்கப்பட்டுள்ளன. எனினும் அங்கிருந்து எதுவும்கொள்ளையிடப்படவில்லை.
மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகம் விற்பனை நிலையத்தில் 7 பேர் பணிபுரிவதாகவும், அவர்களின் சம்பளப்பணம் மற்றும் வங்கிக்கு வைப்பிலிட சேர்த்து வைக்கப்பட்ட மொத்தப்பணமும் கொள்ளையர்களினால் களவாடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. முறைப்பாட்டை அடுத்து பொலிஸார் விரைந்து செயற்பட்டதுடன் மோப்ப நாய்களை வரவழைத்து சோதனைகளையும் மேற்கொண்டனர்.
அதுமட்டுமன்றி குறித்த வர்த்தக நிலையத்தில் சி.சி.ரி. கமரா பொருத்தப்பட்டுள்ளதால் திருடர்கள் பிடி படுவதற்கு வாய்ப்புக்கள் உள்ள தா கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## கண் பரிசோதனையும் கண்ணாடி வழங்கலும்

யாழ்ப்பாணம், ஒக்.03
யாழ். அரிமாக்கழகத்தின் அனுசரணையுடனும், யாழ். போதனா வைத்தியசாலையின் ஒத்துழைப்புடனும், யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் உலக பார்வை தினத்தை முன்னிட்டு எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 8 ஆம் திகதி வியாழக்கிழமை பார்வைக் குறைபாடுடைய பயனாளிகளுக்கு இலவச கண் பரிசோதனை மேற்கொண்டு மூக்குக் கண்ணாடிகளை வழங்கவுள்ளதாக யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் பொருளாளர் வைத்தியர் எஸ்.தெய் வேந்திரன் தெரிவித்துள்ளார். (ஐ-ரி2)

## பட்டப்பகலில் திருட்டு

யாழ்ப்பாணம், ஒக்.03
பட்டப்பகலில் வீட்டில் எவரும் இல்லாத சமயம் பார்த்து குளியலறை வழியாக வீட்டுக்குள் புகுந்த திருடன், அங்கு அலுமாரியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த 2 ஆயிரம் ரூபா பணம் உட்பட 10 பவுண் தங்க நகைகளையும் திருடிச் சென்றுள்ளான். இந்தத் துணிகரமான திருட்டு சுதுமலை வடக்குப் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் கடந்த வாரம் இடம் பெற்றுள்ளது.
உறவினர் வீட்டில் இடம்பெற்ற திருமண வைபவத்துக்குச் செல்வதற்காக, பாதுகாப்புக் கருதி வங்கியிலுள்ள பாதுகாப்புப் பெட்டகத்தில் வைக்கப்பட்டிருந்த தங்க நகைகளில் ஒரு பகுதியை எடுத்து வந்த குடும்பஸ்தர் திருமணம் முடிந்ததையடுத்து மீண்டும் வங்கியின் பெட்டகத்தில் சேர்ப்பதற்காக அவற்றை அலுமாரியில் வைத்துப் பாதுகாப்பாகப் பூட்டி வைத்திருந் தார். சம்பவதினம் கணவனும் மனைவியும் வேலைக்குச் சென்ற சமயம் பார்த்து குளியலறை வழியாக வீட்டுக்குள் தந்திரமாக நுழைந்த திருடன் அலுமாரியை உடைத்து சல்லடை போட்டுப் பாதுகாப்பாக மறைத்து வைக்கப்பட்டிருந்த 2ஆயிரம் ரூபா பணம் உட்பட 10 பவுண் தங்க நகைகளையும் திருடிச் சென்றுள்ளான்.
இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து அங்கு விரைந்து சென்ற பொலிஸார் கைவிரல் அடையாளங்களைப் பதிவு செய்ததுடன் தொடர்ந்தும் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (ஐ-115)

## சாவுத் தண்டனையை நடைமுறைப்படுத்தும் முயற்சி உறுப்பினர்கள், அமைச்சர்களுக்கிடையில் பிளவு

கொழும்பு, ஒக்.03
சாவுத் தண்டனையை நடைமுறைக்குக் கொண்டு வரும் முயற்சி தொடர்பாக அரசின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் இரு கட்சிகளாகப் பிளவுபட்டு நிற்பதாகத் தெரியவந்துள்ளது. இலங்கையில் நாளுக்கு நாள் சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரித்து வருவது மற்றும் ஏனைய பாரதூரமான குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக மீண்டும் சாவுத் தண்டனையை நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும் என்ற மக்களின் கோரிக்கைக்கு அரசின் ஒரு தரப்பு அமைச்சர்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அதேவேளை சாவுத் தண்டனையை நடைமுறைப்படுத்துவதால் குற்றச்செயல்களை ஒழித்துவிடுவது சாத்தியமற்றது என சர்வதேச ரீதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்டுள்ள ஆய்வுகளில் உறுதிப்படுத்தப் பட்டி ருப்பதாகவும் அதனால் சாவுத் தண்டனையை நடைமுறைக்குக் கொண்டுவருவது என்பது அடிப்படையற்ற வாதமொன்றாகும் என்பது அந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் கருத்துக்களாகி இருப்பதாகவும் தெரியவந்துள்ளது. ஆனாலும், சாவுத் தண்டனையை கட்டாயம் நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டியுள்ளது என்பது அரசின் பிறிதொரு தரப்பு நாடாளு மன்ற உறுப்பினர்களினதும் அமைச்சர்களினதும் கருத்து நிலைப்பாடாகியுள்ளது. (ஐ-22)

# டொலர் பெறுமதி உயர்வால் இறக்குமதியாளர்கள் சிரமம்

கொழும்பு, ஒக் 03
அமெரிக்க டொலரின் பெறுமதி 140 ரூபாவாக உயர்ந்துள்ளதால் இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருள்களின் விலைகளும் உயர்வடைந்துள்ளமை காரணமாக தாம் கடும் சிரமத்துக்கு உள்ளாகி யிருப்பதாக புறக்கோட்டை உணவுப் பொருள் இறக்குமதியாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.
விசேடமாக சீனி, பருப்பு, கடலை போன்ற சில்லறை விலைக்கட்டுப்பாட்டில் உள்ள உணவுப் பொருள்களுக்கு அண்மையில் அரசினால் வரி அதிகரிக்கப்பட்டதன் காரணமாகத் தமக்கு அந்த உணவுப் பொருள்களின் விற்பனையில் நட்டம் ஏற்பட்டுள்ளதாக அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.
இறக்குமதி செய்யப்படும் சீனி, உருளைக்கிழங்கு, பருப்பு போன்ற உணவுப் பொருள்களிலிருந்து கிடைக்கும் இலாப இடைவெளி பெ[illegible] படுவதாலும், ரூபா[illegible] தல் மற்றும் இறக்குமதி வரி விகிதாசாரம் அதிகரிக்கப்படுதல் காரணமாகவும் ஏற்படும் விலை அதிகரிப்பை நுகர்வோர் மீது சுமத்துவதைத் தவிர வேறு வழி இல்லை எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.
உதாரணமாக வரி விதிக்கப்படுவதற்கு முன்னர் ஒரு கிலோ சீனியில் இருந்து தமக்கு ஒரு ரூபா, ஒரு ரூபா 50 சதம் என்ற மிகச் சொற்ப அளவான இலாபமே கிடைத்திருந்ததாகச் சுட்டிக்காட்டும் புறக் கோட்டை [illegible] தமது சங்கம் [illegible] சபைக்குத் தெரியப் படுத்தியிருந்தபோதும் இது வரை தீர்வு கிடைக்கவில்லை எனவும் கூறினர். (த-22)

## வவுனியாவில் ரயிலில் மோதி ஒருவர் சாவு

வவுனியா, ஒக்.03
வவுனியா ஈரற்பெரியகுளம் பகுதியில் ரயிலில் மோதி உயிரிழந்த நிலையில் ஒருவரின் சடலம் வவுனியா பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
கடந்த 30 ஆம் திகதி ஈரற்பெரியகுளம் பகுதியில் இரவு ரயிலில் மோதி 40 வயது மதிக்கத்தக்க ஒருவர் இறந்த நிலையில் மதவாச்சி மாவட்ட வைத்திய சாலையில் ரயில் நிலைய ஊழியர்களினால் சடலம் ஒப்படைக்கப் பட் டது. எனினும் இறந்தவரை இனங்காண்பதற்காக வவுனியா பொது வைத்தியசாலையில் நேற்று முன்தினம் பிற்பகல் சடலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
இவர் யார்?, தற்கொலை செய்து கொண்டாரா? என்பன போன்ற விடயங்கள் தெரியவரவில்லை. இவர் யார் என்பதை உறுதிப் படுத்துவதற்கான ஆவணம் எதுவும் இவரிடம் காணப்படவில்லை என்றும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் மதியபோசன அழைப்பும்



அமரர் பெரியதம்பி
**கலாரூபன்** (நியூசிலாந்து)

பிறப்பு
02.05.1960

இறப்பு
04.09.2015

எமது சகோதரன் கலாரூபனின் மரணச்செய்தி கேட்டு பல்வேறு வழிகளிலும் உதவியும் ஆறுதலும் அளித்த அனைவருக்கும், நேர்முகத்திலும், தொலைத்தொடர்பு சாதனங்கள் மூலமும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், தேடிவந்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், போசனம் அளித்து உதவியவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கியோருக்கும் எமது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு நாளை (04.10.2015) ஞாயிற்றுக்கிழமை அவரது மூத்த சகோதரியின் இல்லத்தில் இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்மாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

சிவன்கோயிலடி புத்தூர் மேற்கு,
புத்தூர்.

சாம்பமூர்த்தி சிவஞானதேவி குடும்பம்
விக்னேஸ்வரன் விஜயலட்சுமி குடும்பம்
திருஞானசம்பந்தர் அமிர்தகௌரி குடும்பம்

(65022) (13.15)



# முதலாம் ஆண்டு நினைவு தின அழைப்பு



கடந்த 14.10.2014 செவ்வாய்க்கிழமை
சிவபதம் அடைந்த
எமது குடும்பத் தலைவர்

**அமரர் கந்தையா நயினார்**
(அம்பாள் பழைய பாடல்கடை உரிமையாளர்)

தோற்றம்
10.01.1947

மறைவு
14.10.2014

அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவு தினக் கிரியைகள் நாளை (04.10.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

இல.5,5ஆம் ஒழுங்கை,
அரசடி வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்.**



# 14 ஆம் ஆண்டு பிரிவின் நினைவலைகள்

03.10.2015

திரு முகிழ்ப்பு
01.03.1939



திரு அவிழ்ப்பு
03.10.2001

வட இலங்கை சர்வோதய ஸ்தாபகரும், ஜீவதானியும், சமூக சேவையாளருமாகிய

**தொண்டர் கந்தையா திருநாவுக்கரசு**

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

'எனையீன்ற தந்தைக்கும் தாய்க்கும் – மக்கள்
இனமீன்ற தமிழ்நாடு தனக்கும் – என்னால்
தினையளவு பயனேதும் கிடைக்குமென்றால்
செத்தொழியும் நாளெனக்குத் திருநாளாகும்"

இறுதி மூச்சுவரை வாழ்ந்து காட்டி விட்டுச் சென்ற எம் தந்தையே! நீங்கள் மறைந்து ஆண்டுகள் ஈரேழு சென்றாலும் உங்கள் ஆத்மா சிவயோக சுவாமிகளின் திருவடி நிழலில் சாய்ந்து நிற்க பிரார்த்திக்கின்றோம்.

சர்வோதய சேவைவனிதம்,
புங்குடுதீவு. (65049) (13.15.16)

வட இலங்கை சர்வோதய
குடும்பத்தினர்.


## சர்வோதய ஸ்தாபகரின் 14 ஆவது நினைவு தினம்

யாழ்ப்பாணம்,ஒக்.3

புங்குடுதீவு வட இலங்கை சர்வோதய ஸ்தாபகர் க.திருநாவுக்கரசுவின் 14 ஆவது நினைவு தினம் இன்று சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு புங்குடுதீவு சர்வோதய சேவை வளாகம் புஸ்பா மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

க.புஸ்பமணி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வட இலங்கை அறங்காவலர் செல்வி பொ.ஜமுனா தேவி, பேராசிரியர் கா.குகபாலன், ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் த.தர்மராஜா, ஓய்வுநிலை அதிபர் செல்வி மகேஸ்வரி சுப்பிரமணியம், சேர். துரைசாமி வித்தியாலய அதிபர் திருமதி க.மகாராணி, வேலணை பிரதேச செயலக காணி உத்தியோகத்தர் செல்வி பூராசா அன்பரசி ஆகியோர் உரை நிகழ்த்துவர். நிகழ்வில் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (ஐ–7)

## வவுனியாவில் புதையல் தோண்டிய விவகாரம் பிரதி பொலிஸ்மா அதிபருக்கு விளக்கமறியல்

வவுனியா,ஒக்.3

புதையல் தோண்டிய விவகாரம் தொடர்பில் கைது செய்யப்பட்ட வவுனியா, மன்னார் மாவட்டத்தின் முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் யூ.கே.திஸநாயக்காவை எதிர்வரும் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா மாவட்ட நீதிவான் வி.இராமகமலன் கடந்த 30 ஆம் திகதி உத்தரவு பிறப்பித்துள்ளார். வவுனியா, குடாகச்சகொடி பிரதேசத்தில் புதையல் தோண்டிய விவகாரம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த வவுனியா, மன்னார் மாவட்ட முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட 9 பேரின் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த வவுனியா மாவட்ட நீதிவான், குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டவர்களில் 6 பேரை தலா ஒரு லட்சம் ரூபாய் சரீரப் பிணை யிலும், ஒருவரை ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபா சரீர பிணையிலும் விடு வித்ததுடன், பிரதிப் பொலிஸ் மா அதிபர் யூ.கே.திஸ்ஸநாயக்கா மற்றும் அவருக்கு உடந்தையாக செயற்பட்ட பொலிஸ் அதிகாரி ஆகிய இருவரையும் எதிர்வரும் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவு பிறப்பித்தார். (ஐ–402)

## நல்லூர் லயன்ஸ் கழகத்தின் இலவச வைத்திய முகாம்

யாழ்ப்பாணம், ஒக்.3

நல்லூர் லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் இலவச வைத்திய முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிமுதல் பிற்பகல் 1.00 மணிவரை கர்த்தர் ஆலயம், 5ஆம் குறுக்குத் தெரு மணியந்தோட்டம், மற்றும் மணிப்புரி முன்பள்ளி, 6ஆம் குறுக்குத் தெரு, மணியந்தோட்டம் ஆகியவற்றில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் தொற்று நோய்கள் சம்பந்தமான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடைபெறவுள்ளதுடன் வைத்திய நிபு ணர்களின் உதவியுடன் நீரிழிவு, இரத்த அழுத்தம், பொது மருத்துவம் சம்பந்தமான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு மருந்துகள் இலவசமாக வழங்கப்படும் எனவும் இலவச கண் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படும் எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன் கண்பரி சோதனையும் மூக்குக் கண்ணாடி வழங்கலும் மணிப்புரி முன்பள்ளி மண்டபத்தில் நடைபெறும் எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ–10)


# ஒன்பதாம் ஆண்டு நினைவலைகள்



அமரர் **இராசரத்தினம் இரத்தினவேல்**
(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர் - கச்சேரி.யாழ்ப்பாணம்.
சமாதான நீதிவான்)

திதி: சஷ்டி (03.10.2015)

உதிப்பு
05.09.1927

உதிர்வு
12.10.2006

காலந்தான் மறைந்தாலும் கண்களைவிட்டு மறையா ஒளிதீபம்
அன்பு நிறை பேரொளியாய் - எம் அகத்தினில்
குடிகொண்டுள்ளார் இன்சொல்லால் பாசமழை பொழிந்து
எமையெலாம் வாழ்வித்த எம் தெய்வம்
ஆண்டுகள் தான் ஒன்பது கடந்தபோதும்
அழியாது உங்கள் நினைவு எங்கள் நெஞ்சில்

அரச வீதி,
உரும்பிராய். (A 19142) (13.15)

குடும்பத்தினர்.



# முதலாம் வருட நினைவஞ்சலி

திருமதி பிலோமினா இராசேந்திரம் (ஞானம்)

ஆண்டொன்று ஆனதுவோ
அம்மா நாம் உமை இழந்து....
மாண்டார் வரரென்பது
மனதறியும் அறிந்தாலும்....
நீண்ட இரவுகளில்
நிழலாகும் உங்கள் நினைவு...
ஆண்டவனின் பாதம் சேர்ந்து
அமைதி பெற வேண்டுகின்றோம்...

(65077) (13.15)



குடும்பத்தினர்.
"ஞானஸ்தான்"
சிற்றம்பலபுரம், அச்சுவேலி.

பிறப்பு
22.01.1936

இறப்பு
03.10.2014


## சனீஸ்வர ஹோமம் இன்று

சாவகச்சேரி,ஒக்.3

வேரவில் வெள்ளிப்பள்ளத்து வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை சனீஸ்வர ஹோமம் இடம்பெறும். சனி தோச முள்ள துலாம், விருட்சிகம், தனு, மேடம், இடபம், சிங்கம், கும்பம், மீனம் ஆகிய ராசிகளைச் சேர்ந்தவர்களை ஹோமத்தில் கலந்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ–9)

## கல்விச்சுற்றுலா

யாழ்ப்பாணம, ஒக்.3

நெல்லியடி சன சமூக நிலை சன்மார்க்க சபை முன்பள்ளி மாணவர்கள் இன்று சனிக்கிழமை யாழ். குடாநாட்டில் கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர். இதில் 50 மாணவர்களும், அவர்களின் பெற்றோர்களும், ஆசிரியர்களும் செல்லவுள்ளனர். (ஐ–35)


# 28 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தாயார்
Rajah Mahendran
RETD.SLAF, INDRAN
Consultant Vasanthy
ஓய்வுபெற்ற லயனர்

Suresh | Priyanthi | Mahendraraj

மறைவு
03 / 11 / 1987

உடுவில்

Vasanthy Sivapatham இத்தின் அன்பும் புதல்வர்கள்

இருபத்தி தெட்டு ஆண்டுகள் ஆனாலும் ஆறிடுமோ எம் நெஞ்சம்
அன்பால் அனைவரையும் கவர்ந்துவிட்டுச் சென்றதேனோ?
என்றும் நீங்கள் எம் நெஞ்சில் வாழ்ந்திட இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

80/5, MAF VILLA மானிப்பாய் வீதி, உடுவில்.

குடும்பத்தினர்.

(65059) (13.15)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களின் பாதுகாப்பு நாட்டில் தங்கியுள்ளது

## ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.03

பிள்ளைகளின் பாதுகாப்புக்கான முழுப் பொறுப்பும் தேசத்தின் மீதுள்ளது. எனினும் இந்தப் பொறுப்புத் தட்டிக்கழிக்கப்படுவதை அண்மைய நிகழ்வுகள் சுட்டிக்காட்டியுள்ளன. இவற்றை மாற்றுவதற்காக சட்ட நடைமுறைகளில் ஏற்பாடுகளைச் செய்வதற்கோ, திருத்தத்தை ஏற்படுத்தவோ அல்லது புதிய சட்டத்தை அறிமுகப்படுத்தவோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஒரு தேசம் அல்லது மக்கள் சமூகம் தமது மக்கள் மற்றும் பிள்ளைகளுக்கு வழங்கும் அன்பு மற்றும் பராமரிப்பின் அடிப்படையிலேயே உலகில் உயர் அங் கீகாரம் பெறுகின்றது.



மனித நாகரிகத்தின் உயர் பெறுமானம் சிறுவர்களுக்கான அன்பும் இரக்கமும் ஆகும். இதனால் தான் உலகில் மிகச் சிறந்தவை சிறுவர்களுக்கானவை என்று சொல்லப்படுகிறது.

சிறுவர்களுக்கான பாதுகாப்பை முதலில் பெற்றோர்களும் பின்பு ஆசிரியர்களும் மூன்றாவதாகப் பெரியவர்களும் வழங்க வேண்டும். ஆனால் இன்று இந்த நிலை மாறியுள்ளது. இவற்றைத் திருத்துவதற்கான சட்டமுறை ஏற்பாடுகள் செய்யப்படுதல் வேண்டும். சிறுவர்களுக்கான இடர்களைத் தடுப்பதற்கு பெற்றோர்களும், வளர்ந்தவர்களும் மற்றும் சமூகமும் தம்மை அர்ப்பணிக்க வேண்டும். பெற்றோர்களின் தொடர்ச்சியான கவனம் பிள்ளைகளின் பாதுகாப்புக்கான உத்தரவாதம் என்பதைப் பெற்றோர் உணர்ந்து கொள்ள வேண்டும். இவை தவறும் பட்சத்தில் சிறுவர்கள் மீதான அசம்பாவிதத்துக்கான அழைப்பாக இது மாறிவிடுகின்றது எனக் குறிப்பிட்டுள்ளார். (ஐ–ரி5)

## யாழ்ப்பாண தமிழ்ச் சங்கத்தின் பாரதி விழா

யாழ்ப்பாணம்,ஒக்.03

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் நடத்தும் பாரதி விழா எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ்ச்சங்கத்தின் பெருந்தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர் வடிவாம்பிகை சுபதாஸ், தமிழ்த்தாய் வாழ்த்திசைக்கவுள்ளதுடன் நிகழ்வின் அனுசரணையாளரான கிருபா லேணர்ஸ் உரிமையாளர் கிருபாகரன் தம்பதியர் மங்கல விளக்கேற்றவுள்ளனர். அத்துடன் தமிழ்ச் சங்கப் பொருளாளர் ச.லலீசன் வரவேற்புரையையும் இந்தியத் துணைத் தூதர் ஆ.நடராஜன் தொடக்கவுரையையும் வழங்கவுள்ளனர். பாரதி கண்ட அதியுயர் மானுடம் எனும் கருப் பொருளில் கோகிலா மகேந்திரனின் சிறப்புரையும், யாழ். முன்னணிக் கலைஞர்கள் இணைந்து வழங்கும் எட்டயபுரத்து ஏழிசை என்ற பொருளில் பாரதி பாடல்கள் இசை நிகழ்ச்சியும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நடனத்துறை விரிவுரையாளர் சத்தியப்பிரியா கஜேந்திரனிள் நெறியாள்கையில் நீர்வேலி பொன்சக்தி கலாகேந்திரா நாட்டியப்பள்ளியினர் வழங்கும் உதயகன்னி என்ற நாட்டிய நாடகமும் இடம்பெறவுள்ளன. தமிழ்ச் சங்கத் துணைச்செயலர் லோ.துஷிகரன் நன்றியுரை வழங்குவார். மேற்படி நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்பாளர்கள் தெரிவித்துள்ள னர். (ஐ–10)

## நெடுந்தீவில் இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், ஒக்.03

லண்டனில் இருந்து வந்து இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் மருத்துவ முகாம்களை நடத்திவரும் மருத்துவக் குழுவினரால் இன்று சனிக்கிழமை நெடுந்தீவில் இலவச மருத்துவ முகாம் நடத்தப்படவுள்ளது. வைத்தியகலாநிதி எஸ்.சதானந்தனின் அனுசரணையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் இருதய சிகிச்சை, குடல் தொடர்பான சத்திர சிகிச்சை நிபுணர்கள், குழந்தை வைத்திய நிபுணர்கள், சிறுநீரடைப்பு, நாளப்புடைப்பு, சத்திரசிகிச்சை நிபுணர்கள், கண் சிகிச்சை, சீறுநீரகக்கல், கண்பரிசோதனை நிபுணர்கள், மூக்கு மற்றும் தொண்டை சத்திர சிகிச்சை நிபுணர்கள் கலந்து கொள்கிறார்கள். தேவா கலாசார மண்டபத்தில் நடைபெறும் இந்த நிகழ்வில் அடையாளம் காணப்படும் நோயாளர்களுக்கான கண் சத்திர சிகிச்சை நாளை மறுதினம் முதல் 7 ஆம் திகதி வரை யாழ்.போதனா வைத்தியசாலையிலும் ஏனைய சத்திரசிகிச்சை நிலையங்களிலும் நடைபெறவுள்ளன. இலவசமாக நோயாளர்களுக்கான போக்குவரத்து வசதியும் வழங்கப்படும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ள னர். (ஐ–7)

## அத்துமீறிப் பிரவேசித்த பொலிஸ் உத்தியோகத்தரை வீட்டு உரிமையாளரிடம் மன்னிப்புக் கோரப் பணிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.03

மதுபோதையில் கொழும்புத்துறையில் உள்ள வீடொன்றுக்குள் இரவு நேரம் அத்துமீறிப் பிரவேசித்த பொலிஸ் உத்தியோகத்தரை வீட்டு உரிமையாளரிடம் மன்னிப்பு கோருமாறு பணித்த நீதிமன்றம் அவரைக் கடுமையாக எச்சரித்து விடுவித்தது.

கடந்த ஜுலை மாதம் கொழும்புத்துறையில் உள்ள வீடொன்றுக்குள் சாதாரண உடையில் இரவு நேரம் மதுபோதையில் அத்துமீறிப் பிரவேசித்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர், கிராமவாசிகளால் பிடிக்கப்பட்டு 119 அவசர பொலிஸ் அழைப்புக்கு தகவல் தெரிவித்ததையடுத்து பொலிசாரினால் கைது செய்யப்பட்டிருந்தார். இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றியவராவார். பின்னர் பொலிஸார் அவரை யாழ்.நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்திய வேளை நீதிமன்றம் அவரை ஆட்பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டிருந்தது. இந்த வழக்கு விளக்கத்துக்கு எடுக்கப்பட்டபோது வீட்டு உரிமையாளர் வழக்கை இணக்கமாக முடிக்க விரும்புவதாகத் தெரிவித்தார். அதனையடுத்து பொலிஸ் உத்தியோகத்தரை வீட்டு உரிமையாளரிடம் மன்னிப்பு கோருமாறு பணித்த நீதிமன்றம் அவரைக் கடுமையாக எச்சரித்து விடுவித்தது. (ஐ–103)

## இரவு வீதியில் நின்ற இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணம்,ஒக்.03

சங்கானைச் சந்தைப் பகுதியில், காரணம் எதுவுமின்றி இரவு நேரம் நின்ற சில இளைஞர்களைக் கடந்த 30 ஆம் திகதி மானிப்பாய் பொலிஸார் கைது செய்து பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர். பெற்றோர்கள் பொலிஸ் நிலையம் சென்று விடுவிக்குமாறு கேட்டும் பொலிஸார் அவர்களை விடவில்லை எனப் பெற்றோர் தெரிவிக்கின்றனர். அவர்களின் சைக்கிள்கள் அடுத்த நாள் காலை வரை தேடுவாரற்று வீதியோரத்தில் காணப்பட்டன. (ஐ–29)

## அறநெறி ஆசிரியர்களுக்கான சான்றிதழ் பயிற்சி நெறிகள்

பதிவு செய்யப்பட்ட இந்து சமய அறநெறி ஆசிரியர்களுக்கான சான்றிதழ் பயிற்சி நெறிகள் வழங்கப்படவுள்ளதாக இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது. ஆசிரியர்களின் கல்வித்தரத்தைச் சீராக்கும் வகையில் பல்கலைக் கழகங்களுடன் இணைந்து 2016 ஆம் ஆண்டு வழங்கப்படவுள்ள மேற்படி பயிற்சி நெறிக்கான ஆரம்பக்கட்ட பயிற்சிகள் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக் கிழமையும் கொழும்பு இராம கிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இருநாள் வதிவிடக் கருத் தரங் காக நடைபெறும் இந்த நிகழ்வில் விண்ணப்பித்த ஆசிரியர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் தெரிவித்துள்ளார். (ஐ–ரி5)

## இலங்கையில் நல்லிணக்கம் இப்போது சாத்தியமில்லை

வவுனியா,ஒக்.03

இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடாக இருக்கும் வரையில் நல்லிணக்கம் என்பது சாத்தியமில்லை என்று அருட்தந்தை எஸ்.செல்வரட்ணம் தெரிவித்தார். தமிழர் மீதான மனித உரிமை மீறலுக்கு சர்வதேச விசாரணையே தேவை என வலியுறுத்தி வவுனியா நகரசபை மண்டபத்தில் கடந்த 27 ஆம் திகதி நடைபெற்ற சமூக சிவில் அமைப்புக்களின் கலந்துரையாடல் ஒன்றின்போதே அருட்தந்தை எஸ்.செல்வரட்ணம் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கும்போது, நாங்கள் சர்வதேச விசாரணையைக் கோருவதானது பழிக்குப் பழி, குருதிக்குக் குருதி வாங்க வேண்டும் என்பதற்காக அல்ல. நாங்கள் எவரையும் மின்சாரக் கதிரையில் உட்கார வைப்பதற்காகச் சர்வதேச விசாரணையைக் கோரவில்லை. இலங்கை இராணுவத்தால் நடத்தப்பட்ட தமிழ் மக்களின் கொலைகளுக்கு பொறுப்புக்கூறப்பட வேண்டும் அவ்வாறு அரசால் பொறுப்புக் கூறப்படும் பட்சத்தில் நாங்கள் மன்னிப்பதற்குத் தயாராகவிருக்கிறோம் எனத் தெரிவித்தார். (ஐ–402)


**ஆள்கள் தேவை**

யாழ் நகரில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஐஸ்கிறீம் மற்றும் சைவ உணவகத்திற்கு கீழ்க்காணும் வெற்றிடங்கள் உள்ளன.

- சமையலாளர்கள் (ஆண்/பெண்)
- உதவி சமையலாளர்கள் (ஆண்/பெண்)
- சுத்திகரிப்பாளர் (ஆண்/பெண்)
- உணவு பரிமாறுபவர்கள் waiters (ஆண்கள் மட்டும்)
- சிற்றுண்டி தயாரிப்போர் (ஆண்/பெண்)
- ரீ மேக்கர் (ஆண்கள்)
- அனுபவமுள்ள ஐஸ்கிறீம் வாகன சாரதி (A Licence)

உடன் தொடர்பு கொள்ளவும்

குமார் : 077 771 0785

442, Hospital Road, Jaffna.

**WANTED** We are Partners of British Council - and City and Guilds

எமது கல்லூரிக்கு ஒர் Manager / Teaching Assistant தேவை (Female)

தகமை :- GCE A/L வரை படித்திருத்தல் வேண்டும்.

Salary SLR 10,000/= மேல் C.Vயுடன் நேரில் வரவும்

BIRITISH COLLEGE OF ENGLISH

192- Navalar Road Jaffna. T.P :- 021 222 0384/ 077 88 038 87

**Invitation for Bids**

Still Photography and Video for General Convocation - 2015

Further to the advertisement appeared on 02.10.2015 regarding the above Invitation for Bids. the closing date for purchasing of bidding documents mentioned in paragraph 4 to be read as 16th October, 2015.

Registrar
University of Jaffna.

(C/19154)(10.15.17)

**வேலையாள்கள் தேவை**

Colombo Paint Center வில்லு மதவடி, நீர்வேலி, கோப்பாயில் உள்ள எமது நிறுவனத்துக்கு நிறக்கலவையை பொதி செய்வதற்கு பெண் வேலையாள்கள் தேவை. தகைமை தேவையில்லை.

(65102) (14.15) தொடர்பு : 077 433 0210

**காணி வீடு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், சுண்டுக்குளிக்கு அருகில் நில.பர. 2 குளி 0.25 விஸ்தீரணம் 6 அறைகள் கொண்ட வீட்டுடன் கிணறும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 077 0229 762, 076 535 6714

**அறைகள் வாடகைக்கு**

வெள்ளவத்தையில் அறைகள் நாள் வாடகைக்கு 600/=, 1200/=, 2500/=, A/C, TV - 4000/= (Attached Bathroom) காலி வீதிக்கு முகப்பாக இராமகிருஷ்ண பெட்ரோல் ஷெட்டிற்கு அருகில்.

Hotel Villa - 0114999944, 0722552222

**தேவை**

ஊர்க்கோழிகள், கல்பேட் தினமும் கொள்வனவு செய்யப்படும்.

தொடர்பு: தாசன் பாம்

158/3, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

077 3127 498 (65098) (10.17)

**விற்பனைக்குண்டு**

கோழிஎரு, மேசை(லாச்சியுடன், வேம்பு), காப்பெற்(10யார் ...

(65087) (14.15) தொடர்பு : 077 824 7496

**NSB பகிரங்க ஏல விற்பனை**

தேசிய சேமிப்பு வங்கியின் கீழ்வரும் கிளைகளில் அடகுவைக்கப்பட்டு31.05.2014 வரை மீட்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாத தங்க ஆபரணங்கள் நாளை (03.10.2015) சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு அந்தந்த கிளைகளிலேயே பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

01. ஊர்காவற்றுறை
02. நெல்லியடி
03.வங்காலை
04. சாவகச்சேரி
05. பருத்தித்துறை

ஏலத்தை இரத்துச்செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

வடபிராந்திய முகாமையாளர்
தேசிய சேமிப்பு வங்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021-492 7474, 021-492 7475, 021-567 9933, 021-567 9944

விளம்பரம் : 021-493 1111

விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com

விளம்பரம்: advt@uthayan.com

## தமிழர் தமது அரசியல் தலைவிதியை நிர்ணயிக்கும் வரை பொடுபோக்கா?

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை யின் ஆணையாளர் சயிட் அல் ஹுசைனின், பிரசித்தமான உரையை இந்தப் பந்தியில் நேற்றைய தினம் அலசி ஆராய்ந்து இருந்தோம்.

இலங்கை அரசு தனது உள்ளக விசாரணையை நடத்துவதற்கு, தற்காலிகமாகவேனும் சிறப்பு நீதிமன்றம் ஒன்றின் மூலமே கலப்பு நீதிமன்றச் செயலாக்கத்தை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தி இருந்தார்.

அவர் தமது அறிக்கையில், முன்னைய (மகிந்த) அரசின் காலத்தில் காணாமற் போனவர்கள் குறித்த முறைப்பாடுகளை விசாரிக்க கொழும்பு அரசால் நியமிக்கப்பட்ட மக்ஸ்வெல் பரணகம ஆணைக்குழுவின் நம்பகத்தன்மை மற்றும் செயற்றிறன் பரவலான கவலைகளை உண்டாக்கி உள்ளதாக விமர்சித்திருந்தார். அத்தோடன்றி, குறிப்பிட்ட விசாரணைக்குழு கலைக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தி இருந்தார்.

ஆனால் மனித உரிமைகள் சபையின் செயலாளர் தெரிவித்த கருத்துக்களைச் சாடி உள்ளதோடு, தமது நிலைப்பாடுகளையும் வெளிப்படுத்தி உள்ளார் பரணகம.

எமது ஆணைக்குழுவை விடவும் வேறு எவராலும் இந்தப் பணியைச் சிறப்பாகச் செய்திருக்க இயலாது என்றும் அவர் காட்டமாகச் சுட்டிக் காட்டி உள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மட்டும் பதினாறாயிரம் மக்களிடம் விசாரணை நடத்தப்பட்டது என்றும், மொத்தத்தில் பத்தொன்பதாயிரம் பேர்களிடம் வெளிப்படைத் தன்மையுடன் விசாரணைகள் நடத்தப்பட்டன என்றும் தெரிவித்திருக்கிறார்.

விசாரணைகளை அடிப்படையாக வைத்து அறிக்கை தயாரிக்கப்படுகிறது. ஜனாதிபதி நாடு திரும்பியதும், அவரிடம் நேரத்தை ஒதுக்குவித்து அறிக்கையைச் சமர்ப்பிக்க உத்தேசித்து உள்ளோம் என ஆணைக்குழுவின் தலைவர் தகவல் வெளியிட்டிருக்கிறார். நல்லது; வரவேற்கத்தக்கது.

எனினும் கடந்த ஆண்டில் மன்னாரில் நடைபெற்ற, மேற்படி ஆணைக்குழுவின் விசாரணை ஒன்றின்போது இடம்பெற்ற நிகழ்வு இங்கு நினைவூட்டத் தக்கதாகும்.

மன்னார் ஆயர் அதிவண இராயப்பு ஜோசெப் ஆண்டகை ஆணைக்குழுவின் முன் வாய் மூலம் சாட்சியம் அளிக்க மறுத்து, ஏழு பக்கங்கள் கொண்ட எழுத்து மூலமான அறிக்கையைச் சமர்ப்பித்த சம்பவம் மூலம், இலங்கையில் அப்போதைய அரசின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட பல வகைப்பட்ட அரச விசாரணைகளின் சீத்துவத்தை இந்நாட்டு மக்கள் மட்டுமன்றி அனைத்துலக நிபுணர்களும் நன்கு அறிந்திருப்பர்.

மொத்தத்தில்--

காணாமற் போனோர்-- இல்லை, இல்லை காணமற் போகச் செய்யப்பட்ட ஆயிரக் கணக்கான தமிழ் மக்கள், வடக்கிலும் கிழக்கிலும், என்ன ஆனார்கள், அவர்களுக்கு ஏது நடந்தது என்பது சாடைமாடையாகவேனும், அண்ணளவாகவேனும் தெரியாமையால்--

அவர்களின் உறவுகள், அல்லும், பகலும் அனைவரதமும், நித்தம் நித்தம் செத்துக்கொண்டிருக்கிறார்கள்.

இது பெரும் மனிதாபிமான, மனித நேயத் "தகராறு" என்பதனை புதிய சிறிசேன, ரணில் அரசு, புரிந்துகொள்ளும், நினைக்கத் தானும் மனம் விரும்பும் என்பதற்கான ஒருதுளி சமிக்ஞை தானும் தென்படவில்லை.


தமிழ் மக்கள் தம்மை இலங்கையின் பிரசைகள் என்று உள்ளூர நினைப்பதற்கான, எந்த வகை வழியும் வசதியும் கைக்கு எட்டாக்கனியாக, மிக மிகத் தொலைவில்தானும் தென்படவில்லையே.

நல்லாட்சி என்பதனைக் கனவிலேனும் அவர்கள் காண முடியாதவாறு கொழும்பு அரசு, அது எவ்வகை சார்ந்தது, எந்த நிறமுடையது என்ற வேறுபாடு இன்றி, --

வெறும் பேச்சுப் பல்லக்கு தம்பி கால்நடை என்ற வகை சார்ந்தே இந்த நாட்டின் அரசியல் வாய்ப்பாடு பருத்து வருகிறது! தமிழ் மக்கள் தமது அரசியல் தலைவிதியைத் தாமே நிர்ணயிக்கும் நிலை கிட்டும் வரை எமக்கு இந்தப் பொடுபோக்கே தொடரப்போகிறதா...?

# இனியும் இந்தியாவை நம்புவதால் ஏமாற்றமே கிடைக்கும்

■ சேரலாதன்



இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியா தனது முன்னைய நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டதாகத் தெரியவில்லை. மத்தியில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளபோதிலும் நரேந்திரமோடி தலைமையிலான இந்திய அரசு, காங்கிரஸ் ஆட்சியின் வழியிலேயே இலங்கைப் பிரச்சினையைக் கையாண்டு வருகின்றது. இதனால் உலகில் வாழுகின்ற ஒட்டுமொத்தத் தமிழர்களும் பெரும் ஏமாற்றமடைந்துள்ளனர்.


சோனியா காந்தியின் வழிகாட்டலின் கீழ் இயங்கி வந்த மன்மோகன் சிங் தலைமையிலான காங்கிரஸ் ஆட்சி இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் அவர்களுக்குப் பாதகமாகவே செயற்பட்டு வந்தது. இறுதிப் போரின்போது, புலிகளைத் தோற்கடிக்க வேண்டும் என்ற வெறியுடன் செயற்பட்டு வந்த அப்போதைய இந்திய அரசு சாதாரண அப்பாவித் தமிழர்களை இம்மியளவும் கருத்தில் கொள்ளவில்லை. அதன் பார்வையில் தமிழர்கள் அனைவரும் புலிகளாகவே தென்பட்டனர். தமிழர்களைப் புலிகளிடமிருந்து மீட்டு எடுப்பதற்கான மனிதாபிமானப் போர் என்ற மகிந்த அரசின் தந்திரத்துக்கு இந்தியா வழங்கிய உதவிகள் எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போலாகிவிட்டது. இலங்கை புலிகளுக்கு எதிரான போரைக் கைவிட நினைத்தாலும் இந்தியா விடமாட்டாது என்றொரு நிலை தான் அன்று காணப்பட்டது. ஏனென்றால் புலிகளைப் பழிவாங்க வேண்டுமென்ற எண்ணம் அன்றைய இந்திய



அரசிடம் நிறைந்து காணப்பட்டது. முன்னாள் இந்தியப் பிரதமரான ராஜீவ்காந்தியின் மனைவியான சோனியா இந்திய அரசை இயக்கிக் கொண்டிருந்ததால், அவரது கைப் பொம்மையாக இயங்கிய அப்போதைய பிரதமரான மன்மோகன் சிங், சோனியா இட்ட கட்டளைகளை நிறைவேற்றுகின்ற ஒருவராகத்தான் அப்போது செயற்பட்டுக் கொண்டிருந்தார். இதன் விளைவுகளை இறுதிப்போரின் போது, இலங்கைத் தமிழர்கள் அனுபவிக்க முடிந்தது. போரும் முடிந்தது. புலிகளும் ஒழிக்கப்பட்டனர். ஆனால், தமிழர்களின் அவலங்கள் மட்டும் தீரவில்லை. அவர்களது அழிவுகளுக்கெல்லாம் காரணமாயிருந்த இனப்பிரச்சினைக்கு தீர்வு எதையும் காணாத இருந்த நிலையே காணப்படுகின்றது.

புலிகளை அழிப்பதற்குப் புறப்பட்ட சோனியாகாந்தி தலைமையிலான காங்கிரஸ் கட்சி தேர்தலில் படுதோல்வியைத் தழுவியதால் நரேந்திரமோடி தலைமையிலான பாரதீய ஜனதாக் கட்சி மத்தியில் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டது. நரேந்திர மோடி வித்தியாசமாகச் சிந்திப்பவர் என்பதால் இலங்கைத் தமிழர் பிரச்சினையிலும் அவர் தீர்வொன்றைத் தந்து விடுவாரென்ற நம்பிக்கை இங்கு காணப்பட்டது. அதற்கேற்றாற்போன்று, இலங்கைக்கு வருகை தந்தபோது நாடாளுமன்றத்தில் உரையாற்றிய மோடி இலங்கைத் தமிழர்களுக்கு சமஷ்டி முறையிலான ஆட்சிமுறையே பொருத்தமானது என்ற வகையில் உரையாற்றியிருந்தார். இதுவே தமிழர்களின் நம்பிக்கையை அதிகரித்தது. ஆனால், இன்றுவரை எதுவுமே நடக்கவில்லை. ஆனால் போர்க்குற்ற விசாரணைகள் தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையை நீர்த்துப்போகச் செய்யும் வகையில் அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தில் காணப்படுகின்ற முக்கியமான பிரிவுகளை நீக்க வேண்டும் என்பதில் விடாப்பிடியாக நிற்கும் இலங்கைக்கு ஆதரவான நிலைப்பாட்டையே இந்தியாவும் கொண்டுள்ளதால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதி கிடைக்குமென்ற நம்பிக்கை அறவே அற்றுப் போய்விட்டது. இந்தியாவின் துரோகத்தனமும் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

இந்தியா தனது சொந்த நலன்களைப் பேணுவதில் காட்டுகின்ற அக்கறையை ஏனையவர்களிடம் காட்டுவதில்லை. நீறுபூத்த பெருநெருப்பாகக் காணப்படுகின்ற காஷ்மீர் பிரச்சினையில் வேறுநாடுகள் தலையிடுவதையோ அல்லது நடுநிலை வகித்துப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதையோ இந்தியா அனுமதித்ததில்லை. காஷ்மீர் மக்களிடையே ஒரு கருத்துக் கணிப்பை நடத்தி அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருந்தால் காஷ்மீர் பிரச்சினை என்றோ முடிவுக்கு வந்திருக்கும். காஷ்மீர் விடயத்தில் இந்தியாவின் பரம வைரியாக விளங்கும் பாகிஸ்தான் சர்வதேச மத்தியஸ்தத்தை நாடி நிற்கின்ற நிலையில் இந்தியா அதனை முற்றாக நிராகரித்துவிட்டதால், அந்தப் பிரச்சினை தீராத தலைவலியாகவே மாறிவிட்டது. காஷ்மீர் மக்களின் மீது இந்தியப் படைகள் மேற்கொள்ளுகின்ற அட்டூழியங்களும், மனித உரிமைகளை மீறுகின்ற சம்பவங்களும் எல்லைமீறிக் காணப்படுகின்றன. தீவிரவாதிகள் பாகிஸ்தானிலிருந்து, இந்தியாவுக்குள் ஊடுருவித் தாக்குதல்களை மேற்கொள்வதற்கு இதுவே பிரதானமான காரணமும் ஆகும். இந்த நிலையில் தனது நாட்டுப் பிரச்சினைக்குத் தீர்வைக்காண முடியாத இந்தியா இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தலையிட்டு, தீர்வொன்றைத் தரமுடியுமா? என்ற கேள்வியும் எழாமலில்லை. ஆனால், இந்தியா இலங்கைப் பிரச்சினையில் மூக்கை நுழைத்து பிரச்சினையைத் திசை திருப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றது. உண்மையைக் கூற வேண்டுமானால், இலங்கைத் தமிழர்களிடத்தில் இந்திய அரசுக்கு எந்தவித அனுதாபமும் கிடையாது என்பது தான் உண்மை நிலையாகும். இந்திராகாந்தி அம்மையார் பிரதமராக இருந்த வரை இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அதிக கரிசனையுடன் செயற்பட்டு வந்தார். இலங்கை



யின் பெரும்பான்மை இனத் தலைவர்கள் தமிழர்களுக்கு ஒரு சிறு துரும்பைக்கூட எடுத்துப் போட மாட்டார்கள் என்பதை அவர் சரியாகக் கணித்ததால் தமிழர் சார்பான நடவடிக்கைகளை மேற்கொண்டார். 1983 இல் தமிழருக்கு எதிரான பேரழிவுகள் இலங்கை அரசின் ஆதரவுடன் இடம்பெற்றபோது, அப்போது இந்திய வெளிவிவகார அமைச்சராக இருந்த நரசிம்மராவை இலங்கைக்கு அனுப்பி நிலைமைகளை நேரடியாக அறியச்செய்தார். இதைவிட, தமிழ் இளைஞர்கள் இந்தியாவில் ஆயுதப் பயிற்சி பெற்றதும் இவரது காலத்தில் தான். அவரது அகால மறைவு இலங்கைத் தமிழர்களுக்குக் கடும் சோகத்தை ஏற்படுத்தி விட்டது. தமிழர்களது பிரச்சினைகளும் தீர்வு காணப்படாது நீண்டு கொண்டே செல்கின்றது.

இங்குள்ள தமிழர்கள் இனியும் இந்தியாவை நம்பிக்கொண்டிருப்பதில் எந்தவிதப் பயனும் கிடைக்கப்போவதில்லை. மாறாக ஏமாற்றமே எஞ்சிநிற்கப் போகின்றது.

> இந்திராகாந்தி அம்மையார் பிரதமராக இருந்த வரை இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அதிக கரிசனையுடன் செயற்பட்டு வந்தார். இலங்கையின் பெரும்பான்மை இனத் தலைவர்கள் தமிழர்களுக்கு ஒரு சிறு துரும்பைக்கூட எடுத்துப் போட மாட்டார்கள் என்பதை அவர் சரியாகக் கணித்ததால் தமிழர் சார்பான நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## விளம்பரங்கள் அற்ற யூடியூப் சேவை விரைவில்

உலகின் முதற்தர வீடியோ பகிரும் தளமாக விளங்கிவரும் யூடியூப் தனது இலவச சேவையில் விளம் பரங்களை காட்சிப்படுத் துவது தெரிந்ததே. இந்த நிலையில் விளம்பரங்கள் அற்ற சேவையை வழங்கவுள்ளதாக கடந்த காலங் களில் அறிவித்திருந்த யூடியூப், குறித்த சேவையை அடுத்த மாதம் அறிமுகம் செய்ய வுள்ளது. இது தொடர்பான அறி வித்தல் களை தனது விளம் பரதாரர் களுக்கு மின்னஞ்சல் ஊடாக யூடியூப் நிறுவனம் தெரி வித்து வரு கின்றது.

இந்தச்சேவையை மாதாந்தம் 10 டொலர்கள் செலுத்திப் பெற் றுக்கொள்ள முடியும் எனத் தெரி விக்கப்பட்டுள்ளது.

## மாயை பொத்தான்களை உருவாக்கும் தொடுதிரை




மொபைல் சாதனங்கள் எங் கும் தற்போது தொடுதிரை தொழில்நுட்பமானது பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.
எனினும் இதில் காணப்படும் பொத்தான்களை (Buttons) தொட்டு உணர முடியாது. ஆனால் தரவுகளை உள்ளீடு செய்ய முடியும். தற்போது இவற்றையெல்லாம் தாண்டித் தொட்டு உணரக்கூடியதும், மாயைத் தோற்றத்தைத் தரக்கூடியதுமான பொத்தான்களை உருவாக்கும் GelTouch எனும் தொடுதிரை உருவாக்கப்பட்டுள்ளது.
சாதாரண ஜெல்லினை விடவும் 25 மடங்கு விறைப்பை உடைய 2 மில்லி மீற்றர் தடிப்பம் கொண்ட ஜெல் படையினை அடிப்படையாகக் கொண்டு இந்தத் தொழில்நுட்பம் உருவாக்கப்பட்டுள்ளது.
இதன் மூலம் தட்டச்சு செய்யும்போது எதிர்கொள்ளப்படும் சிரமங்கள் பெருமளவில் குறைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## காயங்கள் இன்றி சவரம் செய்ய வந்துவிட்டது Skarp Razor

முகச்சவரம் செய்வதற்கு தற்போது காணப்படும் சவர அலகுகளை விடவும் துல்லியமாகவும், காயங்கள் இன்றியும் சவரம் செய்யக்கூடிய புதிய தொழில்நுட்பம் ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
அதாவது Skarp Razor எனப்படும் லேசர் தொழில் நுட்பத்தைக் கொண்ட ரேசரை லேசர் தொழில்நுட்ப சாதனங்களை உற்பத்தி செய்யும் Morgan Gustavsson எனும் நிறுவனம் உருவாக்கியுள்ளது. இதில் பயன்படுத்தப்படும் AAA அளவுடைய மின்கலத்தின் உதவியுடன் ஒரு மாத காலம்வரை சவரம் செய்யக்கூடியதாக இருக்கின்றது.
விரைவில் விற்பனைக்கு வரவுள்ள இதன் சில்லறை விலை 200 டொலர்கள் வரை இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.




## வரோட் அமையத்தின் ஏற்பாட்டில் மனிதவள மேம்பாட்டு நிகழ்வு



யாழ்ப்பாணம், ஒக்.03
வரோட் அமையத்தின் மனித வளத்தை மேம்படுத்தும் நிகழ்வு கடந்த வாரம் சோலைவனம் விருந் தகத்தில் நடைபெற்றது. நிறுவனத் தின் நிறைவேற்று இயக்குநர் அருட் தந்தை அல்பேட் ஜோ. அருள்ராஜா சி.எம்.எவ். தலைமையில் நடை பெற்ற இந்த நிகழ்வில் பணியா ளர்களின் கலை நிகழ்வுகளும், ஐந்து ஆண்டுகளைப் பூர்த்தி செய்த பணியாளர்களுக்கான பணிநலன் பாராட்டுப்பத்திரமும் வழங்கப்பட் டன. அத்துடன் கடந்த இரண்டு ஆண்டுகளில் ஒவ்வொரு துறையி லும் முன்மாதிரியாகச் செயற்பட்ட பணியாளர்களுக்கான தங்கப் பதக்கம் அணிவிப்பும் இடம்பெற் றது.
நிகழ்வில் சா.ஏட்மன்ராஜ், பொ.வேம் படி, திருமதி யோ. மேரிஸ் ரெலா, ம.அன்ரன் றொபேட், திருமதி சகுதர்சினி, ம.விதர்சன், ஜோ.ஜெனிற்றா, கு. சுதர்சினி மற்றும் வட்டாரக்குழுத் தலைவர் சார்பில் சிறப்பாக பணியாற்றிய முள்ளி வாய்க்கால் வட்டாரக் குழுத் தலைவர் யோ.யோக நாதன் ஆகியோருக்கு தங்கப் பதக்கம் வழங்கி கௌரவிக்கப் பட்டது.
வரோட் அமையமானது, வவு னியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் மாற்று வலுவுள்ளோர் மத்தியில் சமூகம் சார் வலுவூட்டல் குழுக்களை அமைத்து நெறிப்படுத்தி வரு வதோடு, அமல மரியாள் விடி வெள்ளி ஆண்கள் நிலையம், கிளாரட் அருணோதயம் பெண்கள் நிலையம், வரோட் வலுவூட்டல் நிலையம் ஆகிய கட்டமைப்புக் களை நிறுவி வன்னி பெருநிலப் பரப்பில் தன்னார்வத் தொண்டு நிறுவனமாகச் செயற்பட்டு வருகின் றது. (ந-10)

## ஒரு நாள் செயலமர்வு

யாழ்ப்பாணம், ஒக்.03
இளைஞர் யுவதிகளுக்கான ஆளுமை மற்றும் எதிர்காலத்தை திட்டமிடுவ தற்கான ஒரு நாள் செயலமர்வு யாழ். கலைத்தூது கலையகத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் நான் என்னவாக வேண்டும்? அதற்கு என்ன செய்ய வேண்டும்? எனும் தொனிப் பொரு ளில் செயலமர்வு இடம்பெற வுள் ளது. இதில் பங்குபற்றுபவர்கள் தொழில் அல்லது கல்வி தேடும் இளைஞர் மற்றும் யுவதிகள் தமக் கான முற்பதிவுகளை மேற் கொள் ளுமாறும் வாணிபம் தொழில் வழி காட்டியின் இயக்குநர் திருமதி சி.தம யந்தி தெரிவித்துள்ளார். (ஐ-ரி5)

## ஆனந்தராஜன் நினைவுப் பேருரை

யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரியின் முன்னாள் அதிபர் சி.இ.ஆனந்த ராஜனின் நினைவுப் பேருரை நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியின் அமைந்துள்ள பிற்றோ நினைவு மண்டபத்தில் இடம்பெற வுள்ளது. அவரது குடும்பத்தினரும் சென். ஜோன்ஸ் கல்லூரியும் இணைந்து ஒழுங்கு செய்துள்ள இந்த நிகழ்வில் அருட்பணி.டேவ் ஆனந்தராஜன் வரவேற்புரையை யும் யாழ்ப் பாணப் பல்கலைக்கழக மனோ தத்துவவியல் பேராசிரியர் தயா சோமசுந்தரம் போருக்கு பிந்திய மனவடு, தற் போதைய உள சமூக சூழல், கல்வியும் நவீ னத் துவமும் என்ற விடயங்களை உள் ளடக்கியதான ஒரு தொலைந்து போன தமிழ் இளை ஞர்தலைமுறை எனும் தலைப்பில் நினைவுப் பேரு ரையும் நிகழ்த்தவுள்ளனர். (ஐ-ரி2)

## அபிவிருத்தியை நோக்கி சர்வதேசக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக், 03
ஆசிய பசுபிக் பிராந்தியத்துக்கான அனர்த்த முகாமைத்துவ கூட்டமைப்பு பொதுசன தனியார் பங்குடைமை அனர்த்தங்களுக்கு நெகிழ்திறனுடைய நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தியை நோக்கி எனும் தொனிப் பொருளில் சர்வதேச கருத்தரங்கொன்றை ஒழுங்கமைத்துள்ளது. நாளை மறு தினம் திங்கட்கிழமை யாழ்.ரில்கோ நகர மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு இந்தக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந் தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் கலந்து கொள்ள வுள்ளதுடன், கௌரவ விருந்தினராக இலங்கை அனர்த்த முகா மைத்துவ நிலையத்தின் பொதுப்பணிப்பாளர் மேஜர் ஜெனரல் எல்.பி.ஆர் மார்க் கலந்து கொள்ளவுள்ளார். நிகழ்வில் ஜப்பான் நாட்டின் இலங்கைக் கான தூதுவர் சுகுனும கெனிச்சி, தேசிய பசுபிக் பிராந்தியத்தின் ஆறு நாடுகளின் பிரதிநிதிகள் ஆகியோரும் பங்கேற்கவுள்ளனர். இந்த நிகழ்வில் ஆசிய பசுபிக் பிராந்தியத்துக்கான அனர்த்த முகாமைத்துவ கூட்டமைப்பால் நடத்தப்பட்ட கட்டுரை, புகைப்பட மற்றும் கேலிச்சித்திரப் போட்டிகளின் வெற்றியாளர்களுக்கு பரிசில்கள் வழங்கும் வைபவமும் நடைபெறவுள்ள தாகவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ-10)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயோதிபத்தை தடுக்கும் பக்டீரியா கண்டுபிடிப்பு!

மொஸ்கோ ஒக்.3
சாவை ஏற்படுத்தாது வாழ்நாள் முழுவதும் இளமையாக வைத்திருக்கும் வல்லமை படைத்த புதிய பக்டீரியா ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது என்று ரஷ்ய விஞ்ஞானி ஒருவர் பரபரப்புத் தகவல் வெளியிட்டுள்ளார்.

ரஷ்யாவில் உள்ள மொஸ்கோ பல்கலைகழகத்தில் ஆனற்றோலி புரக்கோவ் என்ற விஞ்ஞானி ஒருவர் உறைந்துப்போன பனிக்கற்கள், மண், பாறைகள் உள்ளிட்டவைகளை றும் பூச்சிகளுக்குச் செலுத்திப் பரிசோதனை செய்து பார்த்தார். விஞ்ஞானி எதிர்பார்த்த விளைவுகளை அந்தப் பக்டீரியா ஏற்படுத்தியிருப்பதை அறிந்த அவர், அந்தப் பக்டீரியாவைதனது உடலிலேயே செலுத்தி தன்னையே பரிசோதனைக்கு உட்படுத்தியுள்ளார்.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள அவர், பக்டீரியாவைத் தன்னுடைய உடலில் செலுத்திய பிறகு, தான் மிகவும் இளமையாகவும் புதிய பலத்துடன் இருப்பதாகவும் அவர்



ஆராய்ச்சி செய்யும் துறையின் தலைவராக பதவி வகித்து வருகிறார்.

சில வருடங்களுக்கு முன்னர் அவர் பல மில்லியன் வருடங்களாக உறைந்துபோன நிலையில் இருந்த பனிக்கட்டிகளை ஆராய்வுக்கு உட்படுத்தியுள்ளார். அதன்போது 3.5 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த பஸிலஸ் எப் என்ற பக்டீரியாவைக் கண்டுபிடித்துள்ளார்.

இந்த வகை பக்டீரியா குறித்து ஆராய்ச்சி செய்தபோது, அதற்கு உயிரினங்களை இளமையாகவும் எந்த நோயும் தாக்காமல் ஆரோக்கியமாக பாதுகாக்கும் குணநலன்கள் இருப்பதைக் கண்டறிந்தார்.

இந்தப் பக்டீரியாவை எலிகள் மற் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். கடந்த இரண்டு வருடங்களாகத் தன்னை எந்த நோயும் தாக்காமல் இருப்பதற்கு இந்த பக்டீரியா தான் காரணம் எனவும் கண்டுபிடித்துள்ளார்.

இந்தப் பாக்டீரியா குறித்தான 100 சதவிகித ஆராய்ச்சி முடிவடையவில்லை. இதனைத் தனது ஆராய்ச்சி குழுவினர் கூடுதலாக ஆராய்ந்து வருகின்றனர். இந்தப் பக்டீரியாவால் எவ்வாறு வயதை அதிகரிக்காமல் இளமையைப் பாதுகாக்க முடிகிறது என்ற கேள்விக்கு அடுத்தடுத்த ஆராய்ச்சியில் பதில் தெரியவரும் என அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

(ற-ரி4)



# பாக். இராணுவ தாக்குதலில் 25 தீவிரவாதிகள் உயிரிழப்பு

காபூல், ஒக்.3
பாகிஸ்தான் மற்றும் ஆப்கன் எல்லையில் பாகிஸ்தான் ராணுவம் நேற்றுமுன்தினம் நடத்திய வான் வழித் தாக்குதலில் 25 தீவிரவாதிகள் உயிரிழந்துள்ளனர் என்று பாகிஸ்தான் உளவுத்துறை தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் – ஆப்கன் எல்லையில் அமைந்துள்ள வடக்கு வாஜிரிஸ்தான் பகுதியை தலிபான் உள்ளிட்ட பல்வேறு இயக்கங்களை சேர்ந்த தீவிரவாதிகள் தமது பதுங்குமிடமாகப் பயன்படுத்துகின்றனர்.

இந்நிலையில் இரு நாட்டு எல்லையில் இருந்து 40 கி.மீ. தொலைவில் தீவிரவாதிகள் பதுங்கியுள்ளதாக கருதப்பட்ட 6 மறைவிடங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது என்று பாகிஸ்தான் உளவுத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.(ற)

# முடக்கப்பட்டிருந்த தாய்லாந்து அரச இணையத்தளங்கள் மீள இயக்கம்

பாங்கொக், ஒக்.3
இணையத் தாக்குதல் காரணமாக முடங்கியிருந்த தாய்லாந்து அரசின் இணையத்தளங்கள் நேற்று முன்தினம் முதல் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளன. ஒருங்கிணைந்த வகையில் மேற்கொள்ளப்பட்ட இணையத் தாக்குதலின் காரணமாக கடந்த புதன்கிழமை தாய்லாந்து அரச இணையத்தளங்கள் செயலிழந்தன. அரசின் இணையத்தளத்துக்குள் நுழைவதைக் கட்டுப்படுத்த 'பயர் வோல்' ஒன்றை உருவாக்க முயலும் இராணுவ அரசுக்கு எதிராகவே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

தாய்லாந்து அரசின் இந்த திட்டம் பொருத்தமற்றது என தெரிவிக்கப்பட்டதுடன், கடந்த வாரம் அரசால் வெளிப்படுத்தப்பட்ட இந்த திட்டம், நாட்டின் பொருளாதாரத்தை பாதிக்கும் என விமர்சகர்கள் கூறியிருந்தனர். (ற)

# கல்லூரியி

## 10 பேர் சாவு: 7 

## அமெரிக்காவில்

நியூயோர்க், ஒக்.3
அமெரிக்காவின் ஒரேகான் மாகாணத்தில் உள்ள கல்லூரி ஒன்றுக்குள் புகுந்த இளைஞன் ஒருவன் சரமாரியாக மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 10 பேர் உயிரிழந்துள்ளனர். 7 பேர் படுகாயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

துப்பாக்கிதாரி பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டார் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த இளைஞனிடம் இயந்திரத் துப்பாக்கிகள்,வெடிபொருள்கள்,மூன்று கைத்துப்பாக்கிகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்ட கல்லூரியில் 13 ஆயிரத்துக்கும் அதிக மானவர்கள் கற்று வருகின்றனர் என்றும், சம்பவம் நடைபெற்ற சமயம் கல்லூரியில் 3 ஆயிரம் மாணவர்கள் இருந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பான தகவல் பரவியதும் அவர்களின் பெற்றோரும், உறவினர்களும் அங்கு திரளத் தொடங்கினர்.

குறித்த இடத்தைச் சுற்றிவளைத்த பொலிஸார் அந்தப் பகுதியைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். சுற்றுப் பகுதியில் இருந்த அனைவரும் சோதனைக்கு உட்படுத்தப்



பட்டனர்.
துப்பாக்கி
என்னவெ
தெரிவித்
ஒருவர்,
துரித விச
பட்டுள்ள
இந்தச் சம்
சியை வெ
ரிக்க ஜன

# ஐ.எஸ். இல்லாத இடங்களில் தாக்குதல் நடத்துகிறது ரஷ்யா

## குற்றஞ்சாட்டுகின்றது அமெரிக்கா

வொஷிங்டன், ஒக்.3
சிரியாவில் ஐ.எஸ் தீவிரவாதிகள் இல்லாத பகுதிகளில் ரஷ்யா தாக்குதல் நடத்துகின்றது என்று அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது.

ஐ.எஸ் அமைப்பு மீது ரஷ்யா வான்வெளித் தாக்குதலைத் தொடங்கியுள்ள நிலையில் அமெரிக்க பாதுகாப்புத் துறை அமைச்சர் ஆஷ்டன் கார்டர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஐ.எஸ் படைகள் இல்லாத பகுதியில் ரஷ்யர்கள் தாக்குதல் நடத்துகின்றனர். இந்த ஒட்டு மொத்த அணுகுமுறையில் இது முக்கியமான பிரச்சினை. ஒருபுறம் ஐ.எஸ் அமைப்புக்கு எதிராகப் போரிடுவதாகக் கூறும் ரஷ்யா, சிரிய ஜனாதிபதி பசார் அல் அசாத் மற்றும் அவரது ஆட்சிக்கு ஆதரவளிக்கிறது. – என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

இணையான அரசியல் மாற்றம், இஸ்லாம் ஐ.எஸ்ஸுக்கு எதிராகப் போரிடுவது என்பது சிரியாவில் உள்நாட்டுப் போரை அதிகரிக்கச் செய்யும். ஸ்திரத்தன்மையற்ற நிலையும், தீவிரவாதமும் அதிகரிக்கும்.

ரஷ்யாவின் இந்த அணுகுமுறை எரிகிற தீயில் எண்ணெய் ஊற்றுவதற்குச் சமம். சிரியாவில் ஐ.எஸ் மற்றும் பயங்கரவாதத்தை அழிப்பது என்பது, இணையான அரசியல் மாற்றத்தால் மட்டுமே இயலும். இந்த இரு கோணங்களையும் ஒரேசமயத்தில் மேற்கொள்வதன் முக்கியத்துவம் குறித்து நாங்கள் வலியுறுத்துவோம். இதில் ரஷ்யா எங்களுடன் இணைந்து செயலாற்றும் என நம்புகிறோம்.– என்றார்.

அதேவேளை இது குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள அமெரிக்க உயரதிகாரி ஒருவர்:–

ஐ.எஸ்ஸுக்கு எதிராகப் போரிடுவது மற்றும் பசார் அல் அசாத்துக்கு ஆதரவளிப்பது என்ற இரண்டையும் நாங்கள் குழப்பிக் கொள்ள மாட்டோம். ரஷ்யா தாக்குதல் நடத்தும் இடங்களில் ஐ.எஸ் மற்றும் அல் குவைதா செயல்பாடுகள் இல்லை.

ஐ.எஸ் மீதான தாக்குதல் மற்றும் அசாத்தின் ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளைப் பாதுகாப்பது [illegible] குறிக்கோளை இந்த [illegible]க்குதல்கள் கேள்விக்கு உட்படுத்துகின்றன. – என்றார்.

(ற-ரி4)





சைபீரியாவின் நோவோசிப்ரிஸ்க் பகுதியில் உள்ள ... எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. நீர் ... கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சீனாவின் ஹுனான் மாகாணத்தில் அமைந்துள்ள சீனாவின் முதலாவது அதி உயர் கண்ணாடி தொங்கு பாலம் சுற்றுலாப் பயணிகளுக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது. சுமார் 180 மீற்றர் ஆழமான பள்ளத்தாக்கின் மீது அமைக்கப்பட்டுள்ள குறித்த பாலம் 300 மீற்றர் நீளமானதாகும். மேற்படி பாலம் கடந்த வியாழக்கிழமை சுற்றுலாப் பயணிகளுக்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது. மரத்தால் செய்யப்பட்டிருந்த குறித்த பாலம், தற்போது கண்ணாடியினால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.(ற)

# ...ரியில் துப்பாக்கிச் சூடு

## ...: 7 பேர் காயம்

## ...வில் தொடர்கிறது சோகம்



பட்டனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் என்னவென்று தெரியாதுள்ளது என்று தெரிவித்துள்ள பொலிஸ் அதிகாரி ஒருவர், இந்தச் சம்பவம் குறித்து துரித விசாரணைகள் முடுக்கி விடப் பட்டுள்ளன என்று தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் குறித்து தமது அதிர்ச் சியை வெளிப்படுத்தி உள்ள அமெ ரிக்க ஜனாதிபதி ஒபாமா, வெறும் வழிபாடு மட்டுமே துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடாது என்று கூறியுள்ளார்.

துப்பாக்கிச் சூடு நடத்திய இளைஞர் அந்தப் பகுதி மக்களால் மனநோயாளி என்று கூறப்படுகின்றார்.

குறித்த நபரைப் பற்றிய சரியான தகவல்கள் எவையும் வெளியாக வில்லை. குறித்த இளைஞன் 26 வயதுடைய கிரிஸ் ஹாப்பர் என்று சர்வதேச ஊடகங்கள் கூறுகின்றன.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் குறித்து வேதனை வெளியிட்ட ஜனாதிபதி பராக் ஒபாமா – துப்பாக்கி வைத் திருப்பவர்கள் உரிமம் பெற்றுக் கொண்டிருக்க வேண்டும்.

தமது துப்பாக்கிகள் தொடர்பில் அவர்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

(ற–ரி4)

## அடிமைகளாக குரங்குகள்!



லண்டன், ஒக்.3

தாய்லாந்தின் கிராமப்புறங்களில் உள்ள தென்னந்தோப்புகளில் கொடூரமான முறையில் குரங்குகளை வைத்து தேங்காய் பறிக்கப்படுகின்றது என்று அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது. குரங்குகள் குட்டிகளாக இருக்கும்போது அவை கடத்தப்பட்டு அங்குள்ள பாடசாலை ஒன்றில் சேர்க்கப்படுகின்றன. அங்கு தென்னை மரத்தில் இருந்து எவ்வாறு தேங்காய்களைப் பறிப்பது என்பது பற்றி குரங்குகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

பயிற்சி முடிந்ததும் அவை அங்குள்ள தென்னந்தோப்புகளுக்கு அனுப்பப்பட்டு தேங்காய் பறிக்க நிர்ப்பந்திக்கப்படுகின்றன. ஒவ் வொரு நாளும் இந்தக் குரங்குகள் ஒவ்வொன்றின் மூலமாக 1000 தேங்காய்கள் பறிக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்ப டுகின்றது.

(ற)

## கலப்பட உணவுக்கு சீனா தடை

பீஜிங் ,ஒக்.3

பிளாஸ்டிக்கில் செய்யப்பட்ட அரிசி முதல் ஜெலட்டினால் செய்யப்பட்ட முட்டை வரை மோசடியான உண வுகளுக்கு பேர் போனது சீனா.

மக்கள் கருத்துக் கணிப்பின்படி உண வுத்துறை மோசடி கள் அங்கு பெரிய பிரச்சினையாக பெரும்பாலானோரால் பார்க்கப்படுகின்றது.

உலகிலேயே அதிக மான உணவு மோசடி செய்யும் நாடு சீனா வாக இனம்காணப் பட்டுள்ளது. கடந்த வருடங்களில் குழந் தைகளுக்காக தயா ரிக்கப்பட்ட உணவில் கலப்படம் செய்யப் பட்டு, 6 குழந்தைகள் சாவடைந்தன , 3 லட்சத்துக்கும் மேற்பட்ட குழந்தைகள் பாதிப்புக்குள் ளாகின என சீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அத்துடன் பன்றி இறைச்சிக்குப் பதிலாக, எலி இறைச்சி விற்பனை செய்யப்பட் டுள்ளது.

இவற்றைக் கருத்தில் கொண்டு நேற்று உணவுத் துறையைத் தூய் மைப்படுத்த ஒரு புதிய சட்டம் அங்கு நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.




இவ்வாறான உணவு மோசடி களுக்குப் பின்பு சீன அரசு மிகவும் கண்டிப்பான உணவுச்சட்டதை அறி முகப் படுத்தியுள்ளது. பாவனைக் குத் தடை விதிக்கப்பட்ட இரசாயன உரங்கள் பாவிக்கப்படலாகாது. அத் துடன் அவற்றால் விளைவிக்கப் பட்ட மரக்கறிகள், பழங்கள் என் பனவும், இரசாயன கலப்படங்கள் உள்ள பொதி செய்யப்பட்ட உணவு களும் விற்பனை செய்யத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

(ற–ரி4)



...தியில் உள்ள கிராமத்தில் மிகவும் பழைமையான விலங்கான மமத் யானையின் ...ள்ளன. நீர் விநியோகத்துக்காக நிலத்தைத் தோண்டும் போதே குறித்த எலும்புக

(ற–ரி4)

## ஹொன்டுராஸின் ஆர்ப்பாட்டம்

டெக்யூசிகல்ப்பா, ஒக்.3

ஹொன்டுராஸின் தலைநகரான டெக்யூசிகல்ப்பாவில் ஊழலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்நாட்டு மாண வர்களால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

நடைபெற்ற ஊழல் தொடர்பில் சர் வதேச விசாரணைக் குழு ஒன்றைக் கொண்டு வருமாறு கோரியே ஆர்ப் பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடந்த ஆர்ப்பாட்டத்தின்போது ஆர்ப் பாட்டக்காரர்கள் வீதியை மறித்து [illegible] ணுவ படைவீரர்களும் சம்பவ இடத் துக்கு வரவழைக்கப்பட்டனர். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதுமையைப் பேணுவோம்

கிருஷ்ணராஜா சஞ்ஜீவன்,
ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி.

> மானிடப்பிறவி எடுத்த ஆறறிவு படைத்த நாம் சிந்தித்து வயதுபோன காலத்திலும் தம்மைப் பார்க்காது எம்மைப் பற்றி நினைக்கும் முதியவர்களைக் கைவிடாது அவர்களுக்கும் நல்ல வாழ்க்கையொன்றைப் பெற்றுக்கொடுக்கவும், அவர்களிடம் இருந்து கல்வி, ஒழுக்கம், பண்பு போன்ற விழுமியப் பண்பையும் பெற்றுக் கொள்ளவும் வேண்டும், முதுமையை மதிப்போம்.



மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம் எனும் சொல்லுக்கிணங்க மூத்தோரின் சொற் கேட்டு நாம் நல்வழியில் ஒழுகக் கற்றுக் கொள்வது அவசியமாகும். முதுமை என்பது மனிதனாகப் பிறந்தவர்களுக்கும், மரம் செடி, கொடிகள் மிருகங்கள் என எல்லாவற்றுக்கும் பொதுவானது தான். இளமையின் பழுத்த வடிவமே முதுமை எனப்படும்.

ஒரு மரத்தை எவ்வாறு அதன் வேர் மண்ணினுள் ஊடுருவிப் பாதுகாத்து நிற்கின்றதோ அதேபோல், இந்த வையகத்தில் மனிதர்களைச் சுமப்பதும் முதியவர்கள் தான். வாழ்க்கையின் அனைத்துப் படிகளிலும் முன்னோடியாகவும், திறவுகோலாகவும் இருந்து பிறருக்கு வழிகாட்டுபவர்களும் முதியவர்கள்தான். தற்கால உலகம் முதியோரைப் புறம் தள்ளி வைக்கின்றது. சிலபேர் முதியோர் இல்லத்திலும் ஒரு சிலர் நடுவீதியில் கிழிந்த ஆடையுடனும் பிச்சை எடுத்துக் கொண்டு, நிற்பதைப் பார்க்கும்போது மிகவும் பரிதாபமாகத்தான் இருக்கின்றது. அதுமட்டுமா, வேறுசிலர் முதியோர் இல்லத்திலும், வேறு சிலர் கோயில்களிலும் இருந்து கொண்டு தம் இறுதிக்காலத்தை எண்ணிக் காலத்தைக் கடத்துகின்றனர்.

ஆதிகாலத்தில் போர் வீரர்கள் மற்றும் ஏனையவர்கள் ஏதாவது முக்கியமான விடயங்களுக்கு வீட்டை விட்டு வெளியே செல்லும் போது, முதியோரின் காலைத் தொட்டு வணங்கித்தான் செல்வார்கள். ஆனால், இந்தக் காலத்தில் அதுமாறி, முதியவர்களிடம் மரியாதையே இல்லாமல் கதைப்பது அவர்களை இழிவுபடுத்துவதாகவும் அநாகரிகமான செயலாகவும் கருதத்தக்கது.

முதியோர்களிடமிருந்து தற்கால உலகமும், இளம் சமுதாயத்தினரும் கலாசாரம், வாழ்க்கை முறை போன்றவற்றை அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும். தற்கால இளம் சமுதாயத்தினர் மதுவுக்கும், ஆபாச சினிமாவுக்கும் அடிமையாகி தம்மை மறந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். சினிமா என்பது மும்மலங்கள் போன்றது. அது எம்மையும், எம் வாழ்க்கையையும், எமது சிந்தனையையும் வேறு எங்கோ திசைதிருப்பிச் சென்று விடும் முதியவர்கள் மீது முன்னர் எல்லாம் நல்ல பாசத்துடன் பழகிவந்தனர். ஆனால் அந்தக் காலம் எல்லாம் மாறி இங்கே குடும்பத்துக்குக் குடும்பம் பகையும் நாட்டுக்கு நாடு போரும் ஏற்பட்டு வருகின்றன. எப்போதும் அடிதடிகள், வாள்வெட்டும், கொலைகளுமாகத் திரிகின்றனர் இளம் சமுதாயத்தினர். இவற்றிலிருந்து எமக்கு நல்வழிகாட்ட வேண்டுமானால் அது முதியோராலேயே முடியும். அவர்களின் சொற்கேட்டு ஒழுகினாலும் அவர்கள் சொற்படி நடந்தாலும்தான் நாம் இவற்றில் இருந்து திருந்த முடியும். ஐ.நா. சபையினால் ஒக்ரோபர் முதலாம் திகதி சர்வதேச முதியோர் தினம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முதியவர்களை ஒவ்வொரு மனிதனும், சமூகமும் கண்ணியமாகவும் கௌரவமாகவும் மதிக்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்தும் வகையில் தான் ஐ.நா. சபை ஆண்டுதோறும் ஒக்ரோபர் முதலாம் திகதியை சர்வதேச முதியோர் தினமாகப் பிரகடனப்படுத்தியது.

1990 ஆம் ஆண்டு டிசெம்பர் 14 ஆம் திகதி ஐ.நா.சபையால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்துக்கு ஏற்ப இந்தத்தினம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. இதன்படி 1991 ஆம் ஆண்டு உலக முதியோர் தினம் கொண்டாடப்பட்டது. இதன்படி ஒவ்வொரு ஆண்டும் இந்த நாளில் முதியோர் தினம் கொண்டாடப்படுகிறது. ஐக்கிய அமெரிக்கா மற்றும் கனடா நாடுகள் இந்த நாளை விடுமுறை தினமாகவும் ஜப்பானில் மூத்தோருக்குக் கௌரவம் செலுத்தும் நாளாகவும் அனுஷ்டிக்கப்படுகின்றது. உலகெங்கும் வாழும் முதியோர்களின் நலன் மற்றும் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் ஆராய்ந்து அவர்களுக்கான ஒரு சமூகக் கட்டமைப்பை உருவாக்குவதும் இந்த நாளின் பிரதான நோக்கமாகும்.

உலகம் முழுவதும் உள்ள மூத்த குடி மக்களை மதிக்கவும், மரியாதை செலுத்தவும் குடும்பம், சமூகம் மற்றும் நாடுகளுக்கு அவர்கள் ஆற்றிய சேவையை நினைவு கூரவும் வேண்டும். பொதுவாக 60 வயதைக் கடந்த ஆண்கள் அல்லது பெண்கள், இருபாலாரும் முதியவர் அல்லது மூத்த குடிகள் எனப்படுகின்றனர். அவர்கள் நலனைப் பாதுகாக்கவும் அவர்களது உரிமைகளுக்கு மதிப்பளித்துப் போற்றவும் பல்வேறு நடவடிக்கைகள் அரசினால் மேற்கொள்ளப்படுகின்றன. வயதுபோன முதியவர்கள் எல்லாம் தமது நோயைப் பார்க்காது பிறருக்கு ஏற்படும் கஷ்டங்களை எண்ணித் தான் துன்பப்படுவார்கள். இதனையே ஔவையாரின் நன்னெறி 'பெரியர் தம்நோய் போல் பிறர்நோய்கண்டு' எனக் கூறி உள்ளது.

"முதியவர்கள் மிகச் சிறந்த அறிவு உடையவர்களாகவும் இருப்பார்கள். இளம்சமுதாயத்தினர். பண்பு, ஒழுக்கம், கல்வியறிவு, சிந்திக்கும் திறன், சிந்தனைத் திறன் எனப் பலவற்றை முதியவர்களிடம் இருந்து கற்றுக் கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டியது மிகமிக அவசியமாகும். இதனையே அதிவீரராம பாண்டியன் தம் வெற்றி வேற்கையில் **"சான்றோர் இல்லாத் தொல்பதி இருத்தலின் தேன் தேர் குறவர் நேயர் நன்றே"** என மிகவும் அழகாக முதியவர்கள் பற்றிக் கூறியுள்ளார். ஆகவே மானிடப்பிறவி எடுத்த ஆறறிவு படைத்த நாம் சிந்தித்து வயதுபோன காலத்திலும் தம் நலன் பார்க்காது எம்மைப் பற்றி நினைக்கும் முதியவர்களைக் கைவிடாது அவர்களுக்கும் நல்ல வாழ்க்கையொன்றை பெற்றுக்கொடுக்கவும், அவர்களிடம் இருந்து கல்வி, ஒழுக்கம், பண்பு போன்ற விழுமியப் பண்பையும் பெற்றுக்கொள்ள வேண்டும். முதுமையை மதிப்போம். முதியோரை அரவணைப்போம். மூத்த குடிகளாகிய அவர்கள் சமூகத்தில் நல்கௌரவமாக வாழ வழி சமைப்போம்.

# நான்காவது ஹொல்சிம் கிராமத்தை காலியில் அங்குரார்ப்பணம் செய்யும் ஹொல்சிம் லங்கா




லபார்ஜ்ஹொல்சிம் குழுமத்தின் அங்கத்துவ நிறுவனமான ஹொல்சிம் (லங்கா) லிமிட்டெட் நிறுவனத்தின் சமூக பொறுப்புணர்வு செயற்றிட்டங்களின் மற்றுமொரு உள்ளம்சம் தமது நிலைபேறான அபிவிருத்திச் செயற்றிட்டமான ஹொல்சிம். கிராமங்கள் என்பதற்கு அமைவாக ஆதரவற்றோருக்காக வீடுகளை நிர்மாணித்துக் கையளிக்கும் செயற்பாட்டை காலி, அக்மீமன பிரதேசத்தில் ஹொல்சிம் லங்கா முன்னெடுத்திருந்தது. இந்த புதிய வீடுகள், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் செப்ரெம்பர் 18 ஆம் திகதி குறித்த மக்களுக்கு கையளிக்கப்பட்டிருந்தன.

காலியில் முன்னெடுக்கப்பட்ட 14 மில்லியன் ரூபாய் பெறுமதியான இந்த செயற்றிட்டத்துக்கான அடிக்கல் 2014 இல் நடப்பட்டிருந்தது. ஹொல்சிம் சிமெண்ட் வேர்க்ஸ் தொழிற்சாலையை சூழ்ந்து வாழும் சமூகங்களின் தேவைகளை நிவர்த்தி செய்யும் நோக்கில் இந்தத் திட்டம் அமைந்திருந்தது. இந்த புதிய ஹொல்சிம் கிராம வீடுகள் மின்சாரம், குடிதண்ணீர் மற்றும் வீதி வசதிகள் போன்றவற்றை கொண்டுள்ளதுடன், நாடு முழுவதும் காணப்படும் நான்கு ஹொல்சிம் கிராமங்களில் ஒன்றாகவும் உள்ளது.

இலங்கையில் தனது செயற்பாடுகள் தொடர்பில் ஹொல்சிம் லங்கா வெளியிட்டிருந்த அறிக்கையில், ஹொல்சிமின் நிலைபேறான அபிவிருத்தித் திட்டத்துக்கு அமைவாக, வாழக் கூடிய சமூக உறுதி மொழிக்கமைய ஹொல்சிம் கிராமங்கள் அமைந் துள்ளன. இதனூடாக நாம் சமூக ஈடுபாடு மற்றும் சமூக உணர்வு ஆகியவற்றை பாதுகாப்பு, நிலைபேறான தெரிவுகள் போன்றவற்றினூடாக வழங்கத் திட்டமிட்டுள்ளோம்.

உட்கட்டமைப்பு வசதிகளுக்கு பங்களிப்பு வழங்குவது என்பது ஹொல்சிம் நிறுவனத்தின் பிரதான வியாபார உள்ளடக்கமாக அமைந்துள்ளது. அக்மீமன பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட இந்தத் திட்டம், முன்னர் மெதிரிகிரிய, எளுவன்குளம் மற்றும் புத்தளம் ஆகிய பிரதேசங்களில் முன்னெடுக்கப்பட்ட திட்டங்களைத் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. [illegible] ஹொல்சிம் லங்கா லிமிட்டெட் நிறுவனத்தில் பிரதம நிறைவேற்று அதிகாரி பிலிப்பே ரிச்சார்ட் கருத்துத் தெரிவிக்கையில்; தனது வர்த்தக செயற்பாடுகள் இடம்பெறும் சூழலில் வசிக்கும் சமூகங்களுக்கு உதவிகளை வழங்கும் நீண்டகால வரலாற்றை ஹொல்சிம் கொண்டுள்ளது. குழுமத்தின் சமூக பொறுப்புணர்வு செயற்பாட்டின் முக்கிய உள் அம்சமாகவும் இது அமைந்துள்ளது. குழுமத்தின் ஊழியர்கள் தமது உற்பத்திப் பகுதிகளைச் சூழ வாழும் சமூகத்தாருடன் சுமுகமான உறவைப் பேணுவதில் கவனம் செலுத்துகின்றனர்.

தற்போது நாம் அத்தியாவசிய தேவையை கொண்ட 13 குடும்பத்தாருக்கு மற்றுமொரு ஹொல்சிம் கிராமத்தை வழங்க முன்வந்துள்ளோம். ஹொல்சிம் கிராமம் செயற்றிட்டத்தின் நான்காம் கட்டமாக இந்த அக்மீமன திட்டம் அமைந்துள்ளது. நாம் செயலாற்றும் சூழலில் காணப்படும் சமூகங்களில் நேர்த்தியான மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு எமது அர்ப்பணிப்பின் வெளிப்பாடாக இது அமைந்துள்ளது – என்றார்.

இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்ட காலப்பகுதியில், வழிகாட்டலுக்காக சமூக ஆலோசனை சபை பின்பற்றியிருந்தது. இதன் மூலமாக சமூகத்தின் தேவைகளை நிவர்த்தி செய்திருந்ததுடன், அக்மீமன பிரதேசத்தின் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையிலும் அமைந்திருந்தது. சமூகத்துக்கு வலுச்சேர்ப்பதற்கு மேலதிகமாக, தேவைகளைக் கொண்டுள்ள மக்களுக்கு வதிவிடங்களை பெற்றுக் கொடுக்கவும் ஹொல்சிம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. நிர்மாணச் செயற்பாடுகளின் போது, சூழலுக்கு நட்புறவான செயற்பாடுகளின் மூலமாக, காபன் வெளியீட்டைக் குறைப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தி வருகிறது.

சூழலுக்கு நிலைபேறான வகையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன், சமூகப் பொறுப்புணர்வு வாய்ந்த வகையிலும், இந்த ஹொல்சிம் கிராமம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. உட்கட்டமைப்பு வசதிகளை நிர்மாணிக்கும் வகையில் சமூகங்களுடன் ஈடுபாட்டை பேணி வருகிறது. இதன் மூலமாக வாழ்க்கை அபிவிருத்தி மற்றும் வறுமை ஒழிப்புச் செயற்பாடுகள் முன்னெடுக்கப் படுகின்றன. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிய குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படுமா?

தற்போதைய சூழ்நிலையில் யாழ். போதனா மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவு ஆற்று கின்ற சேவை மகத்தானது. இங்கு தினமும் பல நூற்றுக்கணக்கான நோயாளர்கள் வருகை தந்து சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர்.

தற்போது குடாநாட்டில் எவரைப் பார்த்தாலும் காய்ச்சல், சளி, இருமல் என நோய்களால் பாதிக்கப் பட்ட நிலையில் காணப்படுகின்றனர். இவற்றுக்குப் பல்வேறு வைரஸ்களின் தாக்கமே காரணமெனவும் கூறுகின்றனர். இதனால் மருத்துவமனைகளில் ஏராளமான நோயாளர்களைக் காண முடிகின்றது.

ஆரம்பத்தில் வெளிநோயாளர் பிரிவில் தம்மைக் காண்பிக்கும் நோயாளிகள் தேவையேற்படின் விடுதிகளிலும் அனுமதிக்கப்படுகின்றனர். ஆகவே வெளிநோயாளர் பிரிவு முக்கியமானதொரு இடத்தை வகிக்கின்றது. தற்போது சிறார்களே அதிகளவில் வெளிநோயாளர் பிரிவுக்குக் கொண்டு வரப்படுவதை அவதானிக்க முடிகின்றது. ஆனால் இவர்களுக்கென அங்கு விசேட கருமபீடம் அமைக்கப்படாததால் நீண்ட நேரம் காத்திருந்து மருத்துவரிடம் காண்பிக்க வேண்டிய நிலை தற்போது காணப்படுகின்றது. இதனால் நோயினால் பாதிக்கப்பட்ட சிறார்கள் மட்டுமல்லாது அவர்களைக் கொண்டு வருபவர்களும் சிரமங்களை எதிர் கொள்ளுகின்றனர். ஆக்வே வெளிநோயாளர் பிரிவில் சிறார்களுக்கெனத் தனியான தொரு கருமபீடம் அமைக்கப்படுமாயின் மிகவும் உபயோகமுள்ளதாக விளங்கும்.

மேலும் மதிய வேளைகளில் வெளிநோயாளர் பிரிவில் மருத்துவரிடம் காட்டிவிட்டு மருந்து எடுக்கச் சென்றால் மருந்து வழங்கும் கருமபீடம் சில வேளைகளில் பூட்டப்பட்டுக் காணப்படுகின்றது. இதனால் அதிக நேரம் காத்திருந்து மருந்துகளைப் பெறவேண்டியுள்ளது.

ஆகவே இந்தச் சிறிய குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படுமாயின் யாழ்.போதனா மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவு என்றென்றுமே மக்களால் போற்றப்படும் என்பதில் ஐயமே இல்லை.

மா.தேவிகாராணி,
கொழும்புத்துறை.

# பொறுப்பை உணராத மினிபஸ் சாரதி

அன்று சோமசுந்தரம் அவனியூவில் உள்ள ரயில் கடவையில் சிவப்புவிளக்கு எரிந்து கொண்டு இருந்தது. ரயிலும் வந்து கொண்டிருந்தது (கிட்டத்தட்ட 12:35 மதியம் ) நாங்கள் ரயில் பாதையின் இரு மருங்கிலும் நின்று கொண்டிருந்தோம். அப்போது றோசா மினி பஸ் ஒன்று பாடசாலைப் பிள்ளைகளுடன் ரயில் அண்மித்து வரும் நிலையில் பாதையைக் கடந்தது. நாங்கள் தடுக்கவும் கேட்காமல் பாடசாலை மாணவர்கள் அச்சத்தால் குரல் எழுப்பியும் வேகமாக ரயில் பாதையைக் கடந்து சென்றது. கடவுள் கிருபையால் பிள்ளைகளுக்கோ வாகனத்துக்கோ பாதிப்பு எதுவும் இடம் பெறவில்லை இடம்பெற்றிருந்தால் 30 பிள்ளைகளுக்குமேல் விபத்தில் கிக்கியிருப்பர். ஆகவே இது தொடர்பில் மேற்படி வாகனச் சாரதிக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம். சமூக அக்கறை சார்பில். – தி.ஜெயந்திரன்.





# வடவரணியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை தீருமா?

வரணி வடக்குப்பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளதால் பொதுமக்கள் பெரும் இடையூறுகளை எதிர்கொள் கின்றனர். அவை வீதிகள் ஒழுங்கைகள் போன்ற இடங்களில் படுத்துறங்கி வருவதால் பாடசாலை செல்லும் சிறுவர்களை பெற்றோர் நேரம் தவறாது காலை, மதியம் பாதுகாப்பாகக் கூட்டிவர வேண்டிய நிலை காணப்படுகின்றது. அதுமட்டுமல்லாது பிரதான வீதிகளில் படுத்துறங்கும் நாய்கள் நடந்து செல்வோர் மற்றும் துவிச்சக்கரவண் டிகளில் செல்வோரைத் துரத்துவதால் நிலை தடுமாறி வாகன விபத்துக்கள் கூட ஏற்பட வாய்ப்பாக உள்ளது. எனவே, நாய் உரிமையாளர்கள் காலை ஆறு மணிக் காவது தமது நாய்களைக் கட்டி இரவில் அவிழ்த்துவிட்டு மனித நேயத்துடன் செயற்பட முன்வரவேண்டும். இந்த விடயம் தொடர்பாக பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டும் சாவகச்சேரி பிரதேச சபை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என பொதுமக்கள் கடும்விசனம் தெரிவிக்கின்றனர். அதேவேளை, துணிச்சலான விருது பெற்று தேசியத் தலைவரின் கரங்களில் ஓங்கி ஒலித்த எமது உதயனே வடவரணி மக்களின் குறையை தீர்த்து வைக்க இதனை ஒருமுறை பிரசுரம் செய்து தீர்வு பெற்றுத்தருவாயாக!

– தமிழ்ப்பிரியன்.

## கேலிச் சித்திரம்




நன்றி: லங்காதீப

# விஜய்க்கு பால் வார்க்கும் விசர்க் கூத்து யாழ்ப்பாணத்திலும்

தமிழ்நாட்டைப் போலவே வந்து கொண்டிருக்கின்றது யாழ்ப்பாணமும் சினிமா விடயத்தில். கட் அவுட்களுக்கு பால் ஊற்றுவதும் கட் அவுட் களுடன் பவனி வருவதும் என்று காலம் போய்க் கொண்டிருக்கின்றது. அவ்வளவுக்கு எமது இளம் சமுதாயம் 'வேலையற்று' இருக்கின்றது. சிவாஜி - எம்.ஜி.ஆர் காலம் போய் கமல் - ரஜனி கடந்து இப்போது அஜித் - விஜய் என்ற நிலைக்கு வந்துவிட்டது காலம். அதாவது தல - தளபதி. கொஞ்ச நாள்களாகவே புலி புலி புலினு கத்திட்டே இருந்தார்கள் எங்கள் இளசுகள். வந்துதும்தான் வந்தது புலி ஒக்ரோபர் 1 இல்.

முதல் நாளே திரையரங்குகளில் சென்று தூங்கி விட்டார்களாம் ரிக்கட் வாங்க எம்மவர்கள். வியாழக்கிழமை திரையரங்குகள் அமைந்துள்ள தெருக்களால் பயணம் செய்யவே முடியாத அளவு கூட்டம். இதற்கிடையில் தென்னிந்தியாவில் இருந்து தொற்றிக்கொண்டது 'பால் வார்க்கும் கலாசாரம்'. பசியால் பட்டினியால் வதைபடும் எத்தனையோ சிறுவர்கள் இருக்கும் அதே இடத்தில் உயிரற்ற கட் அவுட்டுக்கு பாலாபிஷேகம் இனிதே நடைபெற்றது. அதில் ஆத்ம திருப்தி கண்டனர் 'தளபதி ரசிகர்கள்'.

இந்திய துணைத்தூதுவர் ஆ.நடராஜன் காந்தியின் பிறந்த தினத்தை முன்னிட்டு ஒரு விடயம் கூறியிருந்தார். அதாவது பிரபலமானவர்கள், பிடித்தவர்களுடன் நின்று புகைப்படம் எடுத்து அதைக் கொண்டாடாமல் அவர்கள் வழியில் வாழுங்கள் என்று குறிப்பிட்டிருந்தார். அதேபோல் தளபதி ரசிகர்கள் இப்படி பாலாபிசேகம் செய்து, கட் அவுட் வைத்து ஊர்வலம் வராமல் அந்தப் பணத்துக்கு உருப்படியாக ஏதாவது செய்யலாம் நிச்சயமாக. ஆனால் அவர்கள் இதை ஏற்றுக் கொண்டார்கள் என்றால் சந்தோசமான விடயம்.

சமூக வலைத்தளங்களில் வேறு போராட்டம். இரு குழுவினர். அதிலும் தல - தளபதி ரீம். மாறி மாறி கலாய்த்துக் கொள்ளும் அளவுக்கு நேரம் கிடைக்கின்றது அவர்களுக்கு. ஒருத்தர் பகிர்ந்திருந்தார் 'புலி படம் எப்பிடி' என்று ஒருவர் கேட்க படம் பார்த்தவர் சொல்கிறார் 'முதல் பாதி கொஞ்சம் மொக்கையா இருந்துச்சு'. மறுபடியும் படம் பார்க்காதவர் கேட்டார் 'அப்போ இரண்டாவது பாதி?' 'அது சூர மொக்கை' என்றார் படம் பார்த்தவர். இதைக் கேட்டுப் பொங்கியவர்கள் ஏராளம். சந்தோஷப்பட்டனர் தல ரசிகர்கள் என்று அது ஒருபுறம்.

எப்போதுதான் நீங்கள் எல்லாம் கலையைக் கலையாகப் பார்க்கப்போகிறீர்கள்? அவனவன் தன் தொழிலைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அதாவது நடிகர்கள் தமது நடிப்பைப் பார்க்கிறார்கள். அதன் மூலம் உழைப்பைப் பார்க்கிறார்கள். இங்கிருப்பவர்கள் தங்கள் வேலையை விட்டுட்டு (வேலை இருந்தாத் தானே) அவர்களின் கட்டவுட்டுக்குப் பாலாபிசேகம் செய்கிறார்கள். பாலாபிசேகப் பால் காசு, கட்டவுட் காசு, ஊர்வல வாகனக் காசு எல்லாம் அப்பாக்களின் வியர்வையா? வாழ்த்துக்கள் இளசுகளே. நீங்கள் உழைத்த பணமாக இருந்திருந்தால் நிச்சயம் இப்படி வீணாக்கியிருக்கமாட்டீர்கள்.

ஓர் அலுவலகத்தில் நடந்த விடயம் அது. ஒருவர் தன் நண்பரிடம் 'புலி படம் எப்படிடா இருக்கு' என்று கேட்டிருக்கிறார். அதற்கு நண்பர் 'மொக்கைதான்' என்று சொல்லியிருக்கிறார். அதுக்குப்போய் 'கத்தி அளவாச்சும் இருக்குமா' என்கிறார்கள். அப்படியான படத்துக்கா இந்த ஆலவட்டம் என்று கேட்கவில்லை. திரைப்பட நட்சத்திரங்களுக்கு எதற்காக இந்த ஆடம்பரம் என்றுதான் கேட்கிறோம்.

நடிகர்கள் வீட்டில் வருமான வரிச் சோதனை என்றால் தங்கள் வீட்டையே சோதனை செய்ய வருமாப்போல ஒரு படபடப்பு. நட்சத்திரங்களுக்கு உயிரைக் கொடுக்குமாப் போல் உங்கள் குடும்பத்துக்கு எப்பவாவது உயிரைக் கொடுத்திருக்கிறீர்களா? வீட்டில் தாய் அரைப் போத்தல் பால் வாங்கி வரச்சொன்னால் கண்டு கொள்ளாமல் போகும் அதே மகன்தான் கட் அவுட்டுக்குப் பாலாபிசேகம் செய் கிறான்.

அவரவர் உணர்ந்து திருந்தவேண்டிய காலம் இது. திருடனாகத் திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது. திரையரங்குகளுக்குச் செல்லவேண்டாம் என்றோ, படம் பார்க்க வேண்டாம் என்றோ, தலைக்கோ தளபதிக்கோ விசிறிகளாக இருக்கவேண்டாம் என்றோ, யாரும் சொல்லவில்லை. அது உங்கள் சுதந்திரம். ஆனால் பெற்றோர் பணத்தை கரியாக்குவது, அவர்களைப் பார்த்து மோதலில் ஈடுபடுவது, நடிகர்களுக்காக மோதிக் கொள்வது போன்ற மூடச் செயல்களில் இறங்காதீர்கள். ஆக்கபூர்வமாகச் செயற்படுங்கள்.

புலிக்கு இந்தப் பாடு என்றதும் அஜித் ரசிகர்கள் கலாய்க்கின்றனர். பொறுத்திருந்து பார்க்கலாம். வேதாளம் வந்ததும் அவர்கள் என்னவெல்லாம் செய்யப்போகிறார்கள் என்று. அவர்களாவது ஆக்கபூர்வமாக செயற்படுகிறார்களா என்று.

பத்தி எழுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வெலே சுதா'விடம் பணம் பெற்ற சிறைச்சாலை ஊழியர்கள் யார்?

## வெளிப்படுத்தக் கோருகிறார் ஆணையாளர்

கொழும்பு, ஒக் .03
பிரபல போதைப் பொருள் வர்த்தகரான வெலே சுதாவிடமிருந்து ஈஸிகேஸ் முறையில் பணம் பெற்றுக் கொண்டதாக இரகசியப் பொலிஸார் கூறியுள்ள சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் 45 பேரின் பெயர்ப் பட்டியலை தமக்கு அறியத் தருமாறு சிறைச்சாலை ஆணையாளர் ரோஹண புஸ்பகுமார, பொலிஸ்மா அதிபரிடமும் இரகசியப் பொலிஸின் பிரதிப் பொலிஸ்மா அதிபரிடமும் கோரியுள்ளார்.
வெலே சுதாவினால் ஈஸிகேஸ் முறையில் 174 பேருக்குப் பணம் வழங்கப்பட்டிருப்பதாகவும் அவர்களில் 45 பேர் சிறைச்சாலைகளின் உத்தியோகத்தர்கள் எனவும் கடந்த 22 ஆம் திகதி இரகசியப் பொலிஸார் கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றத்தில் வெளிப்படுத்தியிருந்தனர். இதனை அடுத்தே இந்தக் கோரிக்கை விடுக் கப்பட்டுள்ளது.
இது குறித்த விசாரணைகளை நடத்தி, அவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளைத் தாம் மேற்கொள்வதாகவும் சிறைச்சாலைகள் ஆணையாளர் கூறியுள்ளார்.
அந்த உத்தியோகத்தர்களின் பெயர்களை வெளிப்படுத்தாமல் உள்ளதால் சிறைச்சாலை திணைக்களத்திலுள்ள 7ஆயிரத்து 500 பேர் வரையிலான உத்தியோகத்தர்களுக்கு பெரும் அபகீர்த்தி ஏற்பட்டுள்ளதாகவும், அதனால் அந்த உத்தியோகத்தர்களின் பிள்ளைகள் கூட உளரீதியில் பாதிக்கப்படுவதாகவும் சிறைச்சாலை ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (த-22)

# இரவில் கொட்டப்படும் மலக்கழிவுகள் குடிதண்ணீர் மாசடையும் அபாய நிலை

## மந்துவில் மற்றும் வேம்பிராய் பகுதிகள் துர்நாற்றத்தில்

சாவகச்சேரி,ஒக்.03
சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட மந்துவில் மற்றும் வேம்பிராய் பகுதிகளில் காணப்படும் பற்றைகள் மற்றும் குளங்களில் இரவோடு இரவாக வாகனங்களில் கொண்டு வரப்படும் மலக்கழிவுகள் கொட்டப்பட்டு வருகின்றன. இதனால் அப்பகுதிகளில் துர்நாற்றம் வீசி பொதுமக் களுக்கு பெரும் சுகாதாரச் சீர்கேட்டை ஏற்படுத்துவதுடன் பொது மக்கள் பயன்படுத்தும் குடிதண்ணீரில் அவை கலக்கும் வாய்ப்பும் உள்ளதென அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.
வேம்பிராய் பகுதியில் உள்ள பற்றைகளில் வாகனங்களில் கொண்டு வரப்படும் மலக்கழிவுகள் கொட்டப்படுகின்றன. இதனால் அருகில் உள்ள தேசிய நீர் வழங்கல் அதிகார சபையினால் அயலில் உள்ள குடியிருப்புகளுக்கு வழங்கப்படும் குடிதண்ணீரில் அவை கலக்கும் அபாயம் உள்ளது. அதேவேளை, அந்த இடத் தில் உள்ள கிணற்றிலிருந்து அதிகார சபையினரால் சரசாலை, வரணி, மந்துவில் போன்ற இடங்களுக்கு குழாய் மூலம் குடிதண்ணீர் வழங்கப்படுகின்றது. அத்துடன் அப்பகுதிகளில் மக்களாலும் கால் நடை களாலும் நீண்டகாலமாக பயன்படுத்தப்பட்டு, தற்போது நீரின்றிக் காணப்படும் குளங்களிலும், வாகனங்களில் கொண்டு வரப்படும் கழிவுகள் கொட்டப்படுவதால், மழை காலத்தில் நீர் நிரம்பி வெளியேறி பொதுமக்களுக்கு கொடிய நோய்களை ஏற்பட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. கழிவு கொட்டப்படும் பகுதிகளில் பொதுமக்கள் செல்ல முடியாத அளவுக்கு துர்நாற்றம் வீசுகின்றது என்றும் அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். படையினரின் வாகனங்களில் கொண்டு வரப்படும் கழிவுகளே அவ்வாறு கொட்டப்படு கின்றன எனவும், இது தொடர்பாக சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்குப் பல தடவைகள் முறைப்பாடுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

# விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,ஒக்.03
யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியின் 2016 ஆம் ஆண்டுக்கான கற்கை நெறிகளுக்கு மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. எந்திரனியல் தொழில்நுட்பக் கற்கை நெறிகள், வர்த்தகத் துறை கற்கை நெறிகள், விசேட கற்கை நெறிகள், கைப்பணியாளர் கற்கை நெறிகள், பொதுக் கற்கை நெறிகள் ஆகியவற்றுக்கு முழு நேர, பகுதி நேர கற்றல் செயற்பாட்டுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கல்லூரியின் அதிபர் அறிவித்துள்ளார்.
இது தொடர்பான விவரங்கள் அடங்கிய அறிவித்தல்கள் அலுவலகங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. (ஐ-9)

## சுதுமலைப் பகுதியில் இளைஞர்கள் அடாவடி; வீதியால் செல்வோரிடம் பணம் அபகரிக்கும் தந்திரம்

யாழ்ப்பாணம்,ஒக்.03
மானிப்பாய், சுதுமலைப் பகுதிகளில் மோட்டார் சைக்கிளில் வீதி வலம் வரும் சில இளைஞர்கள் பொலிஸாருக்குப் பணம் கட்டவேண்டும் எனக் கூறி வீதியால் செல்லும் அப்பாவி மக்களை ஏமாற்றிப் பணத்தை அபகரித்துச் செல்வதில் ஈடுபட்டுள்ளனர். இவர்களின் மோசடி குறித்து அச்சம் கொண்டுள்ள மக்கள், இதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாரைக் கோரியுள்ளனர். இணுவிலைச் சேர்ந்த 80 வயதுடைய முதியவர் ஒருவரிடமும், வீதியால் மோட்டார் சைக்கிளை உருட்டிச் சென்ற முதியவர் ஒருவரிடமும் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்கள் பணத்தைக் கேட்டுப் பெற்றுள்ளனர். பொலிஸாரின் பெயரைச் சொல்லி அப்பாவி மக்களிடமிருந்து பணத்தை அபகரித்துச் செல்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் பொலிஸாரைக் கோரியுள்ளனர். (ஐ-115)

## அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றியவருக்கு.

### ஒரு லட்சம் ரூபா அபராதம்

சாவகச்சேரி,ஒக்.03
அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்ற வாகனத்தின் சாரதிக்கும், உதவியாளருக்கும் சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த 30 ஆம் திகதி ஒரு லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.
அனுமதிப் பத்திரமின்றி வாகனத்தில் மணல் ஏற்றிச் சென்றதாக கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசார ணைக்கு எடுக்கப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த நீதிவான் வாகன சாரதிக்கும் உதவியாளருக்கும் தலா 50 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்தார். அத்துடன் வாகனத்தில் கொண்டு செல்லப்பட்ட மணலைப் பறிமுதல் செய்யுமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ஐ-9)

## வீட்டுக்குள் அத்துமீறி புகுந்து தாக்குதல்; சந்தேகநபர்களுக்கு விளக்கமறியல்


கரணவாய், ஒக்.03
சட்டத்தரணியின் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து, வீட்டு உடைமைகளைச் சேதமாக்கிய இருவரை எதிர்வரும் 9 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் மா.கணேசராசா உத்தரவிட்டுள்ளார்.
கற்கோவளத்திலுள்ள சட்டத்தரணி ராகவேந்திராவின் வீட்டுக்குள் நுழைந்த இருவர் அங்கு ரகளையில் ஈடுபட்டதுடன், வீட்டுக் கதவு, ஜன்னல், தொலைபேசி மற்றும் தொலைக்காட்சி என்பவற்றைச் சேதப்படுத்தியுள்ளனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் வாசுதேவன் அமலகரன் (வயது – 18) ராஜேந்திரன் முகுந்தன் (வயது – 38) ஆகிய இருவரையும் பருத்தித்துறைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.
கைது செய்யப்பட்ட இருவரையும் நேற்றுமுன்தினம் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் நீதிபதி மா.கணேசராசா முன்னிலையில் முற்படுத்திய போது இருவரையும் எதிர்வரும் 9 ஆம் திகதி வரைக்கும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ஐ-108)

# சிறப்பு மலர் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஒக்.03
வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் 30ஆவது ஆண்டு நிறைவு விழா சிறப்பு மலர் 'முத்து' வெளியீடும், சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் வாழ்த்துரையை இலங்கை வங்கி ஓய்வுநிலை உதவிப் பொதுமுகாமையாளர் க.பாலசுப்பிரமணியமும், தொடக்கவுரையை வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமாரும் நிகழ்த்துவார்கள். நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் ஓய்வு நிலை அரச அதிபர் வே.விஸ்வலிங்கம் கலந்து கொள்வார். (ஐ-35)

# மரண அறிவித்தல்

## குணலிங்கம் பாலச்சந்திரன் (பாலன்)



ஏழாலை மத்தி, காளி கோயிலடியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, மோதரையை வசிப்பிடமாகவும் கொண்ட குணலிங்கம் பாலச்சந்திரன் 30.09.2015 புதன்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற குணலிங்கம் மற்றும் மனோன்மணி தம்பதியினரின் அன்பு மகனும், யோகவனிதாவின் அன்புக் கணவரும், சிவனேசன், நிர்மலா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், றேனுஜன், தனுஜன், அக்‌ஷயா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.10.2015) ஞாயிற்றுக் கிழமை பி.ப 2.00 மணியளவில் ஏழாலையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஏழாலை மத்தி,
ஏழாலை.

(65093,,11,15)

தகவல் :
குடும்பத்தினர்.

# மோட்டார் குண்டு மீட்பு

சாவகச்சேரி,ஒக்.03
வீதியோர வேலியில் சாத்தப்பட்டிருந்த நிலையில் 70 மி.மீ. மோட்டார் குண்டொன்று சாவகச்சேரி பொலிஸாரால் கடந்த 30 ஆம் திகதி மீட்கப்பட்டுள்ளது. மீசாலை கந்தசாமி ஆலயத்துக்கு அருகில் உள்ள வீதியில் நடந்து சென்ற ஒருவர் வழங்கிய தகவலையடுத்து அப்பகுதிக்கு விரைந்த பொலிஸார், அப்பகுதியில் பாதுகாப்பை ஏற்படுத்திய பின்னர், அது தொடர்பாக நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்து, குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினர் மூலம் குண்டை அப்புறுப்படுத்த அனுமதி கோரியிருந்தனர். நீதிவான் அனுமதி வழங்கியதையடுத்து மோட்டார் குண்டு மீட்கப்பட்டுள்ளது. (ஐ-9)

# இளைஞன் சாவு

மட்டக்களப்பு, ஒக்.03
மட்டக்களப்பு மொறக்கொட்டாஞ்சேனை பிரதான வீதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவன், உயிரிழந்தார். சந்திவெளியைச் சேர்ந்த 18 வயதான நாகநாதன் என்பவரே மேற்படி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மோட்டார் சைக்கிள், கார் ஒன்றுடன் மோதுண்டதாலேயே குறித்த விபத்து இடம்பெற்றுள் ளது. மோட்டார் சைக்கிளின் அதி வேகம் காரணமாகவே இந்த விபத்து இடம் பெற்றுள்ளதாக ஆரம்பக் கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இளைஞனின் சடலம் தற்போது மட்டக்களப்பு வைத்திய சாலை யில் வைக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-10)

# மரண அறிவித்தல்

## றொஹான் சஞ்சே ராஜீ

(பிரதான பரிசோதகர் - மதுவரித்திணைக்களம் கிளிநொச்சி, முல்லைத்தீவு)



சாவகச்சேரி, கச்சாய் வீதியைச் சேர்ந்த றொஹான் சஞ்சே ராஜீ நேற்று (02.10.2015) வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.
அன்னார் காலஞ்சென்ற அல்பிரட் ராஜசிங்கம் ராஜீ (மதுவரி உதவி ஆணையாளர்) மற்றும் றெஜினா ஜோதிமலர் (கனடா) தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஆசீர்வாதம் மற்றும் யோசப்பின் தம்பதியினரின் அன்பு மருமகனும், யூட்ஸி ராஜீயின் (ஆசிரியை- மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி) அன்புக் கணவரும், அன்றூ, கஜீபன் (நோர்வே), அனற், சஞ்சிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சந்திரிகா (கனடா), தேவிகா (கனடா), ரேணுகா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதர னும் ஜெயந்தன், மனோன், அஜித், ஜோ, ஜெய்சி, ஜீட், ஜெய்லின் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

தகவல் :
குடும்பத்தினர்.

## மணல் விநியோகத்துக்கான அனுமதிப் பத்திரம் நிறுத்தம்

பளை,ஒக்.03
பளை பிரதேச செயலகத்தினால் மணல் விநியோகத்துக்கான அனுமதிப் பத்திரம் வழங்கும் செயற்பாடு நிறுத்தப்பட்டுள்ளதாக அறி விக்கப்பட்டுள்ளது.
குறித்த பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட வீடமைப்புத் திட்டங்களுக்காக, அல்லிப்பளைப் பகுதியில் இனங்காணப்பட்ட பகுதிகளில் வீடமைப்புத் தேவைக்கு மட்டும் மணல் விநியோகத்துக்கு அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டது என்றும், தற்போது வீட்டுத் திட்ட வேலைகள் முடிவடைந்துள்ளதால் மணல் விநியோகத்துக்கான அனுமதிப் பத்திரம் வழங்குவது கடந்த ஒரு மாதமாக நிறுத்தப்பட்டுள்ளதென்றும் பிரதேச செயலர் திருமதி ஜெ.பரமோதயன் அறிவித்துள்ளார்.
இந்தப் பகுதியில் தினமும் பெருமளவு வாகனங்களில் மணல் ஏற்றிச் செல்லப்படுவதாக பொதுமக்கள் முறைப்பாடு செய்து [illegible] ஏற்றுவதற்கான அனுமதி வழங்கு [illegible]ன்றும், சட்டவிரோதமாக மணல் ஏற்றுவோர் மீது நடவடிக்கை எடுக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (ஐ-9)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எவ்வாறான விசாரணை தேவை என்பதை குற்றஞ்சாட்டப்பட்டவர்களிடம் கேட்க முடியாது

*தமிழில்: ரஜீபன்*

குற்றச்சாட்டு சுமத்தப்பட்டவர்களிடம் நீங்கள் எவ்வாறான விசாரணையை விரும்புகின்றீர்கள் எனக் கேட்க முடியாது என சனல் 4 ஊடகவியலாளர் கெலம் மக்ரே தெரிவித்துள்ளார்.

டி.என்.எம்மிற்கு வழங்கிய பேட்டியில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:–




**கேள்வி:** இலங்கை தொடர்பாக நீங்கள் எடுத்த நிலைப்பாடு சரியானது என்பதை ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலக அறிக்கை உறுதிசெய்துள்ளதா?

**பதில்:** அந்த அறிக்கை மிகவும் வரவேற்கத்தக்கது என நான் கருதுகின்றேன், எங்களுக்கு ஏற்கனவே தெரிந்திருந்த விடயங்களும், நாங்கள் சுயாதீனமாக ஆராய்ந்து உறுதிப்படுத்திய விடயங்களும் மிகச்சரியானவை என்பதை இந்த அறிக்கை உறுதிசெய்துள்ளது. நாங்கள் உண்மையே தெரிவிக்கின்றோம் என்பது எங்களுக்கு ஏற்கனவே தெரிந்திருந்தது. இல்லாவிடில் நாங்கள் அதனைத் தெரிவித்திருக்க மாட்டோம்,

இலங்கை அரசு எங்களுடைய செய்திகளை நிராகரித்த ஒவ்வொரு தருணத்திலும் அதனை விட வலுவான ஆதாரங்கள் வெளியாகின. இலங்கை அரசு தெரிவிப்பது பிழை என்பதைப் புலப்படுத்தின. அதுவே அவர்களுக்குப் பிரச்சினையாகக் காணப்பட்டது. ஆதாரங்கள் தொடர்ந்தும் வெளியாகின்றன.

**கேள்வி:** ஐக்கிய நாடுகள் அறிக்கை குறித்து நீங்கள்திருப்தியடைகிறீர்களா? அறிக்கையில் ஏதாவது தவறவிடப்பட்டுள்ளது என நீங்கள் கருதுகின்றீர்களா? பெயர்களைப் பகிரங்கப்படுத்தியிருக்கவேண்டும் என நீங்கள் கருதுகிறீர்களா?

**பதில்:** இடம்பெற்ற குற்றங்களின் அளவு மிகப்பெரியது என்பதால் சில விடயங்கள் தவறவிடப்பட்டுள்ளன, குறிப்பிட்ட குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் என ஏற்கனவே இனம் காணப்பட்ட சிலர் உள்ளனர், கட்டளைப்பொறுப்பு உள்ளவர்களாக குற்றம்சாட்டப்பட்ட சிலர் உள்ளனர்.

அவர்கள் யார் என்பது எங்களுக்குத் தெரியும், தாங்கள் யார் என்பது அவர்களுக்கும் நன்கு தெரியும்.

ஆனால் முக்கியமான விடயம் அவர்கள் யார் என்பது குறித்த பெயர்களை வெளியிடுவதல்ல,ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை துணிச்சலாகச் செயற்பட்டு வலுவான பக்கச்சார்பற்ற சர்வதேச கட்டுப்பாட்டின் கீழ் பொறுப்புக்கூறுவதற்கான சுயாதீன நடைமுறையை ஏற்படுத்துவதே முக்கியமான விடயம்.

**கேள்வி:** இலங்கையில் ஆட்சி மாற்றம் என்பது தமிழர்களின் நிலைமையில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாகக் கருதுகிறீர்களா? அதிகளவு நல்லிணக்கம், 2009 இல் என்ன நடைபெற்றது என்பது குறித்த உண்மையைக் கண்டறிதல், போர்க் குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்துதல் போன்றவை குறித்த நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது எனக் கருதுகிறீர்களா?

**பதில்:** புதிய அரசு சில விடயங்களில் முன்னைய அரசை விட முற்றிலும் மாறுபட்டதாகக் காணப்படுகின்றது, அதேவேளை ஏனைய விடயங்களில் குறிப்பாக தமிழர் நிலைமையில் எந்தவித மாற்றங்களும் ஏற்படவில்லை. நிலைமையில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை என உண்மையான அர்த்தத்தில் தெரிவிக்கலாம்.

மைத்திரி, ரணில் அரசு சந்தேகத்திற்கு இடமின்றி நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரங்களை ஓரளவுக்குக் குறைத்துள்ளது, அது ஊடகங்களின் சுதந்திரத்தை அதிகரித்துள்ளது, முன்னைய அரசின் காலத்தில் காணப்பட்ட ஊழலைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

ஆனால் தமிழ் மக்களைப் பொறுத்தவரை உண்மையான மாற்றங்கள் என்று எதுவுமில்லை, காணமற்போனவர்களின் விவகாரத்தில் உண்மையான முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை,

இராணுவத்திடமிருந்து நிலங்கள் விடுவிப்பது பெயரளவிலேயே இடம்பெற்றுள்ளது. வடக்கு கிழக்கில் இராணுவ ஆக்கிரமிப்பு தொடர்கின்றது.

தமிழர்களுக்கு எதிரான போர்க் குற்றங்களில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டப்பட்ட பல மூத்த அதிகாரிகளை தமிழர் நிலங்களை ஆக்கிரமிக்கும் படையினருக்குத் தலைமைதாங்க ஜனாதிபதி சிறிசேன நியமித்துள்ளார்.

உலகுக்கு ஒன்றைத் தெரிவிப்பதும், வடபகுதித் தமிழ் மக்களுக்கு இன்னொன்றைத் தெரிவிப்பதுமே அரசின் பிரச்சினையாக உள்ளது, கடந்த திங்கட்கிழமை இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் சமரசத் தொனியில் உரையாற்றினார், குற்றவாளிகளை இனம்கண்டு நீதியின் முன் நிறுத்துவதற்கான நீதி நடைமுறை குறித்துத் தெரிவித்தார், அதேகாலப் பகுதியில் அவரது ஜனாதிபதி தாய்மண் குறித்து உணர்ச்சிகரமாக உரையாற்றியதாக சிறிசேனவின் உத்தியோகபூர்வ இணையத்தளம் தெரிவித்தது. வீரமிக்க போர் வீரர்கள் தங்கள் குருதியைச் சிந்தி ஐக்கியப்படுத்திய தேசத்தை எவரும் பிளவுபடுத்து வதற்கு அனுமதிக்கப்போவதில்லை என சிறிசேன உறுதியளித்தார். அதன் மூலம் அவர் சமஷ்டி போன்ற தீர்வை நிராகரித்ததுடன், முப்படையைச் சேர்ந்த ஒவ்வொரு வீரரும் போர் வீரர் எனக் குறிப்பிட்டார். (சிலர் போர்க் குற்றங்களில் ஈடுபட்டனர் என்பதை ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக)

இலங்கை வெளிவிவகார அமைச்சர் பாதிக்கப்பட்டவர்களுடன் பொறுப்புக்கூறும் பொறிமுறை தொடர்பாக ஆராயப்படும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபை கடந்த வாரம் தெரிவித்த அதேவேளை நடைமுறையில் ஒரேயொரு கலந் துரையாடல் மாத்திரமே இடம்பெற்றுள்ளது. முன்னைய வாரத்தில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோர் முப்படைகளின் தளபதிகளைச் சந்தித்து கலந்துரையாடினர், எஞ்சியுள்ள பொறுப்புக்கூறல் விவகாரங்களுக்குத் தீர்வைக் காண்பதற்கான சிறந்த பொறிமுறை குறித்து இவர்கள் ஆராய்ந்தனர்.

குற்றச்சாட்டு சுமத்தப்பட்டவர்களிடம் நீங்கள் எவ்வாறான விசாரணையை விரும்புகின்றீர்கள் எனக் கேட்க முடியாது,அந்த நீதிமன்றத்துக்குப் பாதிக்கப்பட்டவர்கள் சமூகமளிப்பார்கள் என எதிர்பார்க்கவும் முடியாது.

**கேள்வி:** சர்வதேச நீதிபதிகள், விசாரணையாளர்களை உள்ளடக்கிய தற்காலிக கலப்பு நீதிமன்றத்தினால் போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்க முடியுமா? அது போதுமானதா?

**பதில்:** எந்த நீதிமன்றமும் சில அடிப்படைக் கொள்கையைப் பின்பற்ற வேண்டியிருக்கும் என நான் கருதுகின்றேன், அது கலப்பாக இருந்தாலும்சரி, சர்வதேச நீதிமன்றமாக இருந்தாலும் சரி, அதில் வெளிநாடுகளைச் சேர்ந்த நீதிபதிகளும் சட்டவாளர்களும் பெரும்பான்மையில் இடம் பெற்றிருப்பார்கள், அது சர்வதேச சட்டத்தின் கீழ் இயங்கவேண்டும், அது முற்றுமுழுதாக சுதந்திரமாகக் காணப்படவேண்டும், நிதி விடயங்கள் உட்பட அனைத்து விடயங்களிலும், சாட்சியங்களின் பாதுகாப்பை உறுதி செய்யவேண்டிய நிலையில் அது காணப்படவேண்டும், அந்த நீதிமன்றம் இவற்றைச் செய்தால் அதனால் பாதிக்கப்பட்டவர்களின் நம்பிக்கையை [illegible] செயற்படாவிட்டால் அது பாதிக்கப்பட்ட மக்களின் நம்பிக்கையையும், தனது முக்கியத்துவத்தையும் இழக்கும்.

> **கலப்பாக இருந்தா லும், சர்வதேச நீதிமன்றமாக இருந்தாலும், அதில் வெளிநாடுகளை சேர்ந்த நீதிபதிகளும் சட்டவாளர்களும் பெரும்பான்மையில் இடம் பெற்றிருப்பார்கள், அது சர்வதேச சட்டத்தின் கீழ் இயங்கவேண்டும், அது முற்றுமுழுதாக சுதந்திரமாக காணப்படவேண்டும், நிதி விடயங் கள் உட்பட அனைத்து விடயங்களிலும், சாட்சியங்களின் பாதுகாப்பை உறுதி செய்யவேண்டிய நிலையில் அது காணப்படவேண்டும், அந்த நீதிமன் றம் இவற்றைச் செய்தால் அதனால் பாதிக்கப்பட்டவர்களின் நம்பிக் கையை பெறமுடியும்.**

**கேள்வி:** இலங்கை குறித்து முக்கிய அறிக்கைகள் வெளியாவதற்கு முன்னர் அல்லது தீர்மானங்கள் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் உங்கள் வீடியோக்கள் வெளியாவது ஏன்? விவரணச்சித்திரங்களைச் சர்வதேச அரசியலின் ஒரு கருவியாக பயன்படுத்த முயல்கிறீர்களா?

**பதில்:** நான் ஒரு பத்திரிகையாளன், படத்தயாரிப்பாளன், அவ்வப்போது வர்ணனையாளன்,செய்திகள் விடயத்தில் முன்னணியில் இருப்பதே எனது தொழில், சர்வதேச அரங்கில் முக்கியத்துவம் பெற்றிருக்கும் விடயங்கள் குறித்து நான் பேசுவதோ அல்லது படங்களை வெளியிடுவதோ தற்செயலானதல்ல,அது என் தொழில்

**கேள்வி:** உங்களுடைய படங்களை இலங்கை மீது பொருளாதார மற்றும் பூகோள அரசியல் அழுத்தங்களைக் கொடுப்பதற்கான, அழுத்தங்களைக் கொடுப்பதற்கு மேற்குலகம் பயன்படுத்துவது குறித்து நீங்கள் கரிசனை கொண்டுள்ளீர்களா?

**பதில்:** எனது படைப்புக்கள் எந்தவித பொருளாதார, பூகோள அரசியல் ஆதாயங்களையும் நோக்கமாகக் கொள்ளாதவை என நான் கருதுகின்றேன், இதன் காரணமாகவே சிலவேளைகளில் எனது படத்தில் உள்ள விடயங்கள் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை தெரிவிக்கும் விடயங்களுடன் பொருந்துகின்றன, ஒத்துப்போகின்றன.

சிலவேளைகளில் ஐக்கியநாடுகள் பாதுகாப்புச் சபையுடன் எனது படைப்புக்கள் முரண்படுகின்றன, அவர்கள் தெரிவிப்பதை நிராகரிக்கின்றன, இந்த வருட ஆரம்பத்தில் உள்நாட்டு விசாரணை என்பது இடம்பெறாது, அது ஏற்றுக்கொள்ள முடியாதது என நான் ஆதாரங்களை முன்வைத்ததும் அவ்வாறானதே.

**கேள்வி:** விசாரணைகளுக்கான தருணம் முடிவடைந்துவிட்டது, தற்போது போர்க் குற்ற விசாரணைகள் ஆரம்பமாவதற்கான தருணம் என நீங்கள் கருதுகிறீர்களா?

**பதில்:** சர்வதேச சட்டங்களின் கீழ் சர்வதேச நீதிபதிகள், விசாரணையாளர்களை உள்ளடக்கிய நேர்மையான, நம்பகத்தன்மை மிக்க பொறுப்புக்கூறும் செயற்பாடுகளை உருவாக்குவதற்கான முயற்சி களை ஐக்கிய நாடுகள் ஆரம்பிப்பதற்கான தருணம் வந்துவிட்டதாக நான் கருதுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொறாமையை விலக்குங்கள்


உடல் பலவீனத்தையோ, மனப் பலவீனத்தையோ உண்டாக்கும் எதையும் அணுகக் கூடாது. நமது சமுதாயம் இப்போது இருக்கும் தாழ்ந்த நிலைமைக்கு மதம் காரணம் அல்ல. மதத்தை முறையாகப் பின்பற்றாமல் போனது தான் சமுதாயத்தின் வீழ்ச்சிக்குக் காரணம் என்று நான் சொல்கிறேன். எவனுடைய இதயம் ஏழைகளுக்காக குருதி வடிக்கிறதோ, அவனையே நான் மகாத்மா என்பேன். மற்றவர்கள் துராத்மாக்களே. எப்போதும் பொறாமையை விலக்குங்கள். இது வரையிலும் நீங்கள் செய்யாத மகத்தான காரியங்களை எல்லாம் செய்து முடிப்பீர்கள். கீழ்த்தரமான தந்திரங்களால் இந்த உலகில் மகத்தான காரியம் எதையும் சாதித்துவிட முடியாது. இது எனது உறுதியான நம்பிக்கை. சோம்பேறித்தனத்தை எந்த வழியிலும் துரத்தியாக வேண்டும். சுறுசுறுப்பு என்பதற்கு எதிர்ப்பது என்பது பொருள்.



விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....

# சமச்சீர் உணவு முறை

சமச்சீர் உணவு பற்றிப் பலரும் தெரிந்திராமல் அன்றாட உணவுகளைச் சாப்பிட்டு வருகின்றனர். ஆனால், சரிவிகித உணவாக காலை மற்றும் இரவு வேளைகளில் குருணைத் தானியங்களில் செய்யப்படும் கஞ்சி, அடை, களி போன்றவற்றைச் சாப்பிடலாம். உணவில் அதிகக் கொழுப்புச் சேராதிருக்க, தோல் நீக்கிய இறைச்சியே சமச்சீரில் இடம் பெறும். எண்ணெய்யில் பொரித்த காய்கள் எதுவும் சமச்சீரில் இடம் பெறாது. ஆவியில் வேகவைத்த உணவுகளில் சிறிதளவு எண்ணெய் சேர்ப்பது மட்டுமே சமச்சீர். மிகவும் பொடியாக நறுக்கிய காய், கீரை, கனிகளில் சத்துக்கள் வெகுவாகக் குறைந்துவிடும். உருக்கிய நெய், ஆடை, கொழுப்பு நீக்கிய நீர்மோர் நல்லவை. பிறந்தது தொடக்கம் ஒரு வயது வரை முதலாவது தான இந்த வளர்ச்சிக்கு ஆதாரம், தாய்ப் பால். பின்னர் அதிக ஆற்றலைத் தரும், கொழுப்பு, மாவுச் சத்து, புரதச்சத்துக்கள் நிறைந்த உணவைச் சாப்பிடக் கொடுக்க வேண்டும். 1–13 வயது வரை வளர்ச்சிக்கு உதவும் பருவம் இது. நோய் எதிர்ப்புச் சக்தியைப் பெறும் பருவம். சக்தியை மேம்படுத்தும் உணவுகளைச் சாப்பிட வேண்டும். பால், காய்கறிகள், பழங்கள், அசைவ உணவுகள் சிறுதானியம், அரிசி, கோதுமை, கேழ்வரகு, பருப்பு மற்றும் பயறு வகைகளை உட்கொள்ளலாம்.



14–25 வயது வரை: எலும்பு வளர்ச்சிக்கு ஆதாரமான உணவுகள் தேவை, உடல் வளர்ச்சிக்குத் தேவையான நட்ஸ், பயறு, பருப்பு, பால் பொருள்கள் அசைவ உணவுகளைச் சாப்பிடலாம்.

25 வயதுக்கு மேற்பட்டோர்: அனைத்து உணவுகளையும் சமச்சீரான அளவில் சாப்பிட வேண்டும்.

## மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 40 | 40 | 60 | 40 | 60 | 60 | 20 |
| கத்தரி | 60 | 60 | 60 | 60 | 50 | 80 | 80 | 30 |
| கரட் | 70 | 120 | 120 | 80 | 70 | 120 | 100 | 80 |
| மரவள்ளி | 50 | 50 | 50 | 40 | 80 | 60 | 50 | 30 |
| பயிற்றை | 100 | 60 | 70 | 60 | 80 | 120 | 100 | 50 |
| பாகல் | 100 | 80 | 140 | 100 | 80 | 130 | 110 | 80 |
| கருணைக்கிழங்கு | 80 | 100 | 80 | 100 | 60 | 100 | 120 | 70 |
| பெ.வெங்காயம் | 120 | 100 | 80 | 100 | 100 | 100 | 120 | 80 |
| சி.வெங்காயம் | 90 | 100 | 100 | 100 | 120 | 140 | 100 | 80 |
| பூசணி | 30 | 30 | 40 | 40 | 40 | 60 | 50 | 30 |
| தக்காளி | 70 | 80 | 80 | 100 | 80 | 120 | 80 | 80 |
| வாழைக்காய் | 60 | 50 | 50 | 50 | 40 | 60 | 60 | 30 |
| கீரை | 30 | 20 | 30 | 10 | 20 | 40 | 30 | 20 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 20 | 20 | 40 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 140 | 120 | 140 | 120 | 120 | 200 | 200 | 100 |
| புடோல் | 50 | 60 | 40 | 60 | 40 | 60 | 60 | 50 |
| கோவா | 70 | 30 | 70 | 70 | 60 | 80 | 100 | 40 |
| வெண்டி | 70 | 40 | 60 | 50 | 60 | 60 | 50 | 40 |
| போஞ்சி | 160 | 140 | 160 | 160 | 140 | 200 | 160 | 120 |
| லீக்ஸ் | 80 | 80 | 100 | 80 | 60 | 120 | 80 | 60 |
| தேங்காய் | 50 | 50 | 50 | 60 | 40 | 40 | 35–40 | 35 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 120 | 100 | 120 | 120 | 100 | 120 |
| தேசிக்காய் | 200 | 200 | 160 | 200 | 200 | 400 | 160 | 250 |
| வல்லாரை | 25 | 20 | 10 | 10 | 30 | 20 | 15 | 08 |
| கறிமிளகாய் | 100 | 100 | 100 | 80 | 80 | 120 | 120 | 50 |
| இராசவள்ளி | – | – | – | 160 | 100 | – | 180 | 90 |
| முருங்கைக்காய் | 120 | 80 | 120 | 70 | 120 | 80 | 120 | 80 |

## நாளை

புரட்டாதி–17
ஞாயிற்றுக்கிழமை
04.10.2015

*திதி: ஸப்தமி*
*மு.இ.08.37 வரை*
*நட்சத்திரம்:*
*மிருகசீரிடம்*
*பி.ப.01.36வரை*
*சுபநேரம்:*
*09.02–10.32 வரை*
*இராகு காலம்:*
*04.32–06.02 வரை*

## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 700 | 800 | 700 | 600 |
| நண்டு | 350 | 400 | 300 | 400 | 200 | 400 |
| கணவாய் | 550 | 600 | 300 | 700 | 700 | – |
| பாரை | 500 | 500 | 500 | 600 | – | 430 |
| சுறா | 500 | 500 | – | 700 | 700 | – |
| சீலா | 300 | 400 | 300 | 450 | 400 | 350 |
| விளை | 700 | 500 | – | 500 | 600 | 400 |
| மூரல் | 300 | 400 | – | 400 | 400 | – |
| கும்பிளா | 400 | 400 | 300 | 400 | 400 | 350 |
| கிழாக்கன் | 500 | 800 | 300 | 500 | – | – |
| ஒரா | 400 | 350 | 300 | 450 | – | 350 |
| திரளி | 250 | 250 | 100 | 400 | 200 | – |
| நகரை | 200 | 250 | 200 | 300 | 200 | 300 |
| ஆடை | 150 | 150 | 80 | 120 | 100 | 80 |
| ஒட்டி | 250 | 200 | 100 | 300 | – | – |
| திருக்கை | 150 | 300 | 250 | 400 | 300 | 150 |
| பாலை | 400 | 250 | – | 500 | – | – |
| வாளை | 100 | 150 | – | 400 | 300 | 250 |
| கொய் | 100 | 150 | 100 | 120 | 50 | – |
| மதனம் | 150 | 200 | – | 300 | – | 250 |

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | | | 5 | 7 | 9 | | 4 |
| 7 | | | 1 | | | | | 8 |
| | | | | | | | 5 | |
| 4 | 5 | 6 | | | | | | |
| | 1 | | 8 | | 6 | | 3 | |
| | | | | | | 6 | 4 | 1 |
| | 8 | | | | | | | |
| 2 | | | | | 9 | | | 3 |
| 6 | | 3 | 2 | 1 | | | 8 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 4 | 1 | 5 | 9 | 2 | 7 | 3 | 6 |
| 6 | 3 | 5 | 8 | 7 | 1 | 2 | 9 | 4 |
| 2 | 9 | 7 | 3 | 6 | 4 | 5 | 1 | 8 |
| 7 | 2 | 4 | 9 | 1 | 5 | 6 | 8 | 3 |
| 1 | 6 | 3 | 4 | 8 | 7 | 9 | 5 | 2 |
| 9 | 5 | 8 | 2 | 3 | 6 | 4 | 7 | 1 |
| 4 | 1 | 2 | 7 | 5 | 3 | 8 | 6 | 9 |
| 3 | 7 | 9 | 6 | 2 | 8 | 1 | 4 | 5 |
| 5 | 8 | 6 | 1 | 4 | 9 | 3 | 2 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண் டும். இந்தப் பெட்டி 9 நிரல் களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக் கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என் றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக் கங்கள் இரட்டிப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2 பிறந்த எண்பலன் பற்றி தெரிந்து கொள்வோம்

**முதலாம் எண்ணில் பிறந்தவர்கள் பற்றி நேற்றைய உதயனில் வெளியான பிறந்த எண் பலன் குறித்த தொடர்ச்சி இது. இன்று 2 ஆம் எண்ணில் பிறந்தவர்கள் பற்றிப் பார்ப்போம்.**

**2,11, 20, 29 ஆகிய திகதிகளில் பிறந்தவர்கள் 2 ஆம் எண்ணின் ஆதிக்கத்துக்கு உரியவர்கள் ஆவர். இது ஒரு முக்கியத்துவம் கொண்ட எண்ணாகும். ஒரு மனிதனுக்கு கண் இரண்டு, காது இரண்டு, கை இரண்டு, கால் இரண்டு என இரண்டின் மகிமையும் முக்கியத்துவம் வாய்ந்துள்ளது. 2 ஆம் எண்ணுக்குரிய கிரகம் சந்திரன்.**

**குண அமைப்பு**

2 ஆம் எண்ணில் பிறந்தவர்கள் சந்திரனின் ஆதிக்கத்துக்கு உட்பட்டவர்கள் என்பதால் நீர் எப்படி நிலையில்லாமல் ஓடுகிறதோ அதுபோல சற்று சலன நெஞ்சம் கொண்டவர்களாவே காணப்படுவார்கள். சுறுசுறுப்பாகச் செயல்படுபவர்கள். அவசரக்காரர்கள் அல்ல. எந்தவொரு காரியத்தையும் தீர ஆலோசித்து செயல்படுவார்கள். இதனால் எவ்வளவு எதிர்ப்புக்கள் ஏற்பட்டாலும் துணிந்து நின்று போராடி வெற்றியைடைவார்கள். சுயநலம் இல்லாமல் எதையும் தியாகம் செய்யத் துணிவதால் வாழ்க்கையில் அவ்வப்போது ஏமாற்றங்களையும் சந்திக்க நேரிடும். இவர்களுக்கு அபார ஞாபகசக்தி உண்டு. எப்போதும் சற்று குழப்பவாதியாகவே இருப்பார்கள். இரக்க குணம் உடையவர்கள். ஆதலால் எளிதில் உணர்ச்சி வசப்படுவார்கள். எதையும் முன் கூட்டியே அறியும் நுண்ணறிவும், கற்பனை சக்தியும் அதிகம் உண்டு. வேடிக்கையாகப் பேசக் கூடியவர்கள். பல விடயங்களைத் தெரிந்து வைத் திருப்பார்கள். சாந்தம், சகிப்புத் தன்மை, மேலோரிடத்தில் மரியாதை, கடவுள் பக்தி அதிகம் இருக்கும். பழைய ஞாபகங்களை அடிக்கடி நினைவுக்குக் கொண்டு வந்து சிறு விடயங்களுக்காக அதிக கவலைப்படுவார்கள். தம்முடைய கருத்துக்களை நேரிடையாக வெளியிடாமல் மறைமுகமாக வெளியிடுவார்கள்.

அனைவரிடமும் சகஜமாகப் பழகக்கூடியவராக இருந்தாலும் சற்றுப் பயந்த சுபாவம் இவர்களுக்கு உண்டு. கடுமையான பணிகளையும் சுலபமாகச் செய்து முடிக்கும் திறன் கொண்டவர்கள். தமது முயற்சியில் தோல்வி அடைந்தாலும் கொள்கையை விட்டுக் கொடுக்காமல் விடா முயற்சியுடன் செயல்படுவார்கள். தூக்கத்திலும் சுய உணர்வு பெற்றவர்கள். கொடுத்த வாக்கைத் தவறாமல் நிறைவேற்றுவார்கள், சொன்ன சொல்லைக் காப்பாற்றத் தவறியவர்கள் இவர்களிடமிருந்து தப்பிக்க முடியாது. மிகுந்த கலாரசனை உடையவர்கள். ஆதலால் சங்கீதம், நடனம், நாடகத்துறை போன்றவற்றில் ஆர்வம் அதிகம் இருக்கும். எதிலும் தற்பாதுகாப்புடன் செயல்படும் இவர்கள் வீண் வம்புக்குச் செல்லமாட்டார்கள். பழைய பொருள்களைச் சேகரித்து வைப்பதில் அதிக ஆர்வம் உடையவர்கள். பேச்சைக்கூட அளந்துதான் பேசுவார்கள். பல சமயம் துணிச்சலான காரியங்களைச் செய்தாலும் சில சமயங்களில் கோழையாக மாறி விடுவார்கள். இது போன்ற பய உணர்ச் சிகளையும் மென்மையான சுபாவங்களையும் மாற்றிக் கொள்ள வலிமை வாய்ந்த நேர் எண்ணில் பெயர் வைப்பது அவசியம்.

**குடும்ப வாழ்க்கை**

இரண்டாம் எண்ணில் பிறந்தவர்கள் அதிக கற்பனைத் திறன் உள்ளவர்கள். குடும்பத்தின் மீது அதிக அக்கறை உள்ளவர்கள். குடும்பத்தைப் பொறுப்போடு நடத்திச் செல்வார்கள். சில நேரங்களில் குடும்பத்திலுள்ளவர்களிடம் கோபம் கொண்டு கடினமான வார்த்தைகளை பிரயோகித்து விடுவதால் நெருக்கமானவர்களிடம் விரோதத்தையும் சம்பாதித்து விடுவார்கள். சுக சௌகரியங்களைப் பெருக்கிக் கொள்ளவும், வாழ்க்கையை ஆடம்பரமாக வாழவும் நிறையச் செலவு செய்வார்கள். குடும்பத்தில் ஏற்படக்கூடிய அமைதிக் குறைவுக்கு முக்கிய காரணம் 2 ஆம் எண்ணில் பிறந்தவராகத்தான் இருக்க முடியும். தான் என்ற அகங்காரமும், பிடிவாத குணமும் இவர்களுக்கு அதிகம் இருப்பதால் எல்லா நேரமும் எல்லோரிடமும் இவர்களால் ஒத்துப்போக முடியாது. வீண் பிடிவாதத்தை விடுத்து அனைவரையும் அனுசரித்து நடந்தால் மட்டுமே குடும்ப வாழ்க்கை திருப்திகரமாக அமை யும்.

**உடல் அமைப்பு ஆரோக்கியம்**

இரண்டாம் எண்ணில் பிறந்தவர்கள் சந்திரனின் ஆதிக்கத்துக்கு உரியவர்கள் என்பதால் மற்றவர்களை வசீகரப்படுத்தக் கூடிய அழகான உடலமைப்பைப் பெற்றிருப்பார்கள். நடுத்தரமான உயரம், சிறிய கழுத்து, கூர்மையான மூக்கு, குவிந்த உதடுகள், அழகான கண்கள் மற்றும் புருவங்கள் அமையப் பெற்றவராக இருப்பார்கள். மெலிந்த குரலில் பேசுவார்கள். சந்திரன் நீர்காரகன் என்பதால் இவர்கள் குளிர்ந்த பானங்கள், ஐஸ்கிறீம் போன்றவற்றை விரும்பிச் சாப்பிடுவார்கள். இதனால் இவர்கள் அடிக்கடி சளி, சுரம், தலையில் நீர் கோர்த்துக் கொள்ளுதல், தொண்டைவலி, தலைவலி போன்றவற்றால் அவதிப்படுவார்கள். சாதாரணமாக இவர்களுக்கு சமிபாட்டு உறுப்புக்களும், சிறுநீரகமும் கோளாறு பண்ணிவிடும். 2 ஆம் எண்ணில் பிறந்தவர்கள் முடிந்தவரை மதுவைத் தொடவே கூடாது. மதுப் பழக்கத்துக்கு ஆளானால் இவர்களை மீட்கவே முடியாமல் போகும். உயிரைக் கூடக் குடித்து விடும். எனவே கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்வது நல்லது.

**பொருளாதாரம்**

இரண்டாம் எண்ணில் பிறந்தவர்கள் பணத்தை எந்த விதத்திலாவது சம்பாதிக்கக் கூடிய ஆற்றல் கொண்டவர்கள். வருமானம் குறைவாக இருந்தாலும் ஆடம்பரமாகச் செலவு செய்வதால் சேமிப்புக் குறைவாகவே இருக்கும். பிறருக்குக் கொடுக்க வேண்டிய கடன்களை இவர்கள் தவறாமல் கொடுத்தாலும், தமக்கு வர வேண்டியகடன் தொகைகளை வசூலிப்பதில் மிகுந்த சிரமம் உண்டாகும். பண விடயத்தால் நெருங்கிப் பழகுபவர்களிடம் அடிக்கடி மனஸ்தாபங்கள் உண்டாகும். எப்பொழுதும் கொடுக்கல் வாங்கலில் கவனத்துடன் செயல்படுவதே நல்லது.

**தொழில்**

இரண்டாம் எண்ணில் பிறந்தவர்கள் சந்திரனின் ஆதிக்கத்தில் உள்ளவர்கள் என்பதால் அதிக கற்பனைத் திறன் இருக்கும். இவர்கள் கதை, வசனம் பாடல்கள் போன்றவற்றை எழுதலாம். சந்திரன் நீர் என்பதால் பால் வியாபாரம், குளிர்பான விற்பனை, ஐஸ் தொழிற்சாலை, தூய நீர் தயாரித்தல் போன்றவை இவர்களுக்குப் பொருத்தமான தொழிலாக அமையும். நல்ல வருவாயும் உண்டாகும். அறிவிப்பாளர் தொழிலிலும் ஏற்றம் கிட்டும். வெளியூர், வெளிநாடுகளுக்கு கடல் கடந்து சென்று சம்பாதிக்கக்கூடிய யோகமும் அமையும். சிலருக்கு அரச உத்தியோகங்களும் கிடைக்கப்பெறும்.

**நண்பர்கள், பகைவர்கள்**

இரண்டாம் எண்ணில் பிறந்தவர்கள் சந்திரனின் ஆதிக்கம் கொண்டவர்கள் ஆதலால் எதிலும் குழப்பவாதியாகவே இருப்பார்கள். எவரிடமும் அவ்வளவு எளி தில் நெருங்கிப் பழக மாட்டார்கள். அப்படி நெருங்கிப் பழகிவிட்டால் அவ்வளவு எளிதில் பிரிய மாட்டார்கள். நண்பர்களுக் காக எதையும் செய்வார்கள். இவர்களுக்கு 1,5 இல் பிறந்தவர்கள் நண்பர்களாகவும், 4,7 போன்ற எண்களில் பிறந்தவர்களிடம் ஒத்துப் போக முடியாதவர்களாகவும் இருப்பார்கள். அதிக இரக்க மனம் கொண்டவர்கள். ஆதலால் நண்பர்களால் சில நேரங் களில் ஏமாற் றப்படுவார்கள்.

**சந்திரனுக்குரிய காலம்**

ஆங்கில வருட ரீதியாக ஜூன் மாதம் சந்திரனுக்கு உரியது. திங்கட்கிழமை சந்திரனுக்குரிய நாளாகும். சந்திரன் இரவில் பலம் உள்ளவன்.

**சந்திரனுக்குரிய திசை**

சந்திரனுக்குரிய திசை வடக்குத் திசையாகும். 2 ஆம் எண் உள்ளவர்கள் வடக்கு நோக்கிப் பயணம் செய்து எந்தப் பணிகளைத் தொடங்கினாலும் நல்ல இலாபத்தையும் வெற்றிகளையும் பெறுவார்கள்.

**அதிர்ஷ்டக் கல்**

சந்திரனின் எண்ணான 2 ஐ உடையவர்கள் அதிர்ஷ்டக் கல்லாக முத்தை வெள்ளியில் பதித்து மோதிரமாக தோலில் படும்படி அணிந்து கொள்ள வேண்டும். இதன் மூலம் உடல் நோய்கள் குறையும். மன அழுத்தங்கள், குழப்பங்கள் விலகி நல்ல தெளிவு கிடைக்கும்.

**பரிகாரங்கள்**

சந்திரனுக்கு உரிய நாள் திங்கட்கிழமையாக இருப்பதால், அந்நாள்களில் துர்க்கா பூஜை செய்தல் நல்லது. வெங்கடாசலபதியையும் வழிபாடு செய்வது மனச் சஞ்சலங்களைக் குறைக்கும்.

**அதிர்ஷ்டம் தருபவை**

அதிர்ஷ்டத் திகதி– 1,10,19,3, 12,21,30
அதிர்ஷ்ட நிறம் வெள்ளை, பொன் நிறம்
அதிர்ஷ்ட த் திசை –தென் கிழக்கு
அதிர்ஷ்டக் கிழமை –திங்கள், வியாழன்
அதிர்ஷ்டக் கல் முத்து, சந்திரகாந்தக்கல்
அதிர்ஷ்ட தெய்வம்,வெங்கடாசலபதி,துர்க்கை

# பெரிது பெரிது பெண்மையின் சக்தி!

**இணையவள்**

பெண் என்பவள் ஆதாரசக்தி, வாழ்வின் ஆதாரம். பெண் இல்லை எனில் சிருஷ்டியே இல்லை. அவளை முன்னிறுத்தியே சிருஷ்டி நடந்து வருகின்றது. பெண் தான் கர்ப்பம் தரிக்கின்றாள். குழந்தையைப் பெற்று எடுத்து வளர்க்கின்றாள்.

ஆண் சார்புடையவன். பெண்ணின் துணை இல்லாமல் ஓர் ஆணால் வாழ்க்கை நடத்த முடியாது. ஆனால் ஆணின் துணை இல்லாமல் பெண்ணால் வாழ முடியும். இன்னும் சொல்லப் போனால் திருமணமே செய்து கொள்ளாமல் பெண் தனித்து வாழ்வாள். ஆனால் ஆண் திருமணம் செய்து கொள்ளாவிட்டாலும்கூட எந்த விதத்திலாவது ஏதாவது ஓர் உறவின் மூலமாகப் பெண்ணை நாடவேண்டி உள்ளது என்பதே உண்மை. கணவனை இழந்த பெண்களோ, அல்லது சிறு வயதிலேயே கணவன் விட்டு விட்டுச் சென்ற பெண்களோ அஞ்சுவதில்லை. தமது பிள்ளைகளைத் தாங்களே எப்பாடு பட்டாவது தாங்கி வளர்க்கின்றார்கள். ஓர் ஆணால் தன்னந்தனியாக மனைவியோ, அல்லது வேறு ஒரு பெண்ணின் துணையோ இல்லாமல் தனது பிள்ளைகளை வளர்க்க முடியாது என்பதும் உண்மை. கணவனை இழந்த பெண்களை விடவும், மனைவியை இழந்த ஆண்களே மனதளவில் மிகவும் பாதிக்கப்படுவது. ஆய்வில் மட்டுமல்லாமல் கண் கூடாகவும் தெரியும் ஓர் உண்மை. பெண் தனது சக்தியை முழுமையாகக் காட்டினால் ஆண்களால் தாங்க முடியாது என்பதே உண்மை. ஆனால் பெருமளவும் பெண்களின் சக்தி சரியான முறையில் பிரயோகம் செய்யப்படுவதும் இல்லை. தவறான உள் நோக்கத்துடனேயே பிரயோகம் செய்யப் படுகின்றது. வியாபார நோக்கில் இன்றைய நாள்களில் பெரும் பாலும் தனது சக்தியைப் பெண் விரயம் ஆக்குகின்றாள். ஒரு போகப் பொருளாகத் தன்னைத் தானே ஆக்கிக் கொண்டு விட்டாள். தன்னிடம் உள்ள ஆத்ம சக்தியைப் பெரும்பாலான பெண்கள் உணரவே இல்லை. ஆத்ம சக்தியை உணர்ந்த பெண்கள் தொழுவதற்கு உரியவர்களாக ஆகிறார் கள்.

(தொடரும்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரடி மாமா

கரடி மாமா வருகிறார்
கண்ணா இங்கே ஓடி வா
கரடி வித்தை பார்க்கவே
காசு பத்துக் கொடுக்கலாம்
குட்டிக் கரணம் போடுகிறார்
குதித்துக் குதித்து நடக்கிறார்
கோலைத் தோளில் வைக்கிறார்
குனிந்து நிமிர்ந்து பார்க்கிறார்





## பேராசை பெரு நட்டம்

முட்டாள் நாய் ஒன்று ஓர் இறைச்சிக் கடையில் இருந்த எலும்புத்துண்டொன்றைத் திருடியது. அதனை வாயில் கவ்விக்கொண்டு தனது இருப்பிடத்துக்குப் புறப்பட்டது. செல்லும் வழியில் சில நாய்க்குட்டிகள் அந்த முட்டாள் நாயிடம்,எலும்புத் துண்டைத் தருமாறு கேட்டன. ஆனால் அந்த முட்டாள் நாயோ இதை நான் எவருக்கும் தர மாட்டேன். இதை முழுவதுமாக நான் மட்டுமே சாப்பிடப் போகிறேன் என்று கூறி விட்டுச் சென்றது.



செல்லும் வழியில் ஒரு பாலத்தைக் கடக்க வேண்டியிருந்தது. நாய் பாலத்தைக் கடக்கும் போது கீழே தண்ணீரைப் பார்த்தது. அந்தத் தண்ணீரில் அதன் உருவம் தெரிந்தது. தண்ணீரில் தெரிந்த அதன் உருவத்தின் வாயில் எலும்புத் துண்டு இருந்தது.

அதைக்கண்டநாய் இந்தநாயிடமும்ஒருஎலும்புத்துண்டு உள்ளது. இதையும் அபகரித்துவிட வேண்டும் என்று நினைத்தது. உடனே அது பலமாக லொள், லொள் எனக் குரைத்துக் கொண்டே தண்ணீரில் தெரிந்த நாயின் மீது பாய்ந்தது.

அதனால் அதன் வாயில் இருந்த எலும்புத் துண்டும் தண்ணீரில் விழுந்தது. தண்ணீரில் விழுந்தவுடன் தான் அந்த முட்டாள் நாய்க்குப் புரிந்தது இது நிழல் விம்பம் என்று. அதனைத் தேடிச் சென்ற நாய் தண்ணீரில் தத்தளித்தது. மிகவும் துன்பத்துடன் உயிரைக் காப்பாற்றிக் கொண்டால்போதும் எனக்கரையேற வேண்டியதாயிற்று.

## தெரிந்து கொள்வோம்

- குருதி உறைவதற்கு உதவும் விற்றமின் எது? விற்றமின்– கே
- பூமியே ஒரு பெரிய காந்தம் என்று கண்டறிந்தவர் யார்? – வில்லியம் கில்பர்ட்
- புலிக்குகை என அழைக்கப்படும் கலையரங்கம் எங்குள்ளது? – மகாபலிபுரம்
- அஜந்தாவில் எத்தனை குகைகள் உள்ளன? – இருபத்தொன்பது
- மோனலிசா ஓவியம் வரைய மொத்தம் எத்தனை ஆண்டுகள் பிடித்தன? – 3 ஆண்டுகள்
- எந்த நாட்டில் பெயின்ட் கண்டு பிடிக்கப்பட்டது? – இங்கிலாந்து
- மண்ணை வளப்படுத்தும் ஒரே தாவரம் எது? – உளுந்து
- உலோகங்களில் லேசானது எது? – லிதியம்
- எந்தக் காலத்தில் குயில் கூவுவது இல்லை? – குளிர் காலத்தில்
- உயர்ந்த ஒலியைக் கவரும் பொருள் எது? – இழைக்கண்ணாடி
- சவர்க்காரம் தயாரிக்கத் தேவைப்படும் பொருள்கள் யாவை? – கொழுப்புப் பொருள், சோடாக் காரம் அல்லது பொட்டாசியம் காரம்

# பொறுமை கடலினும் பெரிது

பொறுமையுடைய ஒருவன் எதைச் சாதிக்க வேண்டுமென நினைக்கி றானோ அவன் அதைச் சாதிப்பான் என்றார் பெஞ்சமின் ப்ராங்கிளின்.

ஒரு விதையை விதைக்கிறோம். அது மண்ணுக்குள் தன்னை மறைத்துக் கொள்கிறது. அதற்கு நீரூற்றுகிறோம். காத்திருக்கிறோம். அது மெல்ல முளைக்கிறது. இலை விடுகிறது. தண்டு பெரிதாகிறது. கிளைகள் உருவாகின்றன. பூக்கள் உருவாகின்றன. கடைசியில் கனி தருகிறது !

இந்தப் பயணம் நீளமானது. ஒரு விதை விதைக்கப்படுவதற்கும், அது மீண்டும் கனிக்குள் விதையாய் எமது கையில் தவழ்வதற்கும் இடைப்பட்ட காலம் பெரியது ! பொறுமையுடன் காத்திருக்க வேண்டியது மிகவும் அவசியம். பொறுமை கசப் பானது. ஆனால் அது தருகின்ற கனியோ மிக இனிப்பானது என்பார் தத்துவ மேதை அரிஸ்டோட்டில்.

ஓர் இலக்கை நோக்கிப் பயணிக்கும் போது வெற்றி உடனடியாகச் சாத்தியம் ஆவதில்லை. வேர் பிடிக்காமல் முளைக்கின்ற செடிகள் நிலைப்பதும் இல்லை. நதிகள் நடந்து கொண்டே இருக்கும். அதன் பாதையில் வசந்தங்களையும், துயரங்களையும் சந்திக்கும். அருவிகளில் விழும், தடைகளில் எழும், மௌனமாய் அழும். ஆனாலும் அதன் இலட் சியம் கடைசியில் நிறைவேறும். அது வரை அதன் பயணம் பொறுமையாய் நடந்து கொண்டே இருக்கும். இந்தப் பொறுமைக்கு முதல் தேவை நம்பிக்கை. விடியும் எனும் நம்பிக்கையே இரவில் நம்மை நிம்மதியாகத் தூங்க வைக்கிறது. முடியும் எனும் நம்பிக்கையே பயணங்களுக்கு நம்மைத் தூண்டுகிறது. எமது பொறுமை நம்பிக்கை இழக்கும் போது பொன் முட்டையிடும் வாத்தை வெட்டிக் கொன்ற முட்டாள் போன்று செயற்படத் தொடங்குவோம்.




பொறுமை தனது பயணத்தை நிறுத்தும்போது தோல்வி நம்மை நோக்கி நடைபோடத் தொடங்கும். பொறுமையின் உதாரணமாக சீனாவின் மூங்கில் செடியைச் சொல்வார்கள். சீன மூங்கிலைப் பயிரிட்டு தண்ணீர் ஊற்றுவார்கள். பருவங்கள் போகும். ஆனால் செடி வளரவே வளராது. ஒரு அங்குல அளவு கூட வளராமல் அடம்பிடித்து அப்படியே இருக்கும். முழுதாக நான்கு வருடங்கள் செடி அப்படியே இருக்கும். செடிக்குத் தண்ணீர் ஊற்றுபவர் பொறுமையுடன் அதைப் பராமரிக்க வேண்டும். நான்கு ஆண்டுகளாய் அவருக்கு சிலாகிக்கவோ, மகிழ்ச்சி கொண்டாடவோ எதுவுமே இருப்பதில்லை. ஆனால் அதற்கு அடுத்த பருவத்தில் எல்லோரும் வியக்கும் வண்ணம் அந்த மூங்கில் வளரத் தொடங்கும். அதுவும் எப்படி ? சட சடவெனும் அசுர வளர்ச்சி. ஒரே ஆண்டில் அது எட்டிப் பிடிக்கும் உயரம் எவ்வளவு தெரியுமா? 80 அடிகள். நான்கு ஆண்டுகாலமாக அமைதியாக இருந்த செடி, எப்படி ஐந்தாவது ஆண்டில் மட்டும் விஸ்வரூப வளர்ச்சியை எட்டுகிறது ? ஆராய்ந்து பார்த்தால் ஆச்சரியம் தரும் ஒரு இரகசியம் [illegible] லாம். இயற்கையின் அற்புதம் என்றோ கடவுள் படைப்பின் மகத்துவம் என்றோ நீங்கள் பெயரிட்டுக் கொள்ளுங்கள். முதல் நான்கு ஆண்டுகள் அந்த மூங்கில் வேர்களை பூமியில் நன்றாக இறக்கி மிகச் சிறந்த பிடிமானத்தை உருவாக்கிக் கொள்கிறது. ஐந்தாவது ஆண்டில் நான் எண்பது அடி உயரமாக வளரப் போகிறேன், என்னைத் தாங்கிப் பிடிக்கும் வல்லமை எனது வேர்களுக்குத் தேவை என அது முழுமூச் சாய்த் தன்னைத் தயாரிக்கும். அதனால் தான் ஐந்தாவது ஆண்டில் அசுர வளர்ச்சி அடையும்போது அது தடுமாறுவதும் இல்லை, தடம் புரள்வதும் இல்லை ! பொறுமை உயரமான வெற்றிகளைஉருவாக்குகிறது. அவசரப்பட்டு முளைத்து,



சடசட வென வீழ்ந்து விடாமல், எமது அடித்தளத்தை வலுவாக்கிக் கொள்ள பொறுமை எம்மைத் தூண்டுகிறது. தண்ணீரின் ஆழம் தெரியாமல் குதிப்பதோ, மலையின் ஆழம் தெரியாமல் ஏறச் செல்வதோ ஆபத்தில் முடியும் ! பாதியிலேயே பொறுமையைக் கழற்றி விட்டு விடுபவர்கள் வெற்றியின் பதக்கங்களை அணிந்து கொள்வதில்லை. அவசரம் நமக்கு சிப்பிகளைத் தரலாம், ஆனால் பொறுமையால் மட்டுமே முத்துகளைத் தர முடியும். நேரமும் பொறுமையுமே போராளி களின் பலம் எனும் லியோ டால்ஸ்டாயின் தத்துவ முத்து பொய் சொல்வதில்லை! ஒருவனுடைய திறமைகளை வெற்றிகளாக உருமாற்றித் தருவது பொறுமையே! பொறுமை அனுபவத்தின் வெளிப்பாடு! அதுவே வாழ் வின் அலைகளை எதிர் கொள்ளும் துடுப் பாய்ப் பயன் தரும் !

பொறுமையான முயற்சியே வெற்றியின் அடிநாதம் என்பதை எல்லாச் சாதனையாளர்களும் ஒத்துக் கொள்வார்கள். எவருக்கும் வெற்றி என்பது கிறிஸ்மஸ் தாத்தாவின் பரிசுப் பொருள் போல வந்து சேர்வதில்லை. வெற்றிக்கு 99 சதவீதம் பொறுமையான உழைப்பும், ஒரு சதவீதம் உந்துதலும் இருக்க வேண்டும் என்கிறார் ஐன்ஸ்டீன் ! வெற்றியையும், வெற்றியைக் கொண்டாடும் மனநிலையையும், ஆழமான குடும்ப உறவையும் தருகின்ற பொறுமை கடலினும் பெரிது தான் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்முறையை இனி ஆரம்பிக்க முடியாது

## அகிம்சை தின நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன்

யாழ்ப்பாணம், ஒக். 3
எமது இனம் ஏன் வன்முறையைக் கையாண்டது என்பது மிக முக்கிய கேள்வி. எமது இனவிடுதலைக்கான போராட்டமாக ஆரம்பித்தன் காரணமாக எமது இனத்துக்குப் பெரும் அழிவு ஏற்பட்டது. அதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. நியாயப்படுத்தக்கூடிய காரணங்கள் கூட இருக்கின்றன. ஆனால் நாம் ஏன் வன்முறையைப் பின்பற்றினோம் என்பது பெரிய கேள்வி. இனி அவ்வாறான வன்முறையை ஆரம்பிக்க முடியாது என்று எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

சர்வதேச அகிம்சை தினம் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ். இந்துக் கல்லூரியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,
1961 ஆம் ஆண்டு பெரிய சத்தியாக்கிரகப் போராட்டத்தை வடக்கு-கிழக்கில் முன்னெடுத்தோம். அது அரச அதிபரின் வாசலுக்குப் போனது. நாம் வீதியில் மறியல் செய்து போராட்டத்தில் ஈடுபட்டு அரச அதிபரோ ஊழியர்களோ அலுவலகத் துக்குச் செல்லாது தடுத்தோம். அது வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வந்தது. அந்த நேரத்தில் சில வாரங் களுக்குப் பின்னர் அரசு அவசர காலச் சட்டத்தில். ஊரடங்கைப் பிரகடனம் செய்யப்போவதாக ஒருசெய்திகிடைத்தது. அப்பொழுது நாம் ஒன்றுகூடித் தந்தை செல்வாவின் தலைமையில் கலந்துரையாடினோம். ஊரடங்கு பிறப்பித்தாலும் நாம் தொடர்ந்து போராடவேண்டும் என்று அமிர்தலிங்கம் உட்பட பலர் கூறினார்கள். ஆனால் அவ்விதமாக நாம் போராடினால் அது எமது மக்களுக்குச் சாதகமாக இருக்காது. எனவே எமது போராட்டத்தை நிறுத்திப் பின்னர் தொடர்வதே சரி என்றுகூறினார். தந்தை செல்வாவும் வன்முறையை விரும்பவில்லை.

அவர் இறந்த பின்னர் 1987 ஆம் ஆண்டு நாடாளுமன்றம் தெரிவு செய்யப்பட்டபோது நாடாளுமன்றில் அனுதாபப் பிரேரணை முன்மொழியப்பட்டது. அப்போதைய பிரதமர் அந்தப் பிரேரணையைக் கொண்டு வந்து அவர் கூறிய முக்கிய விடயம், தந்தை செல்வாவுடன் நாம் நெருங்கிப் பழகியுள்ளோம். அவரிடமிருந்து எதையும் எழுத்தில் வாங்கத் தேவையில்லை. அவர் வாக்குறுதி தருவாராக இருந்தால் அதனை எழுத்தில் வாங்குவதற்குச் சமம். அவர் ஒருபோதும் அதிலிருந்து விலகமாட்டார் என்று கூறினார். அது தந்தை செல்வாவின் சத்தியம், உண்மை, ஒழுக்கம், பண்பு என்று கூறலாம்.

1972 ஆம் ஆண்டு புதிய அரசியல் சாசனம் நிறைவேற்றப்பட்டது. அதன் மூலமாகத் தமிழ் மக்களுக்குப் பலவித அநீதிகள் இழைக்கப்பட்டன. 1986 ஆம் ஆண்டு எமது இறைமையை நாங்கள் பெறவேண்டும், பெறுவதற்கு எமக்கு உரித்துண்டு. அந்த நேரத்தில் அதனைச் செய்தோம். அதனால் வன்முறை எமது சமூகத்தில் ஏற்பட்டது. அதுதற்போது முடிவுக்கு வந்துள்ளது. இனி நாம் வன்முறையை எப்பொழுதும் ஆரம்பிக்க முடியாது. உண்மையை நாங்கள் முழுமையாகப் பின்பற்ற வேண்டும். எங்களுக்காகவும் மற்றவர்களுக்காகவும் நாம் உண்மையைப் பின்பற்ற வேண்டும். உண்மைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சத்தியத்தை நாங்கள் கைவிடக்கூடாது.

சர்வதேச சமூகத்தின் ஆதரவு எங்களுக்குக் கணிசமான அளவு இருந்து தமிழர்களுடைய பிரச்சினையை அறியக் கூடியதாக இருந்தது என்றால் அதற்கு முக்கியமான காரணம் வன்முறை முடிவுக்கு வந்திருப்பது. சத்தியமாக இருப்பதன் அடிப்படையில் தமிழ் சமுதாயம் இன்றைக்குச் செயற்படுவதற்குத் தயாராக இருக்கின்றது. அவற்றை ஊக்குவிக்க வேண்டும். அதைப் பலப்படுத்த வேண்டும். அதன் மூலமாகத் தமிழர்களது பிரச்சினைக்கு நியாயமான தீர்வு ஏற்பட வேண்டும். என்ற கருத்தை சர்வதேச சமூகம் கூடிய அளவில் ஏற்றுக்கொண்டு வருகிறதால்தான் தற்போதைய நிலைமை உருவாகியிருக்கின்றது. அதனை நாங்கள் புரிந்துகொள்ளவேண்டும். இந்தியா எமது அயல்நாடு. இன்று சர்வதேசத்தில் ஒரு பெரிய சக்தி. பாரதப் பிரதமர் இறுதியாக இலங்கை வந்தபோது, நாம் அவரைச் சந்தித்த போது நீங்கள் என்னை நம்புகிறீர்களா என்று கேட் டார். நாம் ஓம் என்றோம். எமது பிரச்சினை நீண்ட காலமாகத் தீர்க் கப் படவில்லை. அது தீர்க்கப்பட வேண்டும். விரைவில் தீர்க்கப்பட வேண் டும் என்றும் அதனை நம்பு கி றோம் என்றும் கூறினோம். தனது சேவை எப்பொழுதும் தரப்படும் என்று கூறினார். இதனை ஏன் கூறு கிறேன் என்றால் இந்தியாவின் முக்கியத்துவத்தையும் நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்–என்றார். (த–4)

# கஹவத்தையில் பெண் கொலை; பல கோணங்களில் விசாரணை

## 20 பொலிஸ் குழுக்கள் தேடுதல் வேட்டையில் விசேட அதிரடிப் படையினரும் களத்தில்

கொழும்பு, ஒக் 03
கஹவத்த, கொட்டகத்தென்ன பகுதியில் பெண்ணொருவர் மர்மமான முறையில்படுகொலை செய்யப்பட்டுள்ள சம்பவம் தொடர்பில் சி.ஐ.டி.யினர் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். குறித்த பகுதியிலுள்ள பல பேரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், விசாரணைகளின்நிமிர்த்தம் 20 பொலிஸ் குழுக்களும் களத்தில் இறங்கியுள்ளன.

சி.ஐ.டியின்பொலிஸ்குழுக்களுக்கு மேலதிகமாக இரத்தினபுரி மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களின் புலனாய்வுப் பொலிஸாரும் இந்த வழக்கின் புலனாய்வுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

படுகொலைச்சம்பவம் இடம்பெற்ற பகுதியை விசேட அதிரடிப்படையினர்தமது நேரடிக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதுடன் குறித்த பகுதி முழுவதும் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

கொட்டகத்தென்ன, ஓப்பாவத்த பகுதியிலுள்ள 48 வயதுடைய நாகன் பாப்பு என்றபெண் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கடந்த திங்களன்று படுகொலைசெய்யப்பட்டிருந்தார். இவருக்குமூன்று பிள்ளைகள் இருக்கின்றனர்.

கஹவத்த கொட்டகத்தென்ன பகுதியில் இதற்குமுன்னரும் இவ்வாறான கொலைகள் இடம்பெற்றன. சுமார் 16 பேர்வரை இவ்வாறு கொல்லப்பட்டிருந்தனர். குறிப் பாகப் பெண்களை இலக்கு வைத்தே படுகொலைகள் அரங்கேற்றப்பட்டன.

இதனால், கொட்டகத்தென்ன பகுதியில் பெரும் பதற்றமும் அச்சமும் நிலவியது. தொடர் மர்மக் கொலைகளால் மக்கள் தனியாக வீதிகளில் நடமாடுவதற்கு அஞ்சினர். இரவு நேரங்களில் வீடுகளுக்குள்ளேயே முடங்கிவிடுவர். ஆறு மணிக்குப் பிறகுஆள்நடமாட்டத்தைப் பெரிதாக காணமுடியாது.

இதையடுத்து குறித்த பகுதிக்குக விசேடஅதிரடிப்படையின்பாதுகாப்பு வழங்கப்பட்டது. இரவுநேரங்களில் பொலிஸார் ரோந்து நடவடிக்கையிலும்ஈடுபட்டனர். விழிப்புக்குழுக்களும் அமைக்கப்பட்டன.

அதன்பின்னர் கொலைச்சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் சிலர் கைது செய்யப்பட்டனர். அவர்களுள் சிலருக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளது.

கொட்டகத்தென்ன பகுதியில் கடந்த எட்டு மாதங்களாக எவ்வித அசம்பாவிதங்களும் இடம்பெறவில்லை.

மக்கள் மத்தியில் அச்சம் நீங்கி இயல்பு வாழ்க்கை திரும்பிக் கொண்டிருந் தது. இந்நிலையிலேயே கடந்த திங்களன்று பெண்ணொருவர் கொலை செய்யப் பட்டுள்ளாதால் மீண்டும் அப் பகுதியில் அச் சமும் பீதியும் ஏற்பட்டுள்ளது. (த)

# பஸ்ஸில் ஏறுவதற்கு ஓடிய மூதாட்டி ஊன்றுகோல் தடுக்கி விழுந்து சாவு

சாவகச்சேரி ஒக் 3
பஸ்ஸில் ஏறுவதற்காக வீதியைக் கடந்த மூதாட்டி கையில் கொண்டு சென்ற ஊன்றுகோல் தடுக்கி பஸ்ஸின் பின் பகுதியில் வீழ்ந்து சாவடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் ஆலயத்துக்கு முன்பாகக் கொடிகாமம் – பருத்தித்துறை வீதியில் இடம்பெற்றது.

ஆலய தரிசனத்துக்காக வருகைதந்திருந்த கொடிகாமம் தவசிகுளத்தைச் சேர்ந்த செல்லன் தங்கம்மா ( வயது–86 ) என்னும் மூதாட்டி கொடிகாமத்துக்குச் செல்வதற்கான பஸ் நின்றதால் அதில் பயணிப்பதற்காக ஒரு கையில் செருப்புகள் மற்றும் பையுடனும் மறுகையில் ஊன்றுகோலுடனும் வீதியைக் கடந்துள்ளார். பஸ்ஸின் பின் பகுதிக்குச் சென்ற வேளையில் பஸ் புறப்பட்டதால் அவசரமாக நடந்துள்ளார். இதனால் கையில் வைத்திருந்த ஊன்றுகோல் தடுக்கி முகம் குப்புற வீழ்ந்ததால் அந்த இடத்திலேயே சாவடைந்துள்ளார் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது

சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து அங்கு விரைந்த பொலிஸார் மூதாட்டியின் சடலத்தை மீட்டுச் சாவகச்சேரி வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

மூதாட்டியின் சாவு தொடர்பாகச் சாவகச்சேரி நீதிமன்றப் பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை முன்னிலையில் மாலை 5.00 மணிக்குக் கொடிகாமம் பொலிஸார் அறிக்கை தாக்கல் செய்தனர். சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி மூலம் உடற்கூற்றுப் பரிசோதனை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டதுடன் பஸ்ஸின் சாரதியை எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

பருத்தித்துறை பஸ் நிலையத்திலிருந்து கொழும்புக்குச் சென்ற பஸ்ஸின் சாரதியே விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார். (த–9)


**காணி விற்பனைக்கு**
ஆஸ்பத்திரி வீதி, சத்திர சந்திக்கு அண்மித்த 4 பரப்பும், 4 குழியும் கொண்ட காணி விற்பனைக்கு உண்டு.
T.P: 077 3177 566 (65113) (10.17)

**விற்பனைக்கு**
ஊர்க் கோழிக்குஞ்சுகள், ஊர்ச்சேவல்கள் விற்பனைக்குண்டு.
தொடர்பு : 0779994655 திருநெல்வேலி.

**தவறிவிட்டது**
சின்னராஜா ராஜ்குமார் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (773014523V), ரைக்ஸ், இன்சூரன்ஸ், ATM காட் ஆகியவற்றைக் கொண்ட பேர்ஸ் யாழ்.மாநகரசபையை அண்டிய பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்.
தொடர்பு - 0779172692

ALL OUT
Pest control service
கறையான் தொல்லையா?
உங்கள் கட்டடங்களை உத்தரவாதத்துடன் பாதுகாத்து கொடுக்க நாங்கள் இருக்கின்றோம்

தொடர்புகளுக்கு:
ந. ரூபகாந்த்
077 151 5897, 021 499 3200









ROLEX HOTEL
சகல வகையான புரியாணி வகைகள், சாப்பாட்டு வகைகள், கொத்து, பிறைட்றைஸ், சிற்றுண்டி வகைகள் போன்ற உணவு வகைகளுக்கு நாடவேண்டிய ஒரே இடம்

ஹொலக்ஸ் ஹொட்டல்
340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 2808





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச அகிம்சை தினம் நேற்று யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், ஒக். 3
காந்தி பிறந்த தினத்தையொட்டி ஐ.நாவினால் பிரகடனம்செய்யப்பட்டஅகிம்சைதினம்யாழ்ப்பாணத்தில் நேற்றுக் கொண்டாடப்பட்டது. யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத்தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ்.இந்துக் கல்லூரியில் நேற்றுப் பிற்பகல் இந்த நிகழ்வு கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின்தலைவரும்எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் கலந்து கொண்டார். இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன்,நாடாளுமன்றஉறுப்பினர்களானஈ.சரவணபவன், டக்ளஸ் தேவானந்தா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், அரச அதிகாரிகள், பேராசிரியர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

கல்லூரி வாசலிலிருந்து மேள வாத்தியங்கள் சகிதம் விருந்தினர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து இருநாட்டினதும்தேசிய கீதங்கள் இசையாக ஒலிபரப்பப்பட்டன. தொடர்ந்து யாழிலுள்ள இந்தியத் தூதரக அதிகாரிநடராஜன்வரவேற்புரை நிகழ்த்தினார்.

தொடர்ந்து கலைநிகழ்வுகளும், விருந்தினர்கள் உரைகளும் இடம் பெற்றன. கவிஞர் சோ. பத்மநாதன், பேராசிரியர் சண்முகலிங்கன், ஆறு.திருமுருகன் மற்றும் பேராதனைப் பல்கலை மாணவி தயாளினி ஆகியோர் உரையாற்றினர். கைதடி நவீல்ட் பாடசாலை மாணவிகளினதும், சிவபூமி மாணவர்களினதும், சைவச் சிறுவர் இல்ல மாணவர்களினதும் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. அவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன. (த-4)



## எச்.ஐ.வி. தொற்று: ஒன்பது மாதத்தில் 160 பேர் பாதிப்பு

கொழும்பு, ஒக் 03
இவ்வருட ஜனவரி மாதத்தில் இருந்து ஒக்ரோபர் மாதம் வரையானகாலப்பகுதியில்இலங்கையில் சுமார் 160 பேர் எச்.ஐ.வி. தொற்று பாதிப்புக்கு உள்ளாகியிருப்பதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

25 தொடக்கம் 45 வயதுக்கு உட்பட்டவர்களே அதிகளவில் எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளாவதாக பால்வினை நோய்கள் ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர்டாக்டர்.சிசிரலியனகே தெரிவித்துள்ளார்.

சுற்றுலாத்துறை, போதைப்பொருள் பாவனை, ஓரினச்சேர்க்கை மற்றும் குடிவரவு ஆகியவையே எச்.ஐ.வி. தொற்று அதிகரிப்பதற்கு காரணிகளாக அமைந்துள்ளன என சுகாதார அமைச்சு மேலும் அறிவித்துள்ளது.

கடந்த 2014ஆம் ஆண்டு, 228 பேர், எச்.ஐ.வி. தொற்றுநோய் பாதிப்புக்கு உள்ளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஒக்.3
நீர்வேலி சிவசக்தி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நாளை நடைபெறவுள்ளது. முன்பள்ளி விளையாட்டு மைதானத்தில் பி.ப.1.30 மணிக்கு சிவசக்தி சனசமூக நிலையத் தலைவர் ஐ.சிவராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் இ.குணநாதன் கலந்து கொள்ளவுள்ளார். அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சிவசக்தி முன்பள்ளி நிர்வாகத்தினர் தெரிவித் துள்ளனர். (த-ரி-5)

## மரண அறிவித்தல்கள்

### சடையாண்டி இராமையா



கண்டியைப் பிறப்பிடமாகவும், கன்னாபுரம் வில்லூண்டி பிள்ளையார் கோயிலடி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சடையாண்டி இராமையா நேற்று (02.10.2015) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.10.2015) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப 11.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

0779061288

தகவல் :
மகன் இ.செல்வராஜா.

### திருமதி பரிமளம் கனகசபை



இணுவில் மேற்கு வட்டுவினியைப் பிறப்பிடமாகவும், மட்டுவிலை வசிப்பிடமாகவும் நாவற் குழியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரி மளம் கனகசபை நேற்று (02.10.2015) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம்-ஆச்சியம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராமுப்பிள்ளை-சிவகாமன் தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற கனகசபையின் மனைவியும், காலஞ் சென்ற பத்மாதேவி (தேவி), பத்ம நாதன்,ஸ்ரீமதிலட்சுமி, பத்மநிதி, தனவதி (சோதி) ஆகியோரின் அன்புத் தாயும், செல்லத்துரை, நாகபூஷணி, சிவானந்தன் (சுப்பிர மணியம் மில்), இராசசேகரம், மதுகரன் ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ் சென்ற சின்னத்தம்பி, விசாலாட்சி, சிவஞானம், நாகையா, இராசநாயகி, காலஞ் சென்ற சொர்ணலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர் களான அன்னம்மா, நல்லம்மா, பொன்னம்பலம், சகுந்தலாதேவி ஆகியோரின் பாச மிகு மைத்துனியும், சண்முகேஸ்வரன் (சுகந்தன்), விமலேஸ்வரன் (விமலன்), தயந்தினி, சுயந்தன், பத்மதா, ஐங்கரன், ஆரணி (காகில்ஸ் பூட் சிற்றி, யாழ்ப் பாணம்), சிவாங்கினி, தயாளன் (உயர்தரம் 2015 யாழ். மத்திய கல்லூரி), சிவகரன் (2017 கணிதப்பிரிவு யாழ். இந்துக் கல்லூரி), சுபாங்கி, சினித், சுபாங்கன் ஆகி யோரின் பாசமிகு பேர்த்தியும், கிஷோன், மதூஸ் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

கேரதீவு வீதி,
நாவற்குழி, கைதடி,
தொடர்புகளுக்கு:
021 2050968, 0750394971

தகவல்:
சு.சிவானந்தன் (மருமகன்)
(ஆனந்தன்) (சுப்பிரமணியம் மில்)

(C/19161)(10.17)

### நடுவிலான் சின்னத்தம்பி



கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும், நாவற்குழி சந்தி அருணா பேக்கறி வீதியை (லேடன் கொம்பனி அருகில்) வசிப்பிடமாகவும் கொண்ட நடுவிலான் சின்னத்தம்பி நேற்று (02.10.2015) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடுவிலான் - ஆனந்தி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னப்பொடியன் - பொன்னி தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை (முன்னாள் சாரதி - C.T.B ), செல்லத்துரை மற்றும் சறோஜினி, பொன்னுத்துரை (லண்டன்), செல்வம், நந்தாவதி, இராசதுரை, புவனேஸ்வரி, நாகேஸ்வரி, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.10.2015) சனிக்கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கைதடி, ஊரியான் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாவற்குழி சந்தி, அருணா பேக்கறி வீதி
(லேடன் கொம்பனி அருகில்.)

தகவல் :
குடும்பத்தினர்.

## உள்நாட்டுப் பொறிமுறையில் வெளிநாடுகளின் அனுபவங்கள்

### பெறுமாறு கல்விமான்கள் கோரிக்கை

கொழும்பு, ஓக்.3
தென்னாபிரிக்கா மற்றும் கம்போடியா போன்ற நாடுகளின் அனுபவங்களை இலங்கையின் விசாரணைப் பொறிமுறைக்குப் பயன்படுத்துமாறு இலங்கையின் கல்விமான்கள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள் ளனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் உட்பட முக்கிய தலைவர்கள் சிலருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதமொன்றிலேயே அவர்கள் இந்தக் கோரிக்கையை முன் வைத்துள்ளனர்.

இலங்கை நீதித்துறையின் சுதந்திரம் சமீப காலத்தில் பாதிக்கப்பட்டுள் ளதால், முழுமையான உள்நாட்டுப் பொறிமுறை மூலம் நீதியை நிலைநாட்ட முடியாது. பாதிக்கப்பட்டவர்களின் நம்பிக்கையைப் பெற முடியாது என நாங்கள் கருதுகின்றோம். மேலும் வெறுமனே சர்வதேசப்பிரதிநிதிகளின்பிரசன்னம்மாத்திரம் போதுமானதல்ல எனவும் நாங்கள் கருதுகின்றோம்.

விசாரணைப் பொறிமுறைகளுடன் தொடர்புபட்டவர்களைத் தென்னாபிரிக்கா, கம்போடியா போன்ற நாடுகளின் அனுபவங்களை அறிந்து கொள்ளுமாறும்,அதனை இலங்கையில் ஏற்படுத்தப்படவுள்ளகட்டமைப்புகள் மற்றும் செயற்பாடுகளில் பயன்படுத்துமாறும் நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம் என இலங்கையின் கல்விமான்கள் அந்தக் கடிதத்தில் தெரிவித்துள்ளனர். (த-வ)

## தீர்மானத்தில் கலப்பு நீதிமன்றம் இல்லையென நிருபிக்கமுடியுமா?

### விமல் வீரவன்ஸ கேள்வி

கொழும்பு, ஒக் .3
அமெரிக்கத் தீர்மானத்தில் கலப்பு நீதிமன்றம் என்ற பதம் நீக்கப்பட்டுள்ளதே தவிர, செயற்பாட்டு ரீதியில் கலப்பு நீதிமன்றமே நடைமுறைப் படுத்தப்படவுள்ளது எனத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச , விசாரணைப் பொறி முறையில் கலப்பு நீதிமன்றம் இல்லை என்பதை அரசு நிரூபிக்க வேண்டும் என்றும் சவால் விடுத்தார்.

கட்சித் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே விமல் வீரவன்ச இந்தச் சவாலை விடுத்தார்.

அங்கு மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

அமெரிக்காவால் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்டு இலங்கை அரசால் இணை அனுசரணை வழங்கப்பட்ட பிரேரணை, புதிதாக திருத்தங்களின்றி ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப் பட்டுள்ளது.

உள்ளகப் பொறிமுறை தொடர்பான தீர்மானமே நிறைவேற்றப்பட்டுள்ளதாக சிலர் குறிப்பிடுகின்றனர். இது எப்படி உள்ளகப் பொறிமுறையாகும்? நிறுவப்படவுள்ள விசேட நீதிமன் [illegible] சட்டத் தரணிகள், விசாரணையாளர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர். ஆனால், உபதேசம் வழங்கு வதற்கு மட்டுமே மேற்படித் தரப்பினர் உள்வாங்கப் படுவர் என்றும், நீதிமன்றக் கட்டமைப்புக்குள் உள்வாங்கப்பட மாட்டார்கள் என்றும் அரசு கூறுகின்றது.

இலங்கையில் இடம் பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் கலப்பு நீதிமன்ற விசாரணைப் பொறிமுறையூடாக விசாரிக்கப் படவேண்டும் என ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அல் ஹூசைன் குறிப்பிட்டுள்ளார். இந்தத் தீர்மானத்தில் கலப்பு நீதிமன்றம் என்ற பதம் இல்லாமல் செய்யப்பட்டுள்ளபோதும், அது செயற்பாட்டுரீதியாக உள்வாங்கப்பட்டுள்ளது. இதை உள்ளக நீதிமன்ற விசாரணைப் பொறிமுறை எனக் கூறுவதைவிட, சர்வதேச நீதிமன்ற விசாரணைப் பொறிமுறை என்பதே பொருத்தமானதாகும்.

இந்தத் தீர்மானத்துக்கமைய உள்ளகப் பொறிமுறையா அல்லது கலப்பு நீதிமன்ற முறைமையா என்பதை சரியான காரணங்களை விளக்கமாக முன்வைத்து அரசு விளக்க மளிக்கவேண்டும் எனச் சவால் விடுகின்றேன்-என்றார். (த-சி)

## பேராசிரியரின் சிறப்புரை இன்று

யாழ்ப்பாணம், ஒக். 3
போரின் தாக்கத்துக்குப் பின்னர் இளைஞர்களுக்குத் தற்போதைய உளசமூக சூழலும், கல்வி மற்றும் உலகமயமாக்கல் பற்றிய சிறப்புரையும் இன்று சனிக்கிழமை இடம் பெறவுள்ளது.

உளமருத்துவ நிபுணர் பேராசிரியர் தயா சோமசுந்தரம் இந்த உரையை ஆற்றுகிறார்.

யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரியில் ஆனந்தராஜன் நினைவுப் பேருரை இன்று மாலை 4 மணிக்கு இடம் பெறவுள்ளது. அதில் இந்த உரையை உளமருத்துவ நிபுணர் ஆற்றவுள்ளார். (த-4)

## இரத்ததான முகாம் நாளை

வடமராட்சி, ஒக் .3
வல்வெட்டித்துறைப்பிரதேசவைத்தியசாலை நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் நாளை வல்வெட்டித் துறையில் மாபெரும் இரத்ததான முகாம் ஒன்று இடம்பெறவுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்த இரத்ததான முகாம் நாளை காலை நடைபெறும். காலை 9.00 மணியி லிருந்து பி.ப 1.00 மணிவரை வல்வெட்டித்துறைபிரதேச வைத்தியசாலை சிகிச்சை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த உயிர்காக்கும் உன்னத பணிக்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன் இம்முறை இரத்ததானம் செய்யும் அனைவரையும் பாராட்டி நினைவுப் பொருள்களும் வழங்கப்படவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (த-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடைமுறைப்படுத்த முடியாதவற்றை ஐ.நாவிடமே மீண்டும் சமர்ப்பிப்போம்

## எவரும் எமக்கு உத்தரவிடவில்லை

## யோசனையையே முன்வைத்துள்ளனர் என்கிறார் ஜனாதிபதி



கொழும்பு, ஒக்.3

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் எமக்குஉத்தரவுபிறப்பிக்கப்படவில்லை. யோசனையொன்றே முன்வைக்கப்பட்டுள்ளது. அதன் பரிந்துரைகளை நிறைவேற்றுவதில் ஏதேனும் நெருக்கடிகள் ஏற்படு மாயின், நடைமுறைப்படுத்தும்போதுசெய்ய முடியாத விட்யங்கள் இருக்குமாயின், அதை நாம் மனித உரிமைகள் சபையிடமும்,ஐ.நா.செயலாளரிடம் மீண்டும் சமர்ப் பிப்போம்.

–இவ்வாறுஜனாதிபதிமைத்திரிபால சிறிசேன நேற்றுத் தெரிவித்தார்.

இதேவேளை,முன்னாள்ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் காலத்தில் சர்வதேசத்தை வேண்டுமென்றே பகைத்துக்கொண்டதாகக் குற்றஞ்சாட்டிய அவர், மகிந்தவின் அப்போதைய நடவடிக்கைகளைக் கடுமையகச் சாடியதுடன், முன்கூட்டியே தேர்தலுக்கு சென்றமைக்கான காரணம்குறித்தும்கேள்வி எழுப்பினார்.

நேற்று நியூயோர்க்கிலிருந்து நாடு திரும்பியதையடுத்து ஐ.நாவின் பொதுச்சபையின்70ஆவதுகூட்டத் தொடர், ஐ.நா. மனித உரிமைகள் சபையின்30ஆவதுகூட்டத்தொடர் குறித்து கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் நேற்று இரவு ஊடகங்களுக்கு விடுத்த விசேட அறிவிப்பின்போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த விடயங்களைச் சுட்டிக்காட்டினார்.

இரவு 7.30 மணிமுதல் 8.15 மணி வரை 45 நிமிடங்கள் ஜனாதிபதி மைத்திரி உரையாற்றினார். இந்நிகழ்வில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கமற்றும்சுதந்திரக்கட்சிஅமைச்சர்கள் சிலரும் கலந்துகொண்டனர். இதன்போது மேலும் உரையாற்றிய ஜனாதிபதி மைத்திரி,

ஐ.நா. பொதுச் சபைக்கூட்டம் மற்றும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடர் ஆகியவற்றில் இலங்கைக்கு சர்வதேச நாடுகளின்மத்தியில்சிறந்தவெற்றி கிடைத்துள்ளது. இந்த வெற்றிக்கு பங்காளர்களாகச்செயற்பட்ட பிரதமர் உள்ளிட்ட அனைத்து தரப்பினருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நாட்டின் ஆட்சியில் மிகச்சிறந்த முறையில் வெளிநாட்டுக் கொள்கையை நாம் கடைப்பிடிக்கின்றோம். அனைத்து நாடுகள், அதன் தலைவர்கள், சர்வேதச அமைப்புக்களை எம்முடன் நட்புறவாக்கிக் கொள்வது மிகவும் அத்தியாவசியமாகும். இதனூடாக நாம் உலகை வெற்றி கொள்ள முயற்சிக்கின்றோம். உலகை வெல்லும்போது நாட்டு மக்களின் எதிர்காலத்தை வெல்ல முடியும் என நாம் நம்பிக்கை கொள்கின்றோம்.

இந்தியா,சீனா,பாகிஸ்தான்,அமெரிக்கா, பிரிட்டன் போருக்கு உதவின.

போரை வென்றெடுக்கும் மனிதாபிமான நடவடிக்கைகளுக்கு எமக்கு இந்தியா, சீனா, பாகிஸ்தான், அமெரிக்கா, பிரிட்டன் போன்ற பலமிக்க பல நாடுகள் பயங்கரவாதத்தைத் தோற்கடிக்க எமக்கு உதவி வழங்கின. ஆனால்,போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னர் இறுதிக்கட்டத்தை அடிப்படையாகக் கொண்டு, மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச பிரகடனங்களுக்கமைய் போருக்கான நடைமுறை எம்மால் கையாளப்படாமல் மனித உரிமைகள் மீறப்பட்டதாக எம்மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

அந்தகுற்றச்சாட்டுக்களுடன்,எமக்கு போரின்போது ஆதரவு வழங் கிய பிரபலநட்புநாடுகள்கூட இந்தமனித உரிமை மீறல் தொடர்பான குற்றச்சாட்டுடன்,இன்னொருபின்னணியும் உருவானது. இந்த நாட்டைப் பிரிக்க, கொடிய தீவிரவாத்துடன், ஆதரவாளர்களாகச் செயற்பட்டு நாட்டிலிருந்து வெளியேறியவர்கள், மனிதஉரிமை மீறப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டைத் தமது கைகளுக்கு எடுத்து, எமது நாட்டையும், இராணுவத்தையும், மக்களையும் மிகப்பெரிய ஆபத்துக்குள் தள்ள நடவடிக்கை எடுத்தனர்.

**சர்வதேசத்தில் இலங்கை தோல்விக்குட்படுத்தப்பட்டது**

இதனால், மனித உரிமைகள் சபையூடாக எமது நாட்டுக்கு எதிராக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. சர்வதேசத்தின்மத்தியில்எமது நாடு தோல்விக்குட்படுத்தப்பட்டது. உலகம் எம்மால் இரண்டாகப் பிளவுபட்டது. ஐ.நா. அமைப்பின் உறுப்பு நாடுகள், மனிதஉரிமைகள் சபையின் உறுப்பு நாடுகள் இரண்டாகப்பிளவுபட்டன.நாம்உலகத்தின் முன்னிலையில் கடந்த சில காலங்காளகதோல்விக்குட்பட்டோம்.இது எமக்கு ஒருபோதும் சாதகமான நிலைமையல்ல. அந்த தோல்வியினூடாக எம்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களுடன், நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களும் எமது நாட்டின் எதிர்காலத்தின் மிகப் பெரிய அரசியல் பொருளா தார, சமூக பாதிப்புக்களை ஏற்படுத்தும் பின்னணியொன்று உருவானது.

**ஐ.நா. அலுவலகம் முன் உண்ணாவிரதமும்! இளநீரும்**

இதேவேளை, எமக்கு சாதகமற்ற பிரதிபயன்கடந்தசிலவருடங்களில் கிடைப்பதற்கும்காரணம்இருந்தது. ஐ.நாவின் கொழும்பு அலுவல கத்தின்முன், இலங்கையின்அமைச்சர் உண்ணாவிரதம்இருந்தார்.உலகின் 193 நாடுகளின் அங்கத்துவத்துத்தைக் கொண்டுள்ள மிகப்பெரிய பலமிக்க அமைப்புக்கு, உலகின் பலம்மிக்க நாடுகள்கூட சவால் விடுக்கவில்லை. அமைச்சர் உண்ணாவிரதம்இருந்தபோதுஐ.நாவை அபகீர்த்திக்கு உட்படுத்தினார். உண்ாவிரதம் இருந்தவருக்கு இளநீர் கொடுத்தனர்.

**கடாபி தோளில் கரம் போட்ட மகிந்த**

சர்வதேசத்தை வேண்டுமென்றே பகைத்துக்கொண்டோம். பாதிப்புக்களைஏற்படுத்தும்பின்னணி ஒன்று உருவானது.

சுமார் 40 வருடங்கள் சர்வாதிகாரியாகச் செயற்பட்ட கடாபி (லிபிய முன்னாள் ஜனாதிபதி) தோளின் கைபோட்டதால், உலகில் ஜனநாயகம், சுதந்திரத்துக்கு மதிப்பளிக்கும் நாடுகள், மனித உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும்நாடுகள்விலகதொடங்கின. கடந்த காலத்தில் அவ்வாறுதான அரசு நடத்தப்பட்டது. எமக்கு ஞாபகத்திலுள்ளது, போர் தொடர் பான நிலைமை, சமாதானத்தை ஏற்படுத்துதல், போர் நிறுத்த பேச்சு நடத்த முக்கிய இராஜதந்திரிகள் எமது நாட்டுக்கு வந்தபோது, இந்த நாட்டின்பிரதானிகள்கொழும்புக்கு வெளியே சென்று, எம்பிலிபிட்டிய பகுதிக்குச் சென்று அவர்களை அழைத்து, சென்றதன் பின்னர், நாம் அவர்களுக்கு மரவள்ளிக்கிழங்க கொடுத்து அனுப்பினோம் என்று கூறினர்.

இந்த நிலைமைகளை எடுத்துக் கொண்டால், நாம் வேண்டுமென்றே சர்வதேசத்தைப் இல்லாமல் செய்து கொண்டோம் என்று நான் நினைக்கின்றேன். உலகின் பலமிக்கவர்களை நாம் இல்லாமல்செய்து கொண்டோம்.

மின்சாரக் கதிரை, ஹைபிரிட் பேச்சுக்கே இனி இடமில்லை

இந்த நாட்டில் இடம்பெற்ற விடயங்கள் குறித்து, சர்வதேச தலையீட்டுக்கோ அல்லது சர்வதேச விசாரணைக்கோ நாம் உடன்படமபட்டோம். நாம் மிகத் தெளிவாகக் குறிபபிடவேண்டும். எமது அரசின் வேலைத்திட்டத்துடன், மனித உரிமைகள் சபைக்கும், சர்வதேசத்துக்கும், ஐ.நா. அமைப்புக்கும், பிரபல இராச்சியங்களுக்கும் முகங்கொடுத்து நல்லெண்ணத்தை வென்றெடுத்து, எவ்வித அழுத்தங்களும் இல்லாமல், கடந்த 7, வருடங்களாகப் பேசப்பட்ட மின்சாரக்கதிரை என்றதலைப்பை இல்லாமல் செய்துள்ளோம். இனி மின்சாரக் கதிரை பற்றி எவரும் பேச முடியாது.

அதேபோல் சில வாரங்களுக்கு முன்னர், கலப்பு (ஹைபிரிட்) நீதிமன்றம் பற்றி பேசப்பட்டது. கலப்பு நீதிமன்றம் இல்லாமல் உள்ளகப் பொறிமுறையூடாக எமது அரசமைப்புக்கு உட்பட்டு இது தொடர்பில் நடவடிக்கை எடுப்பது சாதகமானதாகும். எமக்கு எவரும் உத்தரவிடவில்லை.

**சர்வதேச சித்தாந்தங்களுக்கு நாம் மதிப்பளிக்க வேண்டும்**

இவற்றை அவதானத்தில் கொள்ளும்போது, நாம் பல்வேறு துறைகள் குறித்து நடவடிக்கை எடுக்கும் போது சர்வதேசத்தால் ஏற்றுக் கொள்ப்பட்ட அடிப்படை சித்தாந்தங்களுக்கு நாம் மதிப்பளிக்க வேண்டும். உண்மையைக் கண்டறிதல், நீதி, இழப்பீடு, மீள்நிகழாமை முதலான எண்ணக்கருக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து நாம் செயற்பட வேண்டும்.

எமக்கு முன்வைக்கப்பட்டிருப்பது யோசனை ஒன்றுதான். உத்தரவு அல்ல. கடந்த 2 வாரங்களுக்கு முன்னர் வந்த யோசனை கடந்த 2 நாள்களுக்கு முன்னர் மேலும் மாறியது. அதனால், நாம் அனைவரும் எதிர்காலத்தில் இந்த நடவடிக்கையில்மிகசுமுகமாகவும்,அர்ப்பணிப்புடனும் முகங்கொடுக்க முடியும். அந்த முகங்கொடுத்தலின்போது எமக்கு இருக்கும் வேலைத்திட்டம்தான் மிக முக்கியமானது.

இதுவரையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்த 5 அறிக்கைகள் எம்வசமுள்ளன. தருஸ்மன் அறிக்கை நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை, உதலாகம ஆணைக்குழு அறிக்கை, பரணகம மற்றும் டெஸ்மன் டி சில்வா குழு அறிக்கை, இலங்கை இராணுவம் சமர்ப்பித்த அறிக்கை எம்வசமுள்ளன. இவை அனைத்தையும்ஆராய்ந்து எமக்கு ஏற்றுக் கொள் ளக்கூடிய விடயங்கள் இருக்குமா யின் அதற்கமை எம்மால் செயற்பட முடியும்.

**ஒவ்வொரு அடியாக முன்னோக்கிச் செல்வோம்**

மனித உரிமைகள் பேரவையால் முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதி என்றவகையில் நான் மிகவும் மத்தியஸ்தத்துடனேயே நோக்குகின்றேன். அந்தத் தீர்மானத்தின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதில் ஏதேனும் சிக்கல் ஏற்படுமாயின், நாட்டு மக்கள் எண்ணப்பாடு, கலாசரம் என்பவற்றின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தும்போது செய்யமுடியாத விடயங்கள் இருக்குமாயின், அதை நாம் மனித உரிமைகள்பேரவையிடம்மீண்டும் சமர்ப்பிப்போம். ஐ.நா. செயலாளரிடம் சமர்ப்பிப்போம். அதனால் நாம் ஒவவொரு அடியாக இந்த வேலைத்திட்டத்தை முன்னோக்கிக் கொண்டுசென்று நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் ஏற்படப் போகும் ஆபத்தை நானும், பிரதமர் உள்ளிட்ட அரசும் முடிவுக்குக் கொண்டுவரும் என இந்தச் சந்தர்ப்பத்தில் நான் உறுதியளிக்கின்றேன். விசேட உள்ளக நீதிபதிகள் குழுவை நியமித்து போரின்போது இராணுவத்தாலும், புலிகளாலும் இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள் குறித்த விசாரணைகள் நாட்டின்அரசைமப்புக்கு அமையவே இடம்பெற வேண்டும் என நான் மிக வும் உறுதியாக உங்கள் கவனத்துக்கு கொண் டு வருகின்றேன்.நாட்டின்இறைமையை ஒருபோதும் கேள் விக்குட்படுத்தாமல் இந்த நடவடிக்கை நாம் முன்னெடுப்போம் எனத் தெளிவாகக் குறிப்பிடவேண்டும்.குற்றச்சாட்டுசுமத்தப்பட்டுள்ள இராணுவத்தினரும், புலிஉறுப்பினர்களும்சுதந்திரமாகதமது கருத்துக்களை முன்வைக்கலாம்.

**3 மாநாடுகள்**

இந்த விடயத்தில் நான் தனித்து தீர்மானங்களை மேற்கொள்ள மாட்டேன். பிரதமர், உள்ளிட்ட அமைச்சரவையுடன்பேச்சுநடத்தியேதீர்மானம் எடுப்பேன். அடுத்துவரும் சில நாள்களுக்குள், இது தொடர்பில் உணர்வுடன்செயற்படும்அநாட்டில் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசில் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்து, சர்வ கட்சி அரசியல் தலைவர்களின் மாநாடொன்றை நடத்தி, இது தொடர்பில் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டு பேச்சு நடத்தவும், அதேபோல், பௌத்த, இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ சமயத்தலைவர்களின் கருத்துக்களை உள்வாங்கிக் கொள்வதற்காக சமயத்தலைவர்களின்மாநாட்டையும், அதேபோல், இலங்கைக் குள்ள உள்ள நிபுணர்கள், புத்திஜீவிகள் மற்றும் வெளிநாடுகளில் உள்ள இலங்கையின் நிபுணர்கள், புத்திஜீவிகளின் கருத்துகளை உள் வாங்கிக் கொள்ளவும் மா நாடொன்றை நடத்த எதிர்பார்க்கின்றேன்.

**37 ஈழ ஆதரவு நாடுகள்**

அன்று அதிகாரத்திலிருந்த அரசுக்கு எதிராக போர்க்குற்றங்கள் முன்வைக்கப்பட்டபோது, அன்று அதிகாரத்தில் இல்லாத, இன்று அதிகாரத்தில் இருக்கின்ற அரசே பொறுப்புக்கூறுகின்றது என்பதை தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும். எமது நாட்டை பிரிக்க முயற்சிக்கும் பலம் மிக்க 37 ஈழ ஆதரவு நாடுகள் இந்தத் தீர்மானத்துக்கு எதிர்ப்பு வெளியிட்டன. புலிகள் முடிந்ததன். ஈழ வாதம் முடிந்தது என மகிந்த ராஜபக்ச கூறினார். ஆனால், 2009 மே 18 ஆம் திகதி இந்த நாட்டில் ஆயுத மேந்திய தரப்பினரயே நாம் முடிவுக்கு கொண்டுவந்தோம்.

ஆனால், கருத்து அடிப்படையில் ஈழ எண்ணம் கொண்ட தரப்பினர் சர்வதேச விசாரணையே தேவை என்றனர். வைக்கோ, சென்னையிலுள்ள ஐ.நா. தூதரகத்திற்கு முன்னாள்பேரணிசென்றுசர்வதேச விசாரணையை வலியுறுத்தினார். எனவே, இவற்றை நாம் கருத்திற் கொள்ள வேண்டும்.

கண்ணீர் அஞ்சலி

கோபாலபிள்ளை சிவாகரன்



அவர்கள் கடந்த 28.09.2015 திங்கட்கிழமை காலமானதையிட்டு அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கோபிகா ஆடைஅகம்
நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

(65111)
(10.15.17)

கோபிகா ஆடைஅகம்
உரிமையாளரும்
ஊழியர்களும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜப்பானுக்கு

பின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தின் ஆரம்ப விழாவில் விசேட உரை நிகழ்த்துவதற்காகவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜப்பான் செல்கின்றார்.

ஜப்பானின் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைப்பின் தலைவராக ஜப்பான் பிரதமர் சின்சோ அபே உள்ளார். இந்தப் பயணத்தின்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜப்பான் பிரதமர் சின்சோ அபே மற்றும் ஜப்பானின் முன்னாள் பிரதமர்கள் உட்பட உயர்மட்ட அதிகாரிகளையும் சந்திக்கவுள்ளார். (த-வ)

## இலங்கை

குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறுவதிலும் சர்வதேசத் தலையீட்டின் முக்கியத்துவம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இது செயற்பாட்டில் இறங்க வேண்டிய நேரம்.

இலங்கைக்கு ஆலோசனை வழங்கவும், நீதி, பொறுப்புக்கூறல், கடந்த கால வன்முறைகள் மீள நிகழாமல் உறுதிப்படுத்துவதற்கும், சட்ட மற்றும் நிர்வாக மாற்றங்களின் ஊடாக நீதித்துறை மற்றும் உண்மையைக் கண்டறியும் செயல்முறையிலும், அதனுடன் இணைந்துபயணிக்கவும் நாம் எதிர்பார்த்திருக்கிறோம்.

ஐ.நா விசாரணை அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த, ஐ.நா மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் இலங்கையுடன் பரந்தளவில் ஈடுபாடு காட்டும்–எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-வ)

## குழந்தைகளின்

கொள்ள முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அண்மைய காலங்களில் சிறு வர்கள் முகம்கொடுத்த துயரமான சம்பவங்கள் தொடர்பில் நான் மிகுந்த மன வேதனையடைகின்றேன். இந்த அசாதாரண நிலமைகள் காரணமாகப் பெற்றோர்கள் உருக்குலைந்திருக்கின்றனர்.

குழந்தைகளைப் பாதுகாக்கவேண்டியது அரசின் கடமையாகும். குழந்தைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் விசேட தொலைபேசி சாதனம் ஒன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இதன் மூலம் அவசர சந்தர்ப்பங்களில் பெற்றோர் மற்றும் பொலிஸாரைச் சிறுவர்கள் தொடர்புகொள்ள முடியும்.

வளர்ச்சியடையும் தொழில்நுட்பத்துடன் இணைந்து உலகில் முன்னோக்கிச் செல்ல வேண்டும். அதன்படி இந்தச் சாதனம் விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என்று அமைச்சர் ஹரின் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார். (த-வ)

## இறையாண்மையை

இடம்பெற்ற நிகழ்வொன்றின்போது அவர் இதனைக் கூறியுள்ளார்.

இந்தத் தீர்மானத்துக்கு இலங்கை இணை அனுசரணை வழங்கியதன் மூலம் செழிப்பான நாட்டை உருவாக்க வேண்டிய தேவை உள்ளதை இலங்கை சர்வதேசத்துக்கு வெளிப்படுத்தியுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேபோன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டிருப்பதனால் எதிர்காலம் தொடர்பான நல்ல அறிகுறிகள் தென்படுவதாகவும் பிரிட்டன் தூதுவர் ஜேம்ஸ் டோரிஸ் குறிப்பிட்டுள்ளார். (த-வ)

## உயர்பாதுகாப்பு

எதிர்க்கட்சித்தலைவராகப் பதவியேற்றுக் கொண்ட பின்னர் யாழ்ப்பாணத்துக்கு முதல் தடவையாக வருகை தந் துள்ள இரா.சம்பந்தன் வலி. வடக்குப் பகுதிக்கு நேற்றுக் காலை பயணம் மேற்கொண்டார். இதன்போது, வலிவடக்கில் கடந்தமார்ச் மாதம் விடுவிக்கப்பட்ட பளை வீமன்காமம் மக்களை அவர் நேரில் சென்று பார்வையிட்டார்.

**தொழில் இல்லை**

இதன்போது மக்களிடம், நீங்கள் எப்படியிருக்கிறீர்கள் என்று எதிர்க் கட்சித் தலைவர் கேட்டதற்கு, ஏதோ இருக்கின்றோம் என்று பதிலளித்தார்கள். தங்களது குடியிருப்பு நிலங்கள் இன்னமும் விடுவிக்கப்பட்டிருக்கின்றன. ஆனாலும், தமது தொழிலுக்கான நிலங்கள் விடுவிக்கப்படவில்லை என்று அவர்கள் முறைப்பாடு செய்தனர். தற்போது உயர்பாதுகாப்பு வலயமாக இருக்கும் பிரதேசத்தினுள்ளேயே தோட்டக் காணிகள் இருக்கின்றன என்றும், அந்தத் தோட்டக் காணிகளிலேயே தாம் கூலித் தொழிலில் முன்னர் ஈடுபட் டதாகவும் தற்போது, தொழில் இல்லாமல் இருப்பதாகவும் அந்த மக் கள் கூறினர்.

**இராணுவம் வெளியேற வேண்டும்**

தொடர்ந்து எதிர்க் கட்சித் தலைவர் ஒட்டகப்புலத்துக்கு சென்றார். ஒட்டகப்புலத்தில் அமைந்துள்ள தேவாலயத்தில் மக்கள் ஒன்றுகூடல் இடம் பெற்றது. அந்தத் தேவாலயத்தின் பங்குத்தந்தை அருட்திரு. சி.ஜே. அன்ரன்பாலா உரையாற்றுகையில், கடந்த மார்ச் மாதம் எமது கிராமம் விடுவிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இங்கு வந்தபோது, எமது கிராமத்தை மாத்திரம் – எவரோ சொல்லி வைத்துச் செய்ததுபோல் – எங்கள் வீடுகளை மாத்திரம் உள்ளடக்கி இராணுவத்தினர் வேலிகள் அமைத்துள்ளனர்.

இதனால் எமது கிராமத்திலுள்ள 114 குடும்பங்களும் மீள்குடியமர முடியாத நிலையில் இருக்கின்றன. இந்த இராணுவத்தினர் இங்கிருந்து அகன்றால்தான் எங்களது மக்களின் மீள்குடியேற்றம் சாத்தியப்படும். அதனைநிறைவேற்றித்தரவேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

**காணியை கையகப்படுத்த காரணம் இல்லை**

பதிலளித்துக் கருத்து தெரிவித்த, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், ஆட்சி மாற்றத்துக்கு முன்னர் இருந்த அரசு, இந்தக் காணிகளை விடுவிக்க எள்ளவும் விருப்பமின்றி இருந்தது. ஆட்சி மாற்றத்தின் பின்னர் வலி.வடக்கு மற்றும் சம்பூரில் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. ஆனாலும் வடக்கு – கிழக்கில் இன்னமும் காணிகள் விடுவிக்கப்பட வேண்டியுள்ளது. தற்போதைய அரசு, காணிகளை விடுவிக்காமல் வைத்திருப்பதற்கு எந்தக் காரணமும் இல்லை.

வீதியின் ஒரு பக்கக் காணியை விடுவித்திருக்கின்றார்கள். மறுபக்கக் காணியை விடுவிக்கவில்லை. மக்களின் தொழில் செய்யும் இடங்கள் விடுவிக்கப்படவில்லை. இதற்கு விரைவில் முடிவு வரவேண்டும். இராணுவ மயமாக்கல் குறைக்கப்பட வேண்டும். மக்கள் மீள்குடியேறத் தக்க அளவுக்கு இராணுவம் வெளியேறவேண்டும்.

**பேச்சு நடத்தப்படும்**

இந்த விடயங்களை உடனடியாகச் செய்து முடிக்கவேண்டும். இந்த நிலைமை தொடர்வதை இனியும் அனுமதிக்க முடியாது. இந்தக் கருமங்கள் விரைவில் முடிவுக்கு வரவேண்டும். ஐ.நா.வில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் கூட, மக்களின் காணி விடுவிப்புக்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன. மக்களின் காணி விடுவிப்புத் தொடர்பில் விரைவில் ஜனாதிபதியுடனும், பிரதமருடனும் பேசி முடிவைக் காண்போம் – என்றார்.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வலி. வடக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சோ.சுகிர்தன், வடக்குமாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-5)

## ஈழத் தமிழரின்

இது தொடர்பாக கலைஞர் மு.கருணாநிதி வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தாமதப்படுத்தப்பட்ட நீதி, மறுக்கப்பட்ட நீதி ஆகும் என்று இலக்கணம் வகுக்கப்பட்டிருந்தாலும் இலங்கையின் ஆதிக் குடிமக்களான ஈழத் தமிழர்களுக்குத் தொடர்ந்து இழைக்கப்பட்டு வந்த எண்ணிலடங்காத கொடுமைகளுக்கும், இனப்படுகொலை, மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றங்கள் ஆகியவற்றுக்கும் தாமதமாகவேனும் நீதியும் நியாயமும் கிடைக்குமென்று உலகத் தமிழர்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த வேளையில், அதிர்ச்சி தரும் விதமாக அமைந்திருக்கின்றது ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நேற்றுமுன்தினம் நிறைவேற்றப்பட்டிருக்கும் தீர்மானம்.

அமெரிக்கா, பிரிட்டன், மற்றும் இலங்கை உள்ளிட்ட ஏனைய நாடுகள் கொண்டு வந்த தீர்மானத்தில், இலங்கை அரசு, பொதுநலவாயம் உள்ளிட்ட வெளிநாட்டு நீதிபதிகள், வழக்கறிஞர்கள், அங்கீகரிக்கப்பட்ட குற்றஞ்சாட்டுவோர் மற்றும் புலன் விசாரணை நிபுணர்கள் ஆகியோர் பங்குபெறும் நம்பகத்தன்மை உள்ள நீதி விசாரணை அமைப்பு ஒன்றை உருவாக்கி மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை செய்ய வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

அமெரிக்கா தொடக்கத்தில் கொண்டு வந்த தீர்மானத்தில் இருந்த சர்வதேச என்ற சொல் இந்தத் தீர்மானத்தில் நீக்கப்பட்டுள்ளது. உலகத்தின் பல்வேறு விசாரணை அமைப்புகளாலும் இதுவரை ஏற்றுக்கொள்ளப்பட்ட இனப் படுகொலை பற்றி இந்தத் தீர்மானத்தில் எதுவும் இடம் பெறவில்லை.

மேலும் அந்தத் தீர்மானத்தில் இந்த விசாரணையை இலங்கை அரசே நடத்த வேண்டுமென்று குறிப்பிட்டிருப்பது, குற்றம் சாட்டப்பட்டவரிடமே குற்ற விசாரணை அதிகாரத்தை ஒப்படைப்பதற்குச் சமமாகும். நீதி விசாரணையைப் பொதுநலவாய நாடுகளைச் சேர்ந்த நீதிபதிகளைக் கொண்டு நடத்தினாலும், அவர்கள் இலங்கை அரசின் நேரடிப் பார்வையில் இலங்கையிலே இருந்து கொண்டு விசாரணை நடத்தினால், அதன் முடிவு எப்படியிருக்கக்கூடும் என்று சந்தேகிக்க இடம் வருமல்லவா? மேலும் பொதுநலவாய அமைப்பின் தலைமைப் பீடத்தில் தற்போது இலங்கை தான் இருந்து வருகிறது என்பதையும் ஒதுக்கிவிட முடியாது.

கொடுமையிலும் கொடுமையாக, அந்தப் போர்க்குற்றங்களைச் செய்த சிங்களப் பேரினவாத இலங்கைக்கு ஆதரவாக எம்முடைய இந்தியாவும் மௌனம் சாதித்துள்ளது. நாடற்றவர்கள் நாதியற்றவர்களாகிவிட்ட நிலை தான் இன்று தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இலங்கை என்ற நாட்டுக்கு ஆதரவாகத் தான் அமெரிக்காவும் இருக்கிறது. பிரிட்டனும் இருக்கிறது. சீனாவும் இருக்கிறது. அந்த நாடுகளோடு இந்தியாவும் இருக்கிறது.

இந்திய அரசும் பெரும் பாதிப்புக்காளான தமிழர்களுக்கு நீதி கிடைத்திட வேண்டுமென்ற உள்ளார்ந்த எண்ணத்தோடு, சுதந்திரமான, நம்பகத் தன்மையுள்ள சர்வதேச விசாரணை வேண்டும் என்பதற்கு ஆதரவாகக் குரல் கொடுக்கவேண்டுமென்றும், இந்தியாவே அதற்கானதொரு தீர்மானத்தை ஐ.நா. மனித உரிமை ஆணையத்தில் முன்மொழிய வேண்டுமென்றும் தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகமும், டெசோ அமைப்பும் தெரிவித்து வந்தன.

தமிழக அரசின் சார்பிலே கூட கடந்த 16ஆம் திகதி சட்டப் பேரவையில் கொண்டு வந்த தீர்மானத்தில், போர் விதிகளை முற்றிலும் மீறி போர்க் குற்றங்கள் மற்றும் இனப்படுகொலைநிகழ்த்தியவர்கள் அனைவர் மீதும் சர்வதேச விசாரணை நடத்தும் வகையிலான வலுவான தீர்மானத்தினை இந்தியாவே ஐ. நா சபையின் மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா உட்பட மற்ற நாடுகளுடன் இணைந்து கொண்டு வரவேண்டும். அமெரிக்கா, இலங்கைக்கு ஆதரவான நிலையை எடுத்தால், அதனை மாற்ற ராஜதந்திர ரீதியில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டது.

ஆனால் குதிரை குப்புறத்தள்ளியதும் அல்லாமல் குழியும் பறித்துவிட்டது என்பதைப் போல இந்திய அரசு தனியே தீர்மானமும் கொண்டு வரவில்லை. மாறாக இலங்கையும் அமெரிக்காவும் இணைந்து கொண்டு வந்த தீர்மானத்தையும் ஆதரித்துவிட்டது.

ஐ.நா. மனித உரிமை ஆணையத்தில், உலகத் தமிழ் அமைப்புகளின் எதிர்பார்ப்புகளுக்கு மாறாக நிறைவேற்றப்பட்டுள்ள நீர்த்துப் போன தீர்மானத்தையாவது இலங்கை அரசு முழுமனதோடு நேர்மையான முறையிலே நிறைவேற்றுமா என்பது பெரும் ஐயப்பாட்டுக்கு உரியது தான். ஏனெனில் இலங்கைச் சிங்கள அரசின் கடந்த கால வரலாறு எவருக்கும் நம்பிக்கை ஊட்டுவதாக இல்லை.

இந்த நிலையில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறையேறியுள்ள தீர்மானம் தமிழர்களுக்கு முழுமையான அளவுக்கு நிறைவையோ, நம்பிக்கையையோ தரக் கூடிய ஒன்றல்ல. ஆனால் இது பற்றி அக்கறையோடு ஆதரவாக இருந்திருக்க வேண்டிய மத்திய அரசும் தமிழர்களுக்கு உகந்த நிலையை எடுக்கவில்லை என்பதையும், தமிழக அரசின் தீர்மானத்தை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை என்பதையும் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்–என்றுள்ளது.(த-வ)

## வெளிநாட்டுச்

நாட்டின் அரசியல் சாசனத்தில் திருத்தங்களைச் செய்யாமல் புதிய சர்வதேச நீதிமன்றமொன்றை அமைக்க முடியாது. அரசியல் ரீதியாகவும் இந்த விடயம் மிகவும் சவாலானது. விசாரணைப் பொறிமுறைமை உள்ளக ரீதியானதாகவே அமையும்.

மதத் தலைவர்கள், இராணுவ அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளுடன் ஆலோசனை நடத்தி மிகவும் நிதானமாக நீதிமன்றக் கட்டமைப்பு உருவாக்கப்படும் –என்றார்.

இலங்கையில் நடைபெற்றது நீதிக்குப் புறம்பான கொலைகள், கடத்தல்கள், காணமற்போதல்கள், சித்திரவதைகள் மற்றும் பாலியல் துஷ்பிரயோகங்கள் போர்க்குற்றங்களே என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அறிக்கை வெளியிட்டுள்ளார். அத்துடன் போர்க்குற்றங்களை சுயாதீனமாகவும் நம்பகத்தன்மையாகவும் விசாரணை செய்வதற்கு இலங்கையின் நீதிக் கட்டமைப்பு இல்லை எனவும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பகிரங்கமாகத் தெரித்துள்ளார் எனக் கேள்வியெழுப்பியமைக்குப் பதிலளித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன,

சர்வதேச ரீதியாக இலங்கை ஓரம் கட்டப்பட்டிருந்த நிலையில் நாட்டை நாம் பொறுப்பேற்றுக்கொண்டோம். அதன் பின் நான் எதிர்கொண்ட முக்கிய சவால் சர்வதேச சமூகத்தை வெல்வது. எனினும் தற்போது உலக சமூகத்தின் ஆதரவைத் திரட்டியுள்ளோம். இது பேச்சுக்கள் மூலமே கனிந்தது என நம்புகின்றேன்- என்றார்.

இதற்குத் திடீரென முண்டியடித்துப் பதிலளித்த அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசம், ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ–மூன், உலகத்தலைவர்களுக்கு விருந்தளித்தபோது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு முதல் மேசையில் ஆசனம் வழங்கினார். அதனால் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, ரஷ்யா ஜனாதிபதி விளாடிமிர் புடின் ஆகியோர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சாமா தான முயற்சிகளைப் பாராட்டினார்கள்–என்றார். (த-வ)

## இந்திய

மறியலில் வைக்குமாறு உத்தர விட்டதோடு அவர்களை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறும் உத்தரவிட்டார்.

மீனவர்களுடன் அவர்களுடைய படகு ஒன்றும், மீன்பிடி உபகரணங்களும் இலங்கைக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன. (த-21-10)

## தமிழர் அபிலாசை

சித் தலைவர் சி.தவராசா.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை சம்பந்தமான தீர்மானம் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டது. அது தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஐ.நா. மனிதஉரிமைகள்சபையினால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் பரிந்துரை 16 இல் இலங்கை அரசு தீர்வு விடயத்தில் அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தைமுழுமையாகநடைமுறைப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற வாசகத்தைத் தவிர தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் தொடர்பாக வேறு எதையும் பரிந்துரை செய்யவில்லை.

'அவலை நினைத்துக் கொண்டு உரலை இடித்தது போல்' தமிழ் மக்களின் பிரச்சினையை சர்வதேசத்திற்கு எடுத்துச் சொல்வோம் என்று கூறியவர்கள் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவதே தமிழ் மக்களின் தீர்வாக அமையுமென்று சர்வதேசம் பரிந்துரை செய்யும்போது ஏன் மௌனமாக இருக்கின்றார்கள்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இந்தியாவின் பிரதிநிதி உரையாற்றும்போது 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு அப்பால் சென்று மேலும் அதனைச் செழுமைப்படுத்தவேண்டுமென்று கூறியிருந்தாலும், அந்த வார்த்தைப் பிரயோகம் பிரேரணையில் உள்வாங்கப்படவில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (த-5)

## வலி.வடக்கில்

எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற- உறுப்பினர் ஈ.சரவணபவன் ஆகியோர் நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு நேற்றுக் காலை சென்று வழிபாடுகளை நடத்தினர். அதன் பின்னர் காலை 9.30 மணிக்கு தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயிலுக்குச் சென்று வழிபாடுகளை நடத்தினர். இதன்போது, கோயிலுக்கு வந்திருந்தவர்கள், எதிர்க்கட்சித் தலைவரின் காலில் வீழ்ந்து ஆசீர்வாதம் வாங்கினர்.

இதன் பின்னர், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலுக்குச் சென்றனர். அங்கு வழிபாடுகளை மேற்கொண்டனர். இதன்போது கோயிலுக்குச் சுற்றுலா வந்திருந்த ஊர்காவற்றுறை பிரதேச பாடசாலை மாணவர்களுடன் எதிர்க்கட்சித்தலைவர் அளவளாவினார். கோயில் வழிபாடுகளை முடித்துக் கொண்டு மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட பளை வீமன்காமம் பிரதேசத்துக்குச் சென்றார்.

அங்கு மக்களுடன் எதிர்க்கட்சித் தலைவர் கலந்துரையாடல் நடத்தினார். இதன்போது, வலி.வடக்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சோ.சுகிர்தன், இராணுவத்தினர் வசம் உள்ள மக்களின் காணிகள் தொடர்பான விவரங்கள், விடுவிக்கப்பட்ட இடங்களில் மக்களிடம் கையளிக்கப்படாத பிரதேசங்கள் என்று பலவற்றையும் எதிர்க்கட்சித் தலைவருக்கு எடுத்துக் கூறினார்.

இவற்றைப் பார்வையிட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தபோது, விடுவிக்கப்பட்ட பகுதிக்குரிய கிராம சேவையாளர் ஒருவர் வந்தார். அவரையும் எதிர்கட்சித் தலைவர் சந்தித்துப்பேசினார். 'ஏன் இன்னமும் காணிகள் விடுவிக்கப்படாமல் இருக்கின்றன. என்ன காரணம் என்று வினவினார். அதற்குக் கிராம சேவையாளர் பதிலளிக்கவில்லை.

இதன் பின்னர், மாவிட்டபுரம் – நகுலேஸ்வரம் வீதியூடாகப் பயணித்து, உயர்பாதுகாப்பு வலயத்தினுள் முன்னைய அரசின் ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்ட ஜனாதிபதி மாளிகையையும் அவர் பார்வையிட்டார். அதனை முடித்துக் கொண்டு, இறுதியாக ஒட்டகப்புலத்துக்குச் சென்றார். அங்கு தேவாலயத்தில் இடம்பெற்ற விசேட பூசை வழிபாடுகளிலும் அவர் கலந்து கொண்டார். அங்கு இடம்பெற்ற மக்கள் சந்திப்பிலும் பங்குபற்றிய எதிர்கட்சித் தலைவர், அந்தப் பகுதி மக்கள் கண்ணீருடன் கூறிய கதைகளையும் செவிமடுத்தார். (த-5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து இளைஞர்களை திரட்டி விழிப்புணர்வு

### வைகோ. அறிவிப்பு

சென்னை, ஒக்.03

இலங்கைத் தமிழர் பிரச்சினைகள் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த இளைஞர்களை திரட்டுவேன் என, ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ. தெரிவித்துள்ளார்.

ஈரோட்டில் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அப்போது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: –

இலங்கையில்நடந்ததமிழர்களுக்கு எதிரான போர்க்குற்றம் குறித்து ஐ.நா.சபையில் கொண்டுவரப்படும் தீர்மானம், தமிழர்களுக்கு எதிரானதாகவே அமையும்.

இந்தத் தீர்மானத்துக்கு ரஷ்யா, அமெரிக்கா, பாகிஸ்தான், இந்தியா போன்ற நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளது. இந்த நாடுகள் ஒன்றுக்கொன்று முரண்பாடான கொள்கைகளை கொண்டதாகும். இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையில் இந்த நாடுகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து செயற்பட்டு வருகிறது.

இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையில் நீதிக்கு சாவுத் தண்டனை விதிக்கப்பட்டு உள்ளது. நீதி குலைக்கப்பட்டு உள்ளது. இதை வெளியே கொண்டுவரத் தமிழர்கள் முன் வர வேண்டும். பாரதிய ஜனதா தலைமையிலான மத்திய அரசு தனது தவறுகளை மறைக்கவே இலங்கைக்கு உதவி செய்து வருகிறது.

காங்கிரஸ் ஆட்சியின்போது இலங்கைக்கு ஆயுத உதவிகளும், தளபாடப்பொருள்களும் வழங்கப்பட்டன. அப்போது ஆட்சியில் இருந்த தி.மு.க. வும், பா.ம.க. நிறுவுநர் ராமதாஸும் வாய் திறக்கவில்லை. ஆனால் இப்போது மட்டும் இலங்கைப் பிரச்சினையில் அறிக்கை விட்டு வருகிறார்கள்.

அப்போதே தி.மு.க. உரிய நடவடிக்கை எடுத்திருந்தால் நாங்கள் அவர்களுக்கு ஆதரவாக இருந்திருப்போம். இதனால் இலங்கைத் தமிழர்களுக்குஎதிரானபோர்தடுத்து நிறுத்தப்பட்டு இருக்கும்.

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாகப் பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த 10 லட்சம் இளைஞர்களை திரட்ட உள்ளேன். திருவாரூரில் வருகிற 5ஆம் திகதி மக்கள் நலன் நாடும் கூட்டணியின் கூட்டம் நடைபெற உள்ளது. இதில் ம.தி.மு.க., விடுதலை சிறுத்தை, இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் ஆகிய கட்சிகள் இடம் பெறுகின்றன. இந்தக் கூட்டத்தில் பல முக்கிய முடிவுகள் எடுக்கப்படவுள்ளன. –இவ்வாறு வைகோ குறிப்பிட்டுள்ளார். (த–வ)

## தென்னிந்திய தமிழ் திரைப்படங்களில் மது, புகைத்தலுக்கு அதிக விளம்பரம்

கொழும்பு, ஒக். 03

கடந்த ஜூன் முதல் செப்ரெம்பர் வரையான 4 மாதங்களில் வெளியான 18 தென்னிந்தியத்தமிழ்திரைப்படங்களில் 17 திரைப்படங்கள் மதுபானம், சிகரெட் உள்ளிட்ட போதைப் பொருள்களை அதிகளவில் விளம்பரப்படுத்தியுள்ளதாக மதுபானம் மற்றும் போதைப் பொருள் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையமானது உலகசிறுவர் தினத்தை முன்னிட்டு விசேட ஊடகவியலாளர் மாநாடொன்றை கடந்த 30ஆம் திகதி அரச தகவல் திணைக்களத்தில் நடத்தியது.

குறிப்பிட்ட மாநாட்டின்போது ஜூன் மாதத்திலிருந்து செப்ரெம்பர் மாதம் வரை வெளியான தென்னிந்திய தமிழ்த் திரைப்படங்களில் சிறுவர்களை மதுபானம் மற்றும் சிகரெட் உட்பட ஏனைய போதைப் பொருள் பாவனைக்கு ஏமாற்றியிருக்கும் விதம் தொடர்பிலான ஆய்வறிக்கை வெளியிடப்பட்டது.

குறிப்பிட்ட ஆய்வறிக்கையில் பின்வரும் விடயங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன:–

18 படங்களிலும் மொத்தமாக சிகரெட் மற்றும் மதுபான வகைகளை விளம்பரப்படுத்திய நேரம் 144.24 நிமிடங்கள். இந்த நேர அளவானது ஒரு தனித் திரைப்படத்துக்குரிய நேரஅளவுஎன்பதுகுறிப்பிடத்தக்கது. குறிப்பிட்ட காலப்பகுதியில் வெளியான திரைப்படங்களின் மொத்த நேரம் 23:49 நிமிடங்கள்.

கூடுதலாகச் சிகரெட்டை விளம்பரப்படுத்திய திரைப்படம் மாரி. இந்தத் திரைப்படத்தில் மதுபானம் மற்றும் சிகரெட் விளம்பரமாகிய மொத்த நேரம் 21.97 நிமிடங்கள். சிகரெட் விளம்பரமாகிய நேரம் 18.22 நிமிடங்கள் ஆகும். இந்தத்திரைப்படத்தில் அதிக இரசிகர்களைக் கவர்ந்த நடிகர் தனுஷ் நடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இது இலாபத்தைஎட்டிய திரைப்படமென்பதுடன், திரைப்பட விளம்பரக் காணொளியில் சிகரெட் விளம்பரம் கவர்ச்சிகரமான விதத்தில் காட்டப்பட்டிருந்தது.

கூடுதலாக மதுபானத்தை விளம்பரப்படுத்திய திரைப்படம் வாசுவும் சரவணனும். இந்தத் திரைப்படத்தில், மதுபானம் விளம்பரமாகிய நேரம் 24.57 நிமிடங்கள் ஆகும். மேலும் நகைச்சுவை நடிகர் சந்தானம், பிரபல நடிகர் ஆர்யா இருவரும் தங்களின் கலைத்திறமையை உயர்ந்தளவில் பாவித்து மதுபானத்தை விளம்பரப்படுத்தியிருப்பதை அவதானிக்க முடிந்தது.

இதில் இறுதிக் கட்டத்தில் சிறப்புக் கதாபாத்திரத்தில் தோன்றி பியர் குடிக்கும் விதத்தை விளக்கியிருப்பதானது மதுப்பாவனையைத்தூண்டக்கூடிய குறிப்பிட்ட நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட விளம்பரமாகவே கருதப்படுகின்றது.

18 திரைப்படங்களில் 17 திரைப்படங்கள் மதுசாரம் சிகரெட் உட்பட ஏனைய போதைப் பொருள்களை விளம்பரப்படுத்தியிருக்கின்றன.

இது என்னமாயம் என்ற திரைப்படம் மாத்திரமே எந்த விதமான போதைப் பொருள் விளம்பரங்களும் இல்லாமல் வெளிவந்த திரைப்படம் என்பது குறிப்பிடத்தக்கது.

மொத்தத் திரைப்பட நேரத்தில் சாராயம் 48 நிமிடங்கள், சிகரெட் விளம்பரமாகியிருக்கும் நேர அளவு 46.06 நிமிடங்கள், பியர் 46.12 நிமிடங்கள், ஏனைய போதைப் பொருள்கள் 02 .04 நிமிடங்களும் விளம்பரமாகியிருக்கின்றன.

ஆய்வு மேற்கொள்ளப்பட்ட காலப் பகுதியினுள் சந்தானம் என்ற நகைச்சுவை நடிகரே அதிக மதுபானம் மற்றும் சிகரெட் விளம்பரங்களில் நடித்துள்ளார்.

மூன்று மாத காலப்பகுதியில் மட்டும் 18 திரைப்படங்கள் வெளிவந்த அதே நேரத்தில் கூடுதலான தந்திரோபாயங்களைப் பயன்படுத்தி மதுபானம் மற்றும் சிகரெட் போன்றவைகளும் விளம்பரப் படுத்தப்பட்டுள்ளன.

மொத்த நேரத்தில் காட்சிகளில் விளம்பரப்படுத்திய வீதம் 57.4%, பொதுவான வார்த்தைகளில் விளம் பரப்படுத்திய வீதம் 14.2%, நகைச்சுவையின் மூலம் வார்த்தைகளில் விளம்பரப்படுத்திய வீதம் 11.6%, விசேட வார்த்தைகளின் மூலம்; விளம்பரப்படுத்திய வீதம் 7.4%, பாடல் வரிகளின் மூலம் விளம்பரப்படுத்திய வீதம் 11.6%.

மேலும் குறிப்பிட்ட நிகழ்வின்போது போதைப் பொருள் சம்பந்தமான தகவல்களை உள்ளடக்கிய நிதர்சனம் என்ற பத்திரிகையொன்றும் வெளியிடப்பட்டது. (த)



இலங்கை இராணுவத்தின் 66ஆவது நிறைவு தினத்தை முன்னிட்டு இந்து மத வழிபாடுகள் கடந்த புதன்கிழமை கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்றன. இதில் இராணுவத் தளபதி கிரிஷாந்த டி சில்வா, இராணுவத்தின் பிரதம அதிகாரி மேஜர் ஜெனரல் ஜகத் டய்ஸ், மேஜர் ஜெனரல் ரவி ரட்ணசிங்கம் உள்ளிட்ட இராணுவ உயர் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர். (த)

## ஐ.நாவுடன் சேர்ந்து பணியாற்றத் தயார்

### இலங்கை தெரிவிப்பு

ஜெனிவா, ஒக். 03

அனைத்து குடிமக்களின் மனித உரிமைகளைப் பாதுகாத்து நிலை நிறுத்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மற்றும் சர்வதேச சமூகத்துடன் இணைந்து பணியாற்றுவோம் என இலங்கை உறுதியளித்துள்ளது.

ஜெனிவா மனித உரிமைகள் அமர்வில் இலங்கை தொடர்பிலான அறிக்கை குறித்த விவாதம் இடம் பெற்றவேளை, இலங்கை சார்பில் உரையாற்றிய, ஐ.நாவின் இலங்கைக்கான நிரந்தரப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.



மனித உரிமைகளைப் பாதுகாத்து வளமான சமூகத்தைக் கட்டி யெழுப்புவதே எமது எதிர்பார்ப்பு என அவர் இதன்போது கூறியுள்ளார்.

மேலும், இந்த விவாதத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களான அனந்தி சசிகரன், சிவாஜிலிங்கம் உள்ளிட்டோரும் கலந்து கொண்டு உரையாற்றியமை குறிப்பிடத்தக்கது. (த)

## 4 மாணவிகளை துஷ்பிரயோகம் செய்ய எத்தனித்த ஆசிரியர் கைது

கொழும்பு, ஒக். 03

மஸ்கெலியா பிரதேசத்திலுள்ள தோட்டப் பாடசாலையொன்றில் பத்தாம் வகுப்பில் கல்வி பயிலும் நான்கு மாணவிகளைத் துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்த அந்தப் பாடசாலையின் ஆசிரியர் ஒருவர் மஸ்கெலியா பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த மாணவிகள் ஆசிரியரின் வீட்டுக்குப் பிரத்தியேக வகுப்புக்குச் சென்றபோதே அவர் இவ்வாறு நடக்க முயற்சித்துள்ளார் என அந்த மாணவிகளின் பெற்றோர் மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டையடுத்தே சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் நோர்வூட் பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும், அவரை ஹற்றன் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், மாணவிகள் நால்வரையும் டிக்கோயா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரியின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தவுள்ளதாகவும் மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்தனர். (த)

## ஜெனிவா விவகாரத்தில் இலங்கை சர்வதேசத்திடம் மண்டியிடவில்லை

### பிரதமர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 03

ஜெனிவா விவகாரத்தில் சர்வதேசத்திடம் இலங்கை மண்டியிடவில்லை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்களிடமே அடிபணிய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே பிரதமர் இவ்வாறு கூறியுள்ளார்.

ஜெனிவா மாநாட்டை அடுத்து சாதகமான சூழல் ஏற்பட்டுள்ள நிலையில் கடந்த காலத்தில் இழக்கப்பட்ட ஜி.



எஸ்.பி. வரிச்சலுகை மீளப் பெற்றுக் கொள்ளப்படும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை– காணாமற்போனார் தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுக்க விசேட ஆணைக்குழுவொன்று அமைக்கப்படும் என்றும், அதற்கேற்ப சட் [illegible] கம் ஒன்றும் விரைவில் [illegible] படும் என்றும் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க மேலும் கூறியுள்ளார். (த)

## வடக்கு-கிழக்கிலிருந்து இராணுவம் உடன் வெளியேற்றப்படவேண்டும்

### ஜெனிவாவில் சுரேஷ் வலியுறுத்து

ஜெனிவா, ஒக். 03

வடக்கு – கிழக்கில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் உடன் வெளியேற்றப்பட வேண்டும். சிங்களக் குடியேற்றங்கள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

–இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களில் ஒருவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் ஜெனிவாவில் வைத்து வலியுறுத்தியுள்ளார்.

ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் மாநாட்டுக்கு சார்பாக நடைபெற்ற கூட்டங்களில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இராணுவத்தையும், சிங்களக் குடியேற்றத்தையும் வடக்கு மற்றும் கிழக்கில் ஆயுதமாகப் பயன்படுத்தி வரும் அரசு தமிழ்த் தேசியத்தைச் சிதைவடையச்செய்து வருவதாகவும் குற்றஞ்சுமத்தியுள்ளார்.

உடனடியாக இவ்விரு நடவடிக்கைகளும் நிறுத்தப்படவேண்டும் என்றும், ஐ.நா. கண்காணிப்பு அலுவலகங்கள் வடக்கு மற்றும் கிழக்கில் நிறுவப்படவேண்டும் என்றும், அவையே சர்வதேச பங்களிப்புடனான உள்ளக விசாரணைக்கு நல்ல சமிக்ஞைகளாக அ[illegible] என்றும் அவர் குறிப்பிட்டுள்ள[illegible]

இவை தவிர இறுதிப்போரின் [illegible] பெரும் எண்ணிக்கையிலான [illegible] மக்கள் கொல்லப்பட்டமை[illegible] சர்வதேசம் விளங்கி, அவர்[illegible] உணர்வுகளுக்கு மதிப்பளிக்க[illegible]டும் என்றும் அவர் வலி[illegible]யுள்ளார்.

காணாமற்போனவர்கள் [illegible] பான விசாரணைகள் மற்று[illegible] குடியேறியுள்ள மக்களின் [illegible] வாதார மேம்பாடுகள் என்[illegible] னிக்கப்படவேண்டிய விட[illegible] என்றும் அவர் சுட்டிக்கா[illegible] ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய மோதல்கள்

**பண்டாரவன்னியன் கிண்ணத்தொடர்**

யாழ்ப்பாணம், ஒக். 3

வவுனியா லீக்கின் முதற்தர அணிகளுக்கு இடையில் நடத்தப்பட்டு வரும் பண்டரவன்னியன் கிண்ணத்துக்கான 7 வீரர்கள் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா நகரசபை மைதானதில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத்தொடரில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் அரையிறுதி ஆட்டமொன்றில் மருதநிலா அணியை எதிர்த்து ஈகிள்ஸ் அணி மோதவுள்ளது.

**மன்னார் உதைபந்தாட்ட லீக்கின் தொடர்**

மன்னார் உதைபந்தாட்ட லீக்கினால் அழைக்கப்பட்ட அணிகளுக்கு இடையில் நடத்தப்பட்டு வரும் லீக் முறையிலான உதை பந்தாட்டத் தொடரில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் விடத்தல் தீவு ஐக்கிய அணியை எதிர்த்து மன்னார் சின்னக்கடை கிறின் பீல்ட் அணி விடத்தல் தீவு பொது மைதானத்தில் மோதவுள்ளது.

**பிரண்ட்ஸ் வி.கழகத் தொடர்**

வவுனியா பிரண்ட்ஸ் விளையாட்டுக் கழகத்தின் 7ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குறித்த கழகத்தினால் வடமாகாண ரீதியில் நடத்தப்பட்டுவரும் ரி–20 தொடரின் அரையிறுதியாட்டம் ஒன்று இன்று சனிக்கிழமை வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இந்த அரையிறுதியாட்டத்தில் வடதாரகை அணியை எதிர்த்து பிரண்ட்ஸ் அணி மோதவுள்ளது.

**ஏ.எல். வி.கழகத் தொடர்**

அராலி ஏ.எல். விளையாட்டுக் கழகமும், அராலி ஏ.எல். இளைஞர் கழகமும் இணைந்து யாழ்., வலிகாமம், வடமராட்சி, பருத்தித்துறை மற்றும் தீவகம் ஆகிய உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் துணைவி நியூஸ்ரார் அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி அணி மோதவுள்ளது. (ம–23)

**மைக்கல் வி.கழக தொடர்**

மாலு சந்தி மைக்கல் வி.கழகத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்திலேயே இடம்பெற்று வருகின்றன. இந்தத்தொடரில் இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணியை எதிர்த்து பலாலி விண்மீன் அணி மோதவுள்ளது. (ம–422)

***வானவில் வி.கழகத் தொடர்***

அராலி வானவில் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறிந்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்.தோமஸ் அணியை எதிர்த்து சென்.பீற்றர்ஸ் அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பாஷையூர் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து மூளாய் வளர்மதி அணி மோதவுள்ளது. (ம–23)

# மத்தியிடம் வீழ்ந்தது இந்து

## பாடசாலைகளுக்கிடையிலான ரி-20 தொடரில்





யாழ்ப்பாணம், ஒக். 3

யாழ். மாவட்ட பாடசாலைகளின் துடுப்பாட்டச் சங்கத்தினால் நடத்தப்பட்டுவரும் 19 வயதுக்கு உட்பட்ட அணிகளுக்கிடையிலான ரி–20 தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டமொன்றில் யாழ். இந்துக் கல்லூரியை 46 ஓட்டங்களால் வீழ்த்தியது யாழ்.மத்திய கல்லூரி.

யாழ். மத்திய கல்லூரியின் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி 17.2 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 127 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக டினோசன் 33 ஓட்டங்களையும், கௌதமன் 23 ஓட்டங்களையும் பிரியலக்சன் 13 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் யாழ். இந்துக்கல்லூரி அணி சார்பில் சந்துரு 3 இலக்குகளையும் துவாரகன், சிவலக்சன் இருவரும் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர்.

128 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற எட்டக்கூடிய இலக்குடன் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ். இந்துக் கல்லூரி அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 81 ஓட்டங்களை மட்டுமே பெற்று 46 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பந்து வீச்சில் யாழ். மத்திய கல்லூரி அணி சார்பில் ஸ்ரிபன்ராஜ் 3 இலக்குகளையும் கௌதமன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர். (ம–23)

## அறிவிக்கப்பட்டது முரளி கிண்ணத்துக்கான கிளி., முல்லை. இணைந்த அணி

யாழ்ப்பாணம், ஒக். 3

நடப்பு வருடத்துக்கான முரளி கிண்ணத்தொடர் எதிர்வரும் 7 ஆம் திகதி தொடக்கம் 11ஆம் திகதி வரை இடம்பெறவுள்ள நிலையில் குறித்த தொடரில் பங்குபற்றவுள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட இணைந்த அணி வீரர்களின் பெயர் விவரங்கள் வெளிடப்பட்டுள்ளன.

வீரர்களின் விவரங்கள் வருமாறு: – ரஜீவன் (தலைவர் – கிளிநொச்சி மகா வித்தியாலயம்), தனுசன் (கிளிநொச்சி மகா வித்தியாலயம்), நிதுர்சன் (கிளிநொச்சி மகா வித்தியாலயம்), பொபிசன் (கிளிநொச்சி மகா வித்தியாலயம்), பிரணவன் (முழங்காவில் மகா வித்தியாலயம்), தனப்பிரியன் (கிளிநொச்சி மத்திய கல்லூரி), தோமஸ் சாள்ஸ் (கிளிநொச்சி மத்திய கல்லூரி), சயந்தன் (புதுகுடியிருப்பு மத்திய கல்லூரி), வினோசன் (வித்தியானந்தாக் கல்லூரி) அஞ்சேயன் (வித்தியானந்தாக் கல்லூரி) அருண் (வித்தியானந்தாக் கல்லூரி), சஜீவன் (பூநகரி விக்னேஸ்வரா வித்தியாலயம்), டிக்சன் (தர்மபுரம் மத்திய கல்லூரி) டானியல், (தர்மபுரம் மத்திய கல்லூரி), பார்த்தீபன் (கிளிநொச்சி இந்துக்கல்லூரி). (ம–23)

## ஈகிள்ஸ் இலகுவெற்றி

யாழ்ப்பாணம், ஒக். 3

வவுனியா லீக்கின் முதற் தர அணிகளுக்கு இடையில் நடத்தப் பட்டு வரும் பண்டாரவன்னியன் கிண்ணத்துக்கான 7 வீரர்கள் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா நகரசபை மைதானதில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் அல்ஹிஜிரா அணியை எதிர்த்து ஈகிள்ஸ் அணி மோதிக் கொண்டது. இதில் ஈகிள்ஸ் அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம–23)

## ஆட்டம் சமநிலை



வலி. வடக்கு, ஒக். 3

யாழ். மாவட்டப் பாடசாலைகளின் கிரிக்கெட் சங்கம் யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 13 வயதுக்கு உட்பட்ட அணிகளுக்கிடையே நடத்திவரும் துடுப்பாட்டத் தொடரில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் மோதிய ஆட்டம் சமநிலையில் நிறைவடைந்துள்ளது.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி அனைத்து இலக்குகளையும் இழந்து 152 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ஜதுசன் 58 ஓட்டங்களையும் ஜான்சன் 54 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி சார்பில் அஜிவன், கௌசியன், டான்சன், டனிசியன் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி நிர்ணயிக்கப்பட்ட நாள் முடிவில் 6 இலக்குகளை இழந்து 93 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக டனிசியன் 33 ஓட்டங்களையும் கௌசிகன் 17 ஓட்டங் களையும் பெற்றனர். பந்து வீச்சில் மகாஜனக் கல்லூரி சார்பில் சஜந்தன் 2 இலக்குகளையும் தனிஸ்டன், கிசாந்தன் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள். (ம–86)

## ரி–20 ஆட்டங்கள்

யாழ். மாவட்ட பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் 19 வயதுக்குட்பட்ட அணிகளுக்கிடையே நடத்திவரும் ரி–20 தொடரில் இன்று யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் காலை 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து யாழ். இந்துக்கல்லூரி அணி மோதவுள்ளது. பிற்பகல் 1.30 மணிக்கு ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி மோதவுள்ளது.

## திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக். 3

மன்னார் மாவட்டத்தில் புதிதாக அமைக்கப்பட்ட உள்ளக விளையாட்டரங்கு இன்று மு.ப. 11 மணியளவில் வடமாகாண முதலைச்சர் க.வி. விக்னேஸ்வரனால் திறந்து வைக்கப்படவுள்ளது.

குறித்த விளையாட்டரங்கின் ஆரம்ப மற்றும் சிறப்பு ஆட்டமாக யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட அணியை எதிர்த்து மன்னார் மாவட்ட கரப் பந்தாட்ட அணி மோதவுள்ளது. (ம–23)

## இடம் மாற்றப்பட்டது மாட்டு வண்டிச் சாவாரி

யாழ்ப்பாணம், ஒக். 3

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவகள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் அனுசரனையுடன் மன்னார் மாவட்ட செயலகமும் மன்னார் மாட்டு வண்டிச் சாவாரி சங்கமும் இணைந்து நடத்தத்திட்ட மிட்டிருந்த சவாரிப் போட்டி தவிர்க்க் முடியாத காரணத்தினால் வேறு இடத்தில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இன்று மதியம் ஒரு மணிக்கு மன்னார் கறுக்காய்க் குளம் மாட்டு வண்டிச் சவாரித்திடலில் நடத்த தீர்மானிக்கப்பட்ட குறித்த போட்டி மன்னார் பறப்பாங்கண்டல் மாட்டு வண்டிச் சவாரித் திடலில் இடம்பெறும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவிந்திரன் தெரிவித்துள்ளார். (ம–23)

## கலைமகள் ஏ, பாரதி அணிகள் அரையிறுதி ஆட்டங்களுக்கு தகுதி

யாழ்ப்பாணம், ஒக். 3

அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 8ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குறித்த கழகத்தினால் யாழ். மாவட்ட [illegible] நடத்தப்பட்டுவரும் மின்னொளியி[illegible]லான கரப்பந்தாட்டத் தொடரின் காலிறுதி ஆட்டங்களில் அச்சுவேலி கலைமகள் ஏ அணி, நாயன்மார் கட்டு பாரதி அணி என்பன வெற்றி பெற்று அரையிறுதி ஆட்டங்களுக்குத் தகுதி பெற்றன.

இந்தத் [illegible] [illegible] இடம்பெற்ற காலி றுதியாட்டங்களில் முதலில் இடம பெற்ற ஆட்டத்தில் புத்தூர் தமிழ்மதி அணியை எதிர்த்து அச்சுவேலி கலைமகள் 'ஏ' அணி மோதிக் கொண்டது.

இதில் அச்சுவேலி கலைமகள் 'ஏ' அணி 2:1 என்ற செற்கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது காலிறுதியாட்டத்தில் அச்சுவேலி கலைமகள் 'பி' அணியை எதிர்த்து நாயன்மார்கட்டு பாரதி அணி மோதிக் கொண்டது.

இதில் நாயன்மார்கட்டு பாரதி அணி 2:1 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ம–23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இமாலய இலக்கை நிர்ணயித்தது இந்தியா இலகுவாக விரட்டியடித்தது தென்னாபிரிக்கா



இந்தியா தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான மூன்று ரி–20 ஆட்டங்களைக் கொண்ட தொடரில், நேற்று நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் இந்தியாவை 7 இலக்குகளால் வீழ்த்தி தொடரில் 1:0 என்ற அடிப்படையில் முன்னிலை வகிக்கிறது தென்னாபிரிக்கா.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க தலைவர் பிளாசிஸ் முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்ய ஆரம்ப வீரர்களாக தவான் மற்றும் ரோகித் சர்மா. மூன்றே ஓட்டத்துடன் ரண்அவுட் ஆனார் தவான். இந்தியாவின் ஆரம்பம் சிறிது சொதப்பியது. இணைந்தார் கோக்லி இலக்குச் சரிவு என்ற பேச்சுக்கே இடமில்லை என்பதைப்போல் இணைப்பாட்டம் கச்சிதமானது. சுமாரான சராசரியில் ஆடிக்கொண்டிருந்த ரோகித் அதிரடியாக விளாசத் தொடங்கினார். விடுவதாக இல்லை கோக்லியும். 6ஆவது பந்துப்பரிமாற்றத்தில் 50 ஓட்டங்களை எட்டியது இந்தியா. அடிக்கொருதடவை பந்து பவிலியன்வரை சென்று வந்தது. ஓட்டங்கள் கிடுகிடு வேகத்தில் ஓடிக்கொண்டே இருந்தன. அரைச்சதம் கடந்தார் ரோகித். தாகிரின் ஒரு பந்துப் பரிமாற்றத்திலேயே மூன்று சிக்சர்களை விளாசினார் கோக்லி. எதிர்பார்க்கப்பட்டதைப் போல் தாகிரின் பந்து வீச்சு இல்லை. சதம் கடந்தார் ரோகித். மறுமுனையில் ஆயிரமாவது சர்வதேச ரி–20 ஓட்டங்களைப் பூர்த்தி செய்தார் கோக்லி. ரோகித் 106 ஓட்டங்களுடனும் கோக்லி 43 ஓட்டங்களுடனும் அப்பொட் வீசிய 16ஆவது பந்துப் பரிமாற்றத்தில் வீழ்ந்தனர். ரெய்னாவும் டோனியும் இறுதிக்கட்ட வாணவேடிக்கைகள் காட்ட முடிவில் இந்தியா 199–5.

20 பந்துப்பரிமாற்றங்களில் 200 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய தென்னாபிரிக்காவுக்கு ஆரம்ப வீரர்களான வில்லியர்ஸும் அம்லாவும் இந்தியாவை விட சிறந்த தொடக்கத்தையே கொடுத்தனர். மிஸ்டர் 360 என்ற புனைபெயருக்கு ஏற்றவாறு வில்லியல்ஸ் மைதானத்தின் அத்தனை திசைகளிலும் நொறுக்கினார். நாலாவது பந்துப்பரிமாற்றத்தில் ஐம்பது ஓட்டங்களை எட்டியது தென்னாபிரிக்கா. அஸ்வினின் சுழலில் சிறிது தடுமாற்றம் இருக்கவே செய்தது. 51 ஓட்டங்களுடன் அஸ்வினிடம் போல்ட்டானார் வில்லியர்ஸ். ரண்அவுட் ஆனார் அம்லா. பிளாஸிஸ் நிலைக்கவில்லை. இறுதி ஏழு பந்துப் பரிமாற்றங்களில் 85 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற நிலைமை. சுழல், வேகம் என்று அத்தனை பந்து வீச்சாளர்களையும் எதிர்த்து சீரான இடைவெளியில் ஐந்து சிக்சர்களை விளாசினார் டுமினி. ஆட்டத்தின் போக்கு அப்படியே மாறியது. இறுதிப்பந்துப் பரிமாற்றத்தில் 10 ஓட்டங்கள் பெறப்படவேண்டும் என்ற நிலைமையில் அரவிந்திடம் வாய்ப்பை வழங்கினார் டோனி. ஆட்டத்தை தமக்குச் சாதகமாக எழுதினார் டுமினி. (ம)



## சரிதாதேவியின் தடைக்காலம் நேற்றுடன் முடிவுக்கு வந்தது

இந்திய குத்துச்சண்டை வீராங்கனையான சரிதாதேவிக்கு விதிக்கப்பட்ட ஓராண்டு தடை நேற்றுடன் நிறைவுக்கு வந்தது.

கடந்த வருடம் கொரியாவில் நடைபெற்ற ஆசிய விளையாட்டு விழாவில் நடுவர்கள் பக்கச்சார்பாக செயற்பட்டு தன்னைத் தோற்கடித்துவிட்டனர் என்று தெரிவித்து தனக்குக் கிடைத்த வெண்கலப்பதக்கத்தை (வெள்ளிப் பதக்கமே கிடைத்திருக்க வேண்டும் என்று தெரிவித்து) ஏற்க மறுத்து சர்ச்சையை ஏற்படுத்தினார் சரிதா. பின்னர் அவர் பகிரங்க மன்னிப்பு கேட்டிருந்தும் சர்வதேச குத்துச்சண்டைச் சம்மேளனம் அவருக்கு ஒரு வருடம் தடை விதித்து தீர்ப்பு வழங்கியது. இந்த நிலையில் அவர் மீதான தடைக்காலம் நேற்றுடன் நிறைவுக்கு வந்தது. அடுத்த வருடம் ஒலிம்பிக் தொடரில் சரிதா இந்தியாவைப் பிரதிநிதித்துவம் செய்தால் குறைந்த பட்சம் வெண்கலப் பதக்கம் கிடைக்கலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. (ம)

## என்னைவிட கோக்லி சிறப்பாக செயற்படுவார் - கங்குலி

இந்திய அணியின் டெஸ்ட் தலைவராக உள்ள கோக்லி தனது அனைத்து விதமான சாதனைகளையும் முறியடிப்பார் என்று தெரிவித்துள்ளார் இந்திய அணியின் இரண்டாவது வெற்றித் தலைவரான கங்குலி.



கோக்லி தொடர்பாக கங்குலி தெரிவித்ததாவது – நான் கோக்லியின் மிகப் பெரிய ரசிகன். தலைமைத்துவத்தில் அவரது இந்த ஆக்ரோசத்தை நான் விரும்புகிறேன். தலைமைத் துவத்தில் சில சமயம் தோற்கலாம். சில சமயம் வெற்றி பெறலாம். என்னை விட சிறந்த தலைவராக வீராட் கோக்லி உருவாக வேண்டும் என்று விரும்புகிறேன். நிச்சயம் அவ்விதம் உருவாகுவார் என்ற நம்பிக்கையும் உள்ளது. ஆஸ்திரேலியா, இங்கி லாந்து, தென்னாபிரிக்கா போன்ற நாடுகளில் விளையாடுவது அவரது தமைத்துவத்துக்கு முக்கிய சவாலாக இருக்கும் என்றார். (ம)



## மட்டையிலும் பந்திலும் மனிதத்தை இழக்கக்கூடாது -கப்டன் கூல் அட்வைஸ்

ஆக்ரோசமாக விளையாடலாம். ஆனால், அந்த ஆக்ரோசம் தவறான நடத்தைக்குக் கொண்டு சென்று விடக்கூடாது என்று கருத்துத் தெரிவித்துள்ளார் டோனி.

இந்திய டெஸ்ட் அணித்தலைவர் கோக்லி, இயக்குநர் ரவி சாஸ்திரி, இந்திய அணியின் வீரர்கள் எனப் பலரும் ஆக்ரோசம் தொடர்பாக எதிர் மாறான கருத்துத் தெரிவித்துள்ள நிலையில், தென்னாபிரிக்காவுக்கு எதிரான ரி–20 தொடர் ஆரம்பமாகும் முன்னதாக ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து டோனி ஆக்ரோசம் தொடர்பாக தனது நிலைப்பாட்டைத் தெரிவித்துள்ளார்.

டோனி மேலும் தெரிவித்ததாவது– ஆக்ரோசம் என்பதற்கு சூடான வார்த்தைகளை பரிமாறிக் கொள்வதும், உடலளவில் இடித்துத்தள்ளுவதும் என்று அர்த்தம் கிடையாது. மிகச் சிறந்த வேகப்பந்து வீச்சாளர்களை திறமையாகவும் நுட்பமாகவும் எதிர்கொண்டு விளையாடுவது தான் உண்மையான ஆக்ரோசம். இதையே சச்சினும் ராவிட்டும் லக்ஸ் மனும் செய்தனர். இவ்வகையான ஆக்ரோசத்தைத் தான் நான் எதிர்பார்க்கிறேன். இலங்கைக்கு எதிரான தொடரில் காட்டிய ஆக்ரோசத்தை முற்றிலும் நிராகரிக்கிறேன். எந்தவொரு இடத்திலும் நாங்கள் ஒழுங்கின்மை நடவடிக்கைக்கு ஆளாகும் அளவுக்குச் செயல்பட வில்லை என்பதை உறுதி செய்ய வேண்டும். மட்டையிலும் பந்திலும் மனிதத்தை இழக்கக் கூடாது–என்றார்.

## பங்களாதேஷ்- ஆஸி. டெஸ்ட் தொடர் பாதுகாப்பின்மையால் பிற்போடப்பட்டது

பங்களாதேஷில் உள்ள பாதுகாப்புப் பிரச்சினை காரணமாக ஆஸ்திரேலியா – பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடர் பிற்போடப்பட்டுள்ளதாக ஆஸ்திரேலியா கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தெரிவித்துள்ளது.

இந்த மாதம் 9ஆம் திகதி குறித்த நாடுகளுக்கிடையிலான டெஸ்ட் தொடர் நடைபெற இருந்தது. ஆனால் பங்களாதேஷில் வைத்து ஆஸ்திரேலிய அணி மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருப்பதாக ஆஸ்திரேலிய உளவுத்துறை எச்சரித்தது. இதனால் பங்களாதேஷில் உள்ள பாதுகாப்பு நிலைமைகள் குறித்து பரிசீலனை செய்யப்பட்டு வந்தது. இந்த நிலையில் குறித்த தொடர் திகதி குறிப்பிடப்படாமல் பிற்போடப்பட்டுள்ளது. (ம)



## தாகிர் எதிர் இந்தியா; சொல்கிறார் பிளாசி

இந்திய அணியை வீழ்த்த தாகிரை வைத்தே அதிகமான வியூகங்களை வகுத்திருப்பதாக தென்னாபிரிக்க ரி–20 அணித் தலைவர் பிளாசிஸ் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு எதிரான தொடர் தொடர்பாக பிளாசில் தெரிவித்ததாவது – இந்திய ஆடுகளம், மேலெழும்பலுடன் கூடிய வேகப்பந்து வீச்சுக்கு ஏற்ற ஆடுகளம் போல் தெரிகிறது. இதைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்வதில் ஆர்வமாக இருக்கிறோம். கடந்த நாள்களில் வெயில் அடித்ததால் ஆடுகளம் உலர்ந்து இருக்கும், இதனால் நிறைய ஓட்டங்கள் குவிக்க முடியும் என்று நம்புகிறோம். வெற்றிதேடித்தரக்கூடிய தரமான சுழற்பந்து வீச்சாளர்கள் எங்களிடம் இருக்கிறார்கள் என்பதை இந்தியா அறியும். சிறந்த சுழற்பந்து வீச்சாளர் என்பதை இம்ரான் தாகிர் நிரூபித்து இருக்கிறார். சுழலை பலமாக கொண்ட இந்தியாவை சுழலாலேயே வீழ்த்த முடியும். தாகிர் தனித்து நின்று ஆட்டத்தின் போக்கை மாற்றும் வல்லமை படைத்தவர். அவரை வைத்தே இந்தியாவுக்கு எதிராக அதிகமான வியூகங்கள் வகுக்கப்பட்டுள்ளன. என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்.அன்ரனிஸிடம் தங்கம்

யாழ்ப்பாணம், ஒக். 3

வியாங்கொடைதேசியகல்வியியற் கல்லூரியில் இடம்பெற்ற தேசிய மட்ட 9 வயதுப்பிரிவு ஆண்களுக் கான உடற்பயிற்சிப் போட்டியில் ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் கல்லூரி அணி தங்கப்பதக்கத்தைக் கைப் பற்றியுள்ளது.

இளவாலை சென்.ஹென்றிஸ் கல் லூரி அணி வெள்ளிப் பதக்கத்தை யும் பொலனறுவை சென்.சேவியர் கல்லூரிவெண்கலப்பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளன.

(ம-23)



மேற்கிந்தியத் தீவுகளின் தலைமைப் பயிற்சியாளர் தீவுகளின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையினால் பதவி நீக்கப்பட்டதையடுத்து இலங்கை வந்த தீவுகளின் அணியோடு அந்த அணியின் துணைப்பயிற்சியாளர் அம்புரோஸ்வந்திருந்தார்.இவர்தான் இதுவரைசர்வதேசடெஸ்ட்கிரிக்கெட் டைப்பார்த்தவீரர்களிலேயேமிகவும் உயரமானவர் என்பது குறிப்பிடத்தக் கது. (ம)


A/L 2016 Day Classes

பௌதிகவியல்

பிரிவு II

(திங்கள் - வெள்ளி)

R.குகன்

ஆரம்பம் :- 05.10.2015 திங்கள்

11.30 am-1.30 pm

NEW SCIENCE WORLD

Navalar Road -Brown Road Junction. Jaffna.




தனது உதைபந்தாட்ட வாழ்வில் 500 ஆவது கோலை விளாசி புதிய சாதனை படைத்துள்ளார் போர்த்துக்கல் அணியின் தலைவரும் ரியல் மட்ரிட் அணியின்நட்சத்திரவீரருமானரொனால்டோ. மட்டுமல்லாது ரியல் மாட்ரிட் கழகத்தில் அதிக கோல்கள் அடித்த ரவுலை (323 கோல்கள்) ரொனால்டோ சமன் செய்தார்.

ரொனால்டோவுக்கு போட்டியாகக் கருதப்படும் ஆர்ஜென்ரீனா அணியின் தலைவரும் பார்சிலோனாகழகத்தின்நட்சத்திர வீரருமானமெஸ்ஸி காயம்காரணமாகஓய்வில்இருந்துவருவதாலும் மெஸ்ஸியை விட ரொனால்டோ அடித்த கோல்கள் அதிகம் என்ற காரணத்தினாலும் நடப்பு வருடத்தின் சிறந்த வீரராக ரொனால்டோ மீண்டும் தெரிவு செய்யப்படுவதற்கான வாய்ப்புக்களும் அதிகமாகியுள்ளன. (ம)


அதிபர் சேவை தரம் - 3

விசேட இறுதிக்கருத்தரங்கு

* பொது உளச்சார்பும், பொது அறிவும்
* கிரகித்தல்
* விடய ஆய்வு

மாதிரி வினாத்தாள்களுடன்.

பிரிவு I : இன்றும், நாளையும் - 9.00 - 4.00

பிரிவு II :ஒவ்வொரு நாளும் - 5.00 - 7.00(மா)

பரீட்சை அமைப்பிற்கேற்ப ஏற்கனவே வகுப்புக்கள் நடைபெற்ற ஒரே இடம்.

T.P - 0766883394

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு

(யாழ்.ஆஸ்பத்திரி, கொமர்சல் வங்கியருகில்)

(85108)(11.15.17)


## நியூஸிலாந்தின் ரி-20 தொடரில் களமிறங்குகிறார் ஜெயவர்தன

ஐ.பி.எல். தொடரைப் பின்பற்றி தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகள், பங்களாதேஷ், ஆஸ்திரேலியா, இலங்கை, பாகிஸ்தான் ஆகிய நாடுகளும் தமது நாட்டுக்குள் பல்வேறு அணிகளை அறிவித்து ரி-20 தொடர்களை நடத்தி வந்தன. இந்த வரிசையில் தற்பொழுது இணைந்துள்ளது நியூஸிலாந்து. நியூஸிலாந்தின் ரி-20 தொடரில்மகேலஜயவர்தனவும்விளையாடவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அடுத்த மாதம் 5ஆம் திகதி முதல் டிசம்பர் 13ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்தத் தொடரில் குப்தில் களமிறங்கும் அணியில் ஜெயவர்தனவும் களமிறங்குகிறார். பெரும்பாலும் அவர் குப்திலுடன் ஆரம்ப வீரராக களமிறங்குவதற்கான வாய்ப்புக்களும் அதிகம். (ம)



## தகுதி பெற்றார் கிவித்தோவா

### முன்னணி வீராங்கனைகளின் தொடருக்காக



நடப்பு வருடத்தின் இறுதிப்பகுதியில் நடைபெறவுள்ள முன்னணி வீராங்கனைகள் மட்டும் பங்கேற்கும் ரென்னிஸ் தொடருக்கு 4ஆவது வீராங்கனையாக தகுதி பெற்றுள்ளார் பெட்ரா கிவித்தோவா.

தரப்படுத்தலில் முதல் எட்டு இடங்களிலும் உள்ள வீராங்கனைகளுக்கு மட்டும் வருட இறுதியில் தொடர் நடத்தப்படும். இந்தத் தொடருக்காக செரினா வில்லியம்ஸ், செரபோவா, கெலப் மூவரும் ஏற்கனவே தகுதிபெற்றிருந்தனர். இந்த வரிசையில் தற்பொழுது இணைந்துள்ளார் கிவித்தோவா. ஏனைய நான்கு இடங்களுக்கும் லூசி சபரோவா, பிளாவியா பென்னட்டா, அக்னிஸ்கா ரட்வன்ஸ்கா, கப்ரீன் முருகுசா, அனா இவானோவிச், கர்லா நவரோ ஆகிய ஆறு வீராங்கனைகளிடையே கடும்போட்டி நிலவுகிறது. (ம)


ஆசிரியர் வே. அன்பழகன் அவர்களின்

தரம் - 5புலமைப்பரிசில் பரீட்சை - 2016

வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

| | |
|---|---|
| யாழ்ப்பாணத்தில் | சாவகச்சேரியில் |
| அன்பொளி கல்வியகம் | அன்பொளி கல்வி நிலையம் |
| யாழ். இந்துக்கல்லூரி வீதி, | தபாற்கந்தோர் வீதி, |
| யாழ்ப்பாணம். | சாவகச்சேரி |

அனுமதிகளை 28.09.2015 திங்கட்கிழமையிலிருந்து 05.10.2015 திங்கட்கிழமை வரை பிற்பகல் 3.00 மணி தொடக்கம் மாலை 5.30 மணிக்குள் முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

குறிப்பு:- பெற்றோர் கலந்துரையாடலுடன் வகுப்புக்கள் ஆரம்பிப்பது பற்றிய மேலதிக விவரங்கள், நேர அட்டவணை நேரில் வழங்கப்படும்.

சின்ன விழி அசைத்து சிரித்துவரும் சித்திரங்களை அள்ளி அணைத்து அரிய கல்வியினை மகிழ்வுடனே ஊட்டிடுவோம். இயக்குநர்கள்.



நியூ லலிதாஸ் ஜுவலறி யின்

மாதாந்த சீட்டிழுப்பில்

குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்ட வாடிக்கையாளர்களின் விவரம்

1. க.சசிகுமார்
   தீபிகன் புடைவையகம்
   பளை நகரம், பளை.
2. க. செல்லையா
   484, அக்கராயன்குளம், கிளிநொச்சி.
3. பொ.நிறஞ்சன்
   புலோப்பளை மேற்கு, பளை.

மேற்குறிப்பிட்ட வாடிக்கையாளர்கள் விற்பனைச் சிட்டையுடன் வருகை தந்து பரிசினைப் பெற்றுச் செல்லுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நியூ லலிதாஸ் ஜுவலறி

இல.30.32 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பேசி: 021 222 5511

(C/19143)(10.15.17)


**மரண அறிவித்தல்**

**நாகேசு சிவசோதி** (வாரிவளவு காரைநகர்)

காரைநகர் வாரிவளவைச் சேர்ந்த நாகேசு சிவசோதி நேற்று (02.10.2015) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் காரைநகர் எஸ்.எம்.கேணியடி, மல்லிகை யில் உள்ள இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

எஸ்.எம்.கேணியடி, மல்லிகை, காரைநகர். | தகவல் : மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.10.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.